# சதாயுஷ்ய மலர்



250.98
சண்மு
SL/PR

பா. சண்முகரத்தின சர்மா

2 - 5 - 1996

சௌ. ராஜலக்ஷ்மி தம்பதிகள்

# நிகழ்ச்சி நிரல்

1ம் நாள் 01-05-1996 புதன்கிழமை

**காலை**

கணபதி ஹோமம்

ருத்ர ஏகாதசி ஹோமம்

**மாலை**

கலசஸ்தாபனம்

பூஜை, ஹோமம்

2ம் நாள் 02-05-1996 வியாழக்கிழமை

*காலை 6.00 மணி*

பூஜை, நவக்ரஹ ஹோமம், மிருத்யுஞ்ச ஹோமம்.

ஆயுஷ் ஹோமம்.

*8.30 மணி*

பூர்ணாஹுதி

*9.00 மணி*

கலச அபிஷேகம்

*9.30 தொடக்கம்- 10.00 மணி*

திருமாங்கல்ய தாரணம்

அதனைத் தொடர்ந்து சுமங்கலிகள் பூஜையும், தம்பதிகள் பூஜையும் நடைபெறும்.

**'சதாயுஷ்ய மலர்'** வெளியீடு

அதனைத் தொடர்ந்து இவ்விழாவில் இலங்கையின் தலைசிறந்த நாதஸ்வர, தவில், வித்துவான்களின் கச்சேரியும் இடம்பெறும்.

*மாலை நிகழ்ச்சிகள் 4.00 மணிமுதல்*

1. மங்கள இசை
2. விசேடமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள மதுரை கலை மாமணி **T. N.** சேஷ கோபாலன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| பாட்டு | – | T.N. சேஷகோபாலன் |
| வயலின் | – | ஸ்ரீகுமார் கிருஷ்ணமூர்த்தி |
| மிருதங்கம் | – | R. நாராயணன். |
| கெஞ்சிரா | – | A. சந்தான கிருஷ்ணன். |

# செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

R. SIVAGURUNATHAN, 
Attorney - at - Law
Justice of the Peace (All Island)
23, Moor Road, Wellwatte,
COLOMBO - 6.

இருக்கோல மிட்டினும் அறியாத நின்தாள்
இறைஞ்சாது தபு மாந்தருக்கு
இறுதியிற் கட்கடை நெருப்புகச் சீறிவரும்
இயமன் தருக்கு ஓதையும்

உருக்கோல மேவச்சிரக் கவசமாகமை
யுண்ட விழிவாளி புருவம்
ஒருதனு எனக்கொண்ட சேனைகள் நிறைத்தமர்
உழக்குமதன் வென்றி முரசம்

கருக்கோடி கோடியுற்று உழல்புறச் சமயக்
கருத்தினர் உரைக்கு மொழியும்
காதுறா வண்ணம் அமிழ்தம் சொரிவ தேய்ப்ப
கறங்க அடியார்கள் உள்ளத்

திருக்கோயில் மேவிவிளையா டுமிள மதகளிறு
சிறுபறை முழக்கி யருளே
தென்கோ விருந்த நகர் உற்பல விநாயகன்
சிறுபறை முழக்கியருளே."

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
R. சிவகுருநாதன்
அவர்கள் நன்கொடையாக அளித்தது.
திகதி:-

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

24123

மலர் தொகுப்பாசிரியர் :-

வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன். ஜே.பி.



ஸ்ரீ பாலசெல்வ விநாயகர்

நூலகம்



ஸ்ரீ மகாலக்ஷ்மி

பத்மாநநே பத்ம ஊரு பத்மாக்ஷீ பத்ம ஸம்பவே । த்வம் மாம் பஜஸ்வ பத்மாக்ஷீ யேந ஸௌக்யம் லபாம்யஹம் ॥
ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய ஸாஹினே நமோ வயம் வைச்ரவணாய குர்மஹே । ஸமே காமன் காம காமாய
மஹ்யம் காமேச்வரோ வைச்ரவணோததாது ॥ குபேராய வைச்ரவணாய மஹாராஜாய நம:
ஹிரண்யவர்ணாம் ஹரிண்ம் ஸுவர்ண ரஜதஸ்ரஜாம் சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ ம ஆவஹ ॥


சங்கநிதி
பதுமநிதி




ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
ஜகத்குரு ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



இணை பிரியா இணை

ஸ்ரீ சண்முக ரத்தினசர்மா ஸ்ரீமதி இராஜலக்ஷ்மி

# குருபாதம்

1. தோரணவாயில் – வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஜே.பி.

## வாழ்த்து மலர்

2. ஆன்மிகர்களின் ஆசியுரைகள்
3. அறிஞர்களின் பாராட்டுரைகள்
4. கலைஞர்களின் போற்றியுரைகள்

## கவிமலர்

5. எண்பது அகவை பூர்த்தி குறித்த வாழ்த்துப்பா – பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம் B.A.
6. சதாயுஷ்ய புருஷர் சண்முகரத்தினசர்மா – துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்
7. மங்கல நலன் பெற்று நெடிது வாழ்க – "தேவா"
8. சதாபிஷேக வாழ்த்து – அருட்கவி 'வேலணைவேணியன்'
9. அன்பனின் சமர்ப்பணம் – க. சிவரஞ்சன்

## உரைமலர்

10. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் – வ. சிவராஜசிங்கம்
11. கனகாபிஷேக வைபவம் – காஞ்சிப் பெரியவர் உரை
12. கும்பாபிஷேகம்–பெருஞ்சாந்தி – சிவஸ்ரீ நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள்
13. பரமசிவனே சிறந்த வைத்தியன் – சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்
14. ஆலய–நகர அமைப்புக்கள் – திருவாடானை சிவஸ்ரீ. M. ஐயாமணி சிவம்
15. மறை மதித்த மருத்துவன் – K. இராஜகோபால சாஸ்திரிகள்
16. நித்ய பூஜை கிரியா விளக்கம் – ஸ்கந்த–சாம்பசிவ சிவாச்சாரியார்
17. நிழலும் – நிஜமும் – (நிழற் படத்தொகுப்பு)
18. நன்றி நினைதல்

சுபம்

உ
சிவமயம்

# தோரண வாயில்

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி.

*எப்போதகத்தும் நினைவார்க்கிடரில்லைங்*
*கைப்போதகத்தின் கழல்*

அன்புள்ளம் கொண்ட பெருமக்களே!

வணக்கம் உங்கள் அனைவரையும் இத்தோரண வாயிலின் முன்றிலில் நின்று வேதாகம மாமணி பா.சண்முகரத்தினசர்மா – சௌ இராஜலக்ஷ்மி அம்மையாரின் சதாபிஷேக நிறைவு விழாவில் இதயம் இனிக்க இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.

அதோ...... அன்றலர்ந்த ரோஜாவாய் அகமும், முகமும், புன்னகைமலர சுற்றமும், நட்பும் சூழ்ந்து அணிசெய்ய மங்கல மறையவர்கள் மறையொலி யெழுப்ப, தேவகானம் என ஏழில் கலைஞர்கள் இன்னிசை யொலிக்க, நாவலரும், பாவலரும் பல்லாண்டு இசைக்க, ஸ்ரீ பாலசெல்வ விநாயகன் தன் துதிக்கரத்தினால் கருணை மாமலர் தூவ, மங்கலத் திருநாணை மூன்றாம் முறையாகத் தன் வாழ்க்கைத் துணையின் பொற்கழுத்திற் பூட்டும் அந்த எண்பது அகவை இளைஞனைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? வாருங்கள் என்னுடன்......

அவனியிலே வரவு:-

*பாசத்தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி*
*நேசத் தளைபட்டு நிற்குமே மாசற்ற*
*காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த*
*ஓரானை வந்தென் உளத்து* (காசிக்கலம் பகம்)

நாவலர் பெருமானின் திருவடிச் சுவடு பதிந்த புண்ணிய மண்ணில், கலியுக வரதனாம் கந்தக்கடவுளின் கடைக்கண் பார்வை தழுவிடும் சொர்க்க பூமியில் நல்லை நகரினில் 1915 இராக்ஷத ஆண்டு ஐப்பசித் திங்கள் 20ம் நாள் சித்திரை விண்மீனில் வள்ளி மணாளனுக்கு வழி வழி அடிமை செய் அந்தணக் குலத்தோன்றல் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்– சாரதாம்பிகைக்கு அருந்தவப் புதல்வனாகத் தோன்றினார் திரு. சண்முகரத்தின சர்மா அவர்கள்.

## கல்வித் தகைமை :

*சுரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்*
*பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்*
*கரக நீரைக் கவிழ்த்த மதகரி*
*சரணம் நாளுக் தலைக்கணி யாக்குவாம்* (பிரபுலிங்கலீலை)

கந்தர்மட மகாவித்யாலயத்தில் தென்தமிழையும் சுன்னாகம் குருகுலத்தில் வடமொழியையும் கற்றுத் தேர்ந்தார். “ விளையும் பயிர் முளையிலே” என்பதற் கொப்ப பக்தி, ஒழுக்கம், ஒப்புரவு, ஈகை, வாய்மை என்ற அணிகலன்கள் இவரை அழகுசெய்ய ஒப்பற்ற இரத்தினமாகவே ஒளிர்ந்தார். திரு. சண்முகரத்தினம். குருவாயூர் பாலக்காடு சிதம்பர சாஸ்திரிகள் என்ற பெரியவரால் உபநயனம் செய்விக்கப் பெற்று அவரையே தனது மானசிக குருவாக ஏற்றார்.

## இல்லறத்தின் ஏற்றம்:

*பண்ணியமும் வெண்கோடும் பாசாங்குசப் படையும்*
*நண்ணிய செங் கைத்தலத்து நாதா! ஒரு கோட்டுத்*
*தண்ணிய வெண்பிறைத் தாழ்சடையாய்! மெய்யடியார்*
*எண்ணிய எண்ணியாங் கீந்தருளும் வள்ளலே!* (காஞ்சிப் புராணம்)

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்றாங்கு ஐவேள்வி செய்யும் அந்தணர்கள் அறத்தினின்று தலைப்பிரியா நங்கையை மணந்து இல்லறத்தில் காலூன்ற வேண்டும்.

*இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்*
*இல்லவள் மாணாக் கடை*

என்ற வள்ளுவத்திற்கு இலக்கணம் போல 1942 ம் ஆண்டு திரு. சண்முகரத்தின சர்மா அவர்களின் திருக்கரம் பற்றி இல்லறச் சோலைக்குள் பாதம் பதித்த பொழுதே திருமதி இராஜலக்ஷ்மி அவர்கள் தன்னுடன், வீரலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, சௌபாக்கியலக்ஷ்மி, தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி தைர்ய லக்ஷ்மி என்ற எழுவரையும் அழைத்து வந்து விட்டார் போலும். அன்றிலிருந்து திரு சர்மா அவர்களுக்கு யோக ஜாதகம்தான்.... புகழும், கீர்த்தியும், செல்வமும் வானின் உச்சிக்கே அவரை இட்டுச் சென்றன.

அடையாறு ஆலமரம் போன்று தன்னையும் காத்துக் கொண்டு, தன்னை நாடி வருபவர்களுக்கும் நிழலளித்து, வேரூன்றி, கிளைத்துச் செழித்து, மரத்தைத் தாங்கும் விழுதுகளாம் நன் மக்கட் செல்வத்தைப் பெற்று இன்று நாடுபோற்ற, நல்லோர் போற்ற சீரிய வாழ்வு வாழ்கின்றனர் திரு சர்மா தம்பதிகள்.

## பக்தியின் உறைப்பு:

*திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுரை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்*

(கந்தபுராணம்)

திரு சண்முகரத்தின சர்மா அவர்களின் இத்துணை உயர்வுகளுக்கும் காரணம், ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானின் திருவடிகளை சிக்கெனப் பற்றிக் கொண்டமையே! அவருக்கு சதாஅபிஷேகம் பண்ணிய பலனே இன்று சதாபிஷேகம் காணும் சிறப்பு. உண்ணும் நீரினும், உயிரினும், செல்வக்களிற்றினையே உயர்வாகக் கொண்டார். 1938ம் ஆண்டு முதல் இன்று வரை ஏறக்குறைய ஒரு சஷ்டியப்த பூர்த்திக் காலம் தொடரும் இவரது ஆலயத் தொண்டு ஒரு கின்னஸ் சாதனை தான். இவர் பங்குகொண்ட கும்பாபிஷேகங்கள், யாகங்களைப் பட்டியலிட்டால் அது அஞ்சனை மைந்தனின் வால் என நீளும்.... நினைவிற்கு ஒருசில.

| | |
|---|---|
| 1958 – | ஸ்ரீ பால செல்வ விநாயகருக்கு முதல் கும்பாபிஷேகம் |
| 1974– | ஸ்ரீ மஹாலஷ்மி கும்பாபிஷேகம் |
| 1.4.1974 – | இலங்கையில் நடைபெற்ற முதலாவது சண்டிஹோமம் |
| 1985– | புதிய ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் இராஜ கோபுரக் கும்பாபிஷேகம் |
| 1986– | இலங்கையில் முதலாவது அஸ்வமேத யாகம், அமைச்சர் திரு.செ. இராஜதுரை அவர்கள் தலைமையில் நிகழ்த்தியது. |
| 1992– | கோலாலம்பூர் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தில் அந்நாட்டு அமைச்சர் ஸ்ரீ சாமுவேல் அவர்களால் கௌரவிக்கப்பட்டமை. |
| 1992– | பிரத்தியங்கரா ஹோமம் புதுமை பொலியச் செய்தமை. |
| 1995– | ஸ்ரீ பால செல்வ விநாயகருக்கு சித்திரத்தேர் செய்வித்தமை. |

## பணிகளின் உயர்வு:

இத்துணை பணிகளுடன் தொட்டதெல்லாம் பொன்னாகும் இவரது ஆகிவந்த கரத்தினால் ஏறக்குறைய மூவாயிரம் திருமணங்களுக்கு மேலாகச் செய்து வைத்துள்ளார்.

இவர் ஆலயத் தொண்டு மட்டுமன்றி சமூகத் தொண்டுகளிலும் சிறந்து முன்னிற்பவர். அதற்காக இவருக்கு அரசாங்கம் சமாதான நீதவான் பட்டத்தை அளித்து சிறப்பித்தது ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலோக ஸ்ரீராம கண சபையின் தலைவராகப் பொறுப்பேற்றும், சிவ. பிராமணர் சங்கத்தின் காப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

இதுமட்டுமல்ல கர்நாடக இசையில் பெருவிருப்புக் கொண்டவர். கலைஞர்களை மதிக்கும் உயர்குணம் கொண்டவர். இவரால் பாராட்டுப் பெறாத கலைஞர்களே இலங்கை திருநாட்டில் இல்லை என்று கூறலாம். இது முகமன் அல்ல. இம்மலரில் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து அளித்த பாராட்டுரைகளே சிவஸ்ரீ சர்மா அவர்களது இசை நயம் தோய்ந்த வாழ்விற்குச் சான்று. அரசியல் ஆன்மிகம், கலை என்ற முக்கடலிலும் முக்குளித்தவர் இவர்.

நிறைவாகக் கூறவேண்டுமானால் புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், அழகு, பெருமை, ஆயுள், நல்லூழ், இளமை, அறிவு, துணிவு, நோயின்மை, நுகர்ச்சி என்ற பதினாறு பேறுகளும் பெற்று அகந்தையில்லாமல் அடக்கத்தின் பெட்டகமாக வாழும் இப்பெரியாரின் வாழ்க்கை நாம் வாழ வேண்டிய வாழ்க்கைக்கு ஓர் கைநூலாகும்.

ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடி பன்னெடுங்காலம் சிவஸ்ரீ சண்முகரத்தின சர்மா சௌ. இராஜலக்ஷ்மி தம்பதிகள் வாழ்க! வாழ்க! என வாழ்த்திசைத்து அவர்களின் ஆசி வேண்டி மலரடி பணிவோம்.



# வாழ்த்து மலர்

உ

போன் : 22115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

# ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

நெ. 1, சாலை தெரு, காஞ்சீபுரம். - 631 502.

---

முகாம் :

தேதி 2-4-96

ஆயிரம் பிறை கண்ட ஆசார்யாளுடைய [illegible]
[illegible] சாந்தி கர்மாவாகும் ஸஹஸ்ர போஜனம் [illegible]
கொள்பவர்கள் செய்து வைப்பவர்கள் பங்கு பெறுபவர்
-கள் ஆகிய அனைவருக்கும் [illegible]
[illegible] கிடைக்கின்றது. [illegible]
கிடைக்கின்றது.

இந்த புண்ணியமான சாந்திகர்மாவாகிய ஸஹஸ்ர போஜனம்
[illegible] 24 [illegible]
[illegible]
வருகின்ற 20 (2-5-96)ல் [illegible]
ஆசீர்வதிக்கிறோம்.

இது [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நாராயண ஸ்ம்ருதி

# ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீசாரதாபீட ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை

*சிவஸ்ரீ ஷண்முகராதா கிருஷ்ண குருக்கள் அவர்களுக்கு*

தாங்கள் 11.3.96ம் தேதி எழுதியனுப்பிய கடிதமும், அத்துடன் தங்களது தகப்பனார் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்களின் சதாபிஷேக வைபவப் பத்திரிகையும் கிடைக்கப் பெற்று ஸ்ரீஸ்ரீ மகாஸ்வாமிகள் அவர்கள் பாதகமலங்களில் தங்கள் நமஸ்காரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டது.

தங்கள் தகப்பனார் ஈழநாட்டில் ஒரு சிறந்தவேத ஆகமபண்டிதராகவும் தன்வாழ்க்கை பூராவாக சிவாலயங்களில் சிவபூஜை கைங்கரியத்தில் ஈடுபட்டு. ஆஸ்திக மக்கள் அனைவரையும் ஆகர்ஷித்து பக்திகாரியங்களில் ஈடுபடுத்தி தேவாலய மூர்த்திகளுக்கு விசேஷ சான்னியத்தை விருத்தி செய்து வாழையடி வாழையாக பல குடும்பங்களுக்கு க்ஷேமாபிவிருத்தி ஈஸ்வரன் கிருபையால் உண்டாக செய்தவர்கள்.

அப்பேர்பட்டவருக்கு தாங்கள் "சதாபிஷேகம்" சிறப்பாக நடத்தி ஒரு மலர் வெளியிடுவதும் உங்களுக்கு சிரேயஸ் கரம்தான் மேற்படி நல்லகாரியங்கள் நிர்விக்னமாகவும், சிறப்பாகவும் நடந்து தங்கள் தகப்பனார் பிரம்ம ஸ்ரீ ஷண்முகரத்ன சர்மா அவர்களும் தர்மபத்னி ராஜலக்ஷ்மி அவர்களும் ஆரோக்கியமும், சகல சௌபாக்யங்களும் பெற்று க்ஷேமமாக வாழ்ந்து வர ஆச்சாரியாள் ஆசிர்வதித்தருளிய மந்திராக்ஷதையும் ஸ்ரீ சாரதா சந்தரமௌளீஸ்வர பிரஸாதமும் இத்துடன் அனுப்பி இருக்கிறது.

*இப்படிக்கு*
*கிருஷ்ணமூர்த்தி*

# வாழ்த்துச் செய்தி



கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகமூர்த்திக் கோயிலின் பிரதம குருக்களாக விளங்கும் பிரம்மஸ்ரீ பா. சண்முக ரத்தின சர்மா அவர்களது சதாபிஷேக விழா, சித்திரை 20ம் திகதி நடைபெற இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும், திட ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டும் என மனமாரப் பிராத்திக்கிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், அவருக்கு சதாபிஷேக விழாவை சிறப்பான முறையில் நடத்த முனைந்திருக்கும் அவரது உற்றார் உறவினர் மற்றும் குடும்ப நண்பர்கள் அனைவருக்கும் பாராட்டையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ப்ரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்களுக்கு எனது வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி ஆத்மகனாநந்தா

# வாழ்த்துரை



பிரமஸ்ரீ ஷண்முக ரத்நசர்மா அவர்களை அறியாத இந்து சமுகத்தவர் இலங்கையில் இருக்க முடியாது. மிகவும் பிரசித்தமானவர்; சமாதான நீதிவான்; சிவாகம திலகம்; சிவாகம் பூஷணம்; வேதாகம மாமணி; ராமகான சபாவின் முக்கிய உறுப்பினர். தொடக்கமுதல் இச்சபாவுடன் இணைந்து செயற்படுபவர். அதன் போஷகர். மேலும் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையுடனும் இந்து இளைஞர் மன்றத்துடனும் தொடர்பு பூண்டவர். மேற்குறிப்பிட்ட இரு நிறுவனங்களின் போஷகர்.

இவர் நெடுங்காலமாக இராமகான சபாவின் தலைவராகத் திகழ்ந்து வருகிறார். சபை இவர் தலைமையில் பெருந் தொண்டாற்றி வருகிறது. பிராமண சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இச்சபை அரிய சேவை செய்து வருகிறது. மேலும் இவர் சிவப்பிராமண சங்கத்தின் உபதலைவராகவும் திகழ்கின்றார். இப்பண்புகள் இவர் சேவையைப் பிரபலமாக்குகின்றது.

இவ்விரு நிறுவனங்களின் தொடர்பு இவரைப் பிராமண சமுதாயத்திற்கு பெரும் தொண்டாற்றவைக்கின்றது.

கப்பித்தாவத்தையில், மருதானையில் அமைந்திருக்கும் பாலசெல்வ விநாயக மூர்த்தி ஆலயத்தில் ஏறக்குறைய அறுபதாண்டுகளுக்கு அதிகமான காலமாக பிரதம குருக்களாகக் கடமை புரிந்து வருகிறார். இவ்வளவு நீண்டகாலமாக எவராவது எந்த ஆலயத்திலும் தொடர்ச்சியாகக் கடமைபுரிந்ததில்லை. இப்பெரும் சாதனை பெரும் பாராட்டுக்கு உரியது. கோவிலுக்கு அருகில் அமைந்திருக்கும் இவர் வீடு இவரைநாடி வரும் பலருக்கு விருந்துபசாரத் தலமாக விளங்குகின்றது. இவராதரவில் வாழும் பலரை ஆதரித்து வருபவர், கடமை தவறாது விநாயகரைப் பூசிக்கும் பண்பாளர்.

விநாயகர் ஆலயம் இவர் காலத்தில் விரிவுற்று அமையும் சிறப்புப் பெற்றது. இக்கோவிலின் முன் பெருங்கோபுரம் அழகுற விளங்கிக் கோவிலின் சிறப்பைப் பறைசாற்றுகிறது. கும்பாபிஷேகம் முதலிய பெரிய வைபவங்களில் இந்தியாவிலிருந்து சிறந்த சிவாசாரியார்கள் அழைத்துக் கௌரவிக்கப் பெற்றனர். இந்தியா தொடர்பு இவருக்கு விசேஷமாக அமைந்து இருந்தது. சமய அறிஞர்களும் கிரியா விற்பன்னர்களும் இவர் வீட்டில் நடைபெற்ற சமய கிரியைகளில் பங்கு கொண்டு சிறப்பித்து வருகிறார்கள். கோவிலில் நிகழ்ந்த மகாலக்ஷ்மி பிரதிஷ்டை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. காஞ்சி பெரியவர் ஆணையால் நிறுவப்பட்ட இம்மூர்த்தியின் பிரதிஷ்டையைத் தொடர்ந்து சண்டி ஹோமம் இங்கு நடைபெற்றது. இலங்கையில் முதன்முதலாக நிகழ்ந்த சண்டி ஹோமம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் சிறந்த ஸ்ரீ வித்யா உபாசகரான ஸ்ரீ ரங்கசாமி திக்ஷிதர் அவர்கள் தலைமையில் ஹோமம் விமரிசையாக நடைபெற்றது. இவ்வாறு பிரபலமான இலங்கை இந்தியாவைச்சார்ந்த பெரியவர்கள் இவர் காலத்தில் அவ்வப்போது அழைத்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இலங்கையில் அரசியல் அரங்கில் நடைபெற்ற சமயச் சடங்குகளில் கலந்து சிறப்பித்த பெருமை இவருக்குண்டு. அரசாங்கத்தால் மிகவும் கௌரவித்துப் போற்றப்பட்டவர். அரசாங்க கௌரவப் பட்டங்களும் பெற்றவர். இவர் சமாதான நீதிவானாக (J.P.) யாகத் திகழ்பவர். முன்னை நாள் பிரதம மந்திரியாக நெடுங்காலம் கடமைபுரிந்த பிரேமதாசாவின் பேரன்புக்குப் பாத்திரமானவர். கௌரவ ஜனாதிபதியாக பிரேமதாசா அவர்கள் திகழ்ந்த காலத்திலும் அவர் அபிமானமும் கௌரவமும் குறிப்பிடத்தக்க வகையில் இவருக்குத் தொடர்ந்திருந்தன. இப்பொழுதும் தொடர்ந்து அரசாங்க மதிப்பைப் பெற்றுவருகிறார்.

இவருக்கு 83 வயது வரை ஆகிக் கொண்டிருந்தாலும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார். 80ம் ஆண்டு நிறைந்த வேளையில் இந்தியாவில் திருக்கடவூர் முதலிய புனித க்ஷேத்திரங்கலுக்கு யாத்திரை செய்து வழிபட்டு வந்தார். இவரது சதாபிஷேக வைபவத்தைக் கொண்டாட இவர் புத்திரரும் புத்திரியரும் விரும்பினார்கள். இறைவனருளுக்குப் பூர்ணபாத்திரமான இவர் குடும்பம் பதினொரு செல்வக் குழந்தைகளையும் இருபது பேரக்குழந்தைகளையும் கொண்ட சிறப்புமிக்கது. இவரது சகோதரர்களும் சிறப்பு மிக்கோராய் அங்கங்கே வாழ்ந்து வருகிறார்கள். புத்திரர்கள் உலகில் பலபாகங்களில் சிறப்புற வசித்து வருகின்றனர். இவர் குடும்பத்தினர் சிறப்புறும் வண்ணம் எடுக்கும் சதாபிஷேகம் பெருவிழாவில் வெளியிடும் "ஸதாயுஷ்ய" மலருக்கு ஒரு சிறப்புரை வழங்கிச் சிறப்பிக்குமாறு அவருடன் துணைநின்று கடமை புரியும் அவர் புதல்வர் ஸ்ரீ ராதா கிருஷ்ணகுருக்களின் வேண்டுகோளுக்கமைய இவ்வுரையை உருவாக்கியுள்ளேன்.

உலகயாத்திரை செய்யப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை இவ்வேண்டுகோள் கிடைத்ததனால் விரிவாக எழுத விருப்பம் இருந்தும் சூழ்நிலை இடந்தரவில்லை.

ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் ஷண்முகரத்னசர்மா அவர்கள் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பேரன். நான் பிறந்து வளர்ந்த நல்லூரில் வைமன் றோட்டில் பிறந்து வளர்ந்தவர்கள்; என் உறவினரும் கூட. மிகச்சிறு பிராயத்திலேயே பால செல்வ விநாயகருக்குத் தொண்டாற்ற நல்லூரிலிருந்து புறப்பட்டு விட்டார்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் இப்பெரியார் பிரமஸ்ரீ பா. ஷண்முகரத்நசர்மாவும் இவர் துணைவியார் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாளும், எங்கள் சமுதாயத்தின் பெருநன்மை காரணமாக இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து மேலும் சிறப்புற விளங்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

*சதமானம பவதி; சதாயு; புருஷ*

*கா. கைலாசநாத குருக்கள்.*

# சதாபிஷேக விழா



தோன்றி புகழுடன் தோன்றுக – என்பது வள்ளுவர் வாக்கு. அதற்கு இயைந்தபடி எத்துணை பேர்கள் வாழ்கிறார்கள். அப்படி வாழ்பவர்கள் மிகச்சிலராக இருப்பினும் அவர்களது வாழ்க்கையைப் பார்த்து பின்பற்றி எத்தனையோ ஆயிரம் பேர் சீரும் சிறப்புமாக நல்வாழ்வு வாழ்கிறார்கள். இதுதான் உலகின் இயல்பு, தெய்வத்தினருளை பெற மக்களுக்கு சேவை செய்வதும் ஒரு வழிபாடு என்கிறார்கள் சிலர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனடி பேணி அவன் புகழ்பாடி வாழ்ந்ததுடன் பல மக்களுக்கும் வழிகாட்டியாகவும், தங்கள் அனுபவங்களை நல்வாழ்க்கைக்கு உதவுமாறு அடியவருக்கும் அடியவராக இருந்து தொண்டு புரிந்துள்ளனர். பேருக்கும் புகழுக்கும் ஆசைபடாது அயராது உழைத்து தன்னலமற்ற தூய வாழ்வு வாழ்ந்து மக்களை மேன்னிலையில் உயர்த்த பாடுபடும் தொண்டர்களும் பூஜிக்க தகுந்தவர்களே. அப்படிப்பட்ட உயர்ந்த குணங்களும், தூய பக்தியும் மக்கள் சேவையும் பலராலும் போற்றப்படும் நிலையில் நீதிமானாகவும் இருந்து தூய வாழ்க்கை வாழும் ஸ்ரீலங்கா கொழும்பு, கபித்தாவத்தை இடத்தில் விளங்கும் வினாயகரை அனுதினமும் பூஜிக்கும் பாக்யம் பெற்ற ப்ரம்ம சண்முகரத்ன சர்மா அவர்களுக்கும் சதாபிஷேக விழா நடத்தும் இப்புனித நாளில் வந்திருக்கும் அவர்தம் உறவினர்களும், பக்தர்களும், மிகவும் பாக்யசாலிகளே.

ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பே கர்பாதானம், பும்ஸவனம், சீமந்தோந்நயநம் முதலிய ஸம்ஸ் காரங்களாலே, தூய்மை அடைந்து வாழும் காலத்தில் பிறருக்கு உபகாரமாக உயர்ந்த லட்சியங்களுடன் விளங்கி, தீர்காயுசாக இறைவனருள் பெற்று வாழ்கின்றது. ஒருவருக்கு ஒரு புருஷாயுசு என்று சொல்லப் படுவது பஹூரத்ரீ அதாவது 120 வருடம் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது. க்ருதயுகம், தீரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் இவைகளில் முறையே மக்களின் வயது 400, 300, 200, 100 என ஆயுளின் அளவு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. யுகங்களின் தன்மைக்கேற்ப ஆயுளின் அளவும் மாறுகின்றது. இப்பொழுது 60 வயது கண்டாலே பூரணமானவர்கள் என்கிறார்கள். ஏனெனில் 120ல் பாதி 60. பாதி மார்க் வாங்கி விட்டாலே பூரணம் என்று வைத்து சொல்கிறார்களோ என்னவோ. ஏழை எளியவர்கள் முதல் தனவந்தர்கள் வரை எல்லா ஜாதியினரும் மணிவிழா என்கிற 60 ஆண்டை அவர் அவர்களுக்கு ஏற்ற நிலையில் கொண்டாடுவது அனைவரும் அறிந்ததே. இதை ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி என்று கூறுவார்கள். இதனன்றி 59 முடிந்து 60 ஆம் ஆண்டின் தொடக்கத்திலே செய்யப்படும் விழாவிற்கு உக்ரரத சாந்தி என்றும், 70ல் பீமரக சாந்தியென்றும், 78ல் விஜயரத சாந்தி என்றும், 81ல் சதாபிஷேகம் என்றும் பல சாந்தி பரிகாரங்கள், விழாக்கள், சாந்திரத்னாகரம், சாந்தி குஸுமாகரம் என்ற நூல்களில் நடத்த வேண்டிய முறைகளுடன் விரிவாக உள்ளன.

## உக்ரரத சாந்தி

ஸௌனகர் போதாயனர் ஆகிய இரு ரிஷிகளும் இதனைப் பற்றி கூறியுள்ளார்கள். அதாவது மேற்படி காலங்களிலே ஒருவனுடைய க்ரஹ சஞ்சாரங்கள் எந்த விதத்திலும் அவனுடைய வாழ்க்கையையும் மனைவி மக்கள் முதலோருடைய தேஹ ஆரோக்யத்தையும் பாதிக்குமென்பதால் அதை நிவர்த்திக்க முற்குறிப்பிட்ட அதாவது (59, 60, 70, 78, 81) இவைகளில் சாந்தி பரிகாரம் செய்து ஆரோக்யமாகவும், த்ருட காத்ரமாகவும் இருந்து கொண்டு பாபங்களை போக்கி, தானங்களால் புண்யங்களை பெற்று, தர்மங்களால் பிறருக்கு உபகாரியாக இருந்து கொண்டு தெய்வத்திற்கு சமமான அந்தஸ்து உடையவராக ஆகிறார்கள் என்பதே இவைகளின் தத்துவம். உக்ர ரத சாந்தியில் ப்ரதான தேவதையாக உக்ரனும், அதிதேவதையாக ப்ரம்மாவும், யமனும், உபதேவதைகளாக நவக்ரஹமும், திக்பாலகர்களும், சப்த சிரஞ்சிவிகளும், துர்க்கை, கணேசர், விஷ்ணுவும் பூஜிக்கப்பட்டு முறைப்படி ஹோமங்கள் செய்து கலச தீர்த்தங்களை தம்பதியருக்கு அபிஷேகித்து தம் சக்திக்கேற்ற தானங்களும், விப்ர போஜனங்களும் செய்து பலன் பெறுவது ஸௌனகர் கூறியது.

போதாயனர் கூறியது ஒரே ஒரு கலசத்தை கொண்டு ம்ருத்யுவை பூஜை செய்வது மற்றவை யாவும் முன்போல.

சிவாகமோத்த உக்ர ரத சாந்தியிலே சுமார் 200 கலசங்களுக்கு பூஜை செய்யுமாறு சொல்லப்பட்டுள்ளது. பிரதான தேவதை ம்ருத்யு, தெற்கே வடக்கே முறையே உக்ரனும், ம்ருத்யுஞ்சயனும் உபதேவதைகளாக ஏழு சிரஞ்சீவிகள், 60 வருடங்கள், தக்ஷிணாயனம், உத்தராயனம், 6 ருதுக்கள், 12 மாதங்கள், சுக்ல கிருஷ்ண பக்ஷங்கள், திதிகள், நக்ஷத்ரங்கள், சுசி முதலான மாதங்கள் அஷ்ட வசுக்கள், வ்ருஷ்கம்பாதி யோகங்கள், கரணங்கள், ஸத்யோஜாதாதி பஞ்ச ப்ரஹ்மங்கள், சைல புத்ரி முதலான நவதுர்கைகள் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், கணபதி, க்ஷேத்ரபாலர், அபயங்கரர், 12 ராசிக்கள், 7 மருத்துக்கள், ஏகாதச ருத்ரர்கள், த்வாதச ஆதித்யர்கள் ஆகாயம், பூமி, க்ரஹங்கள் இவ்வாறு விரிவான பூஜைகள் சிவாகமத்தில் வழிவந்தவர்களுக்கு 59 முடிந்து 60 ஆரம்பத்தில் கூறப்பட்டு உள்ளது.

# ஷஷ்டியப்த பூர்த்தி

இதில் ம்ருத்யுஞ்ஜயர் ப்ரதான தேவதை, தெற்கு வடக்கில் பிரஹ்மா, ருத்ரனையும், மேற்கு கிழக்கில் விஷ்ணு, மார்கண்டேயரையும், திசைகளில் இந்திரன் முதலானோரையும், நவக்ரஹங்கள் ஸப்த சிரஞ்சீவிகளையும், அஸ்வினி முதல் அபிஜித் வரை 28 நக்ஷத்ரங்கள், 60 வருடங்கள், 7 ருஷிகள், இதிலேயே போதாயனர் கூறியது சிறிது வித்தியாசமாக தன்வந்திரி, திஷணாமாதா ஷஷ்டீ மாதா ஆகியவைகளுடன் சுமார் 120 கலசங்கள் வரை உள்ளது.

# பீமரத சாந்தி

70ல் பீமரத சாந்தி சிவாகம ரீதியாகவும், ஸௌனகர் ரிஷி கூறிய முறை ப்ராகாரமாகவும் இருவகையாக உள்ளன. மாத்ருகா பூஜை நாந்தி ச்ராத்தம் முதலியவைகளுடன் கூடியது. இதிலும் ம்ருத்யுஞ்ச தேவதை ப்ராதானமாகவும் ப்ரஹ்மா முதலான கலசங்களும் சேர்த்து 32 கலசங்கள் உள்ளன.

78ல் செய்வது விஜயரத சாந்தி என கூறப்பட்டுள்ளது. பொதுவாக இவைகளிலே பரமேஸ்வரனே பெரும்பாலான முக்கிய தேவதையாக உள்ளது. வேத மந்திரங்கள், ஆகம, புராண சுலோகங்கள் தியானங்கள் இவைகளை கொண்டு கும்பங்களை உபசாரங்களுடன் பூஜித்து சிவாகம ரீதியாகவோ, க்ருஹ்யோக்த விதானமாகவோ, அக்னி ப்ரதிஷ்டை செய்து, அதற்குரிய மந்திரங்களை ஆஹுதி கொடுத்து, ப்ரார்த்தித்து பூர்ணாஹுதி செய்து ரோக நிவர்த்திக்காகவும், சாந்தி பரிகாரமாகவும், பூசணிக்காய், வெண்கல பாத்ரத்தில் நெய், இரும்பு, வாணலி, கம்பளம், பஞ்சு தலையணை இவைகளை தானங்களாக கொடுத்து மங்கள த்ரவ்யங்களால் ஸ்நானம் செய்து பூஜித்த சாந்தி கும்பங்களால் அபிஷேகம் செய்து கொண்டு, சக்திக்கேற்ற தச்தானங்களையோ பஞ்சதானங்கள் முதலிய விசேஷ தானங்களையும் செய்து, சிவ புண்யத்தை அடைந்து நீண்ட ஆயுளுடன் ஆரோக்யமாக வாழ்வார்கள்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் சதாபிஷேகம் என்ற மிக முக்யமான விழாவானது காண்பவர்கள் மிக்க பாக்யசாலிகள். அப்படிப்பட்ட புண்யம் மேற்படி விழா நாயகர் அரிதரிது மானிடராய் பிறத்தலரிது என்பதற்கேற்ப இவ்வரிதான விழாகாணும் பாக்யம் இறைவன் அருளால் நீண்ட ஆயுள் உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். சிவஸ்ரீ சண்முகரத்ன சர்மா குடும்பத்திற்கு கிடைத்துள்ளது.

இதிலும் இருவிதம் உண்டு. ஒருவருடைய மகனுடைய பேரன் (கொள்ளு பேரன்) பிறந்த உடனேயே வயது கணக்கிடாமல் சதாபிஷேகம் செய்து கொள்ளும் பாக்யம் அன்னாருக்கு கிடைத்து விடுகிறது.

இதற்கு ஸஹஸ்ர சந்த்ர தரிசன ப்ரபௌத்ர ஜனன சாந்தி என்று மஹாதேவர் பார்வதியை பார்த்து இதனுடைய விவரங்களை கூறுவதாக உள்ளது.

ப்ரபௌத்ரனை (கொள்ளு பேரனை) பார்த்த உடனேயே அல்லது 1000 பிறைகளை கண்ட உடனேயேவோ (அதாவது சுமார் 81 வயது) ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு மிக பெரிய புண்ய பலனை அடைகிறார்.

இவர்கள் பித்ருக்கு செய்யும் கடனிலிருந்து விடுபடுகிறார்கள். எல்லா மக்களாலும் பூஜிக்கப்படக்கூடிய தகுதியுடையவராகிறார்கள். கங்கை முதலிய நதிகள் நீராடிய பலனும் சேது (ராமேஸ்வரம்) தனுஷ்கோடி இவைகளின் தரிசன பலனும் பாப நிவர்த்திக்காக க்ருத்ஸர சாந்த்ராயண வ்ரதங்களை அனுஷ்டித்த பலனும் கிடைக்கின்றன.

ஸ்வர்ணாபிஷேகம் அதாவது பொற்காசுகளால் அபிஷேகம் செய்தும், ரத்னங்களால் அபிஷேகம் செய்தும், தானம் செய்யவும் சொல்லியுள்ளது.

ப்ரதான தேவதை லஷ்மிநாராயணர் சூரியனும் சந்திரனுமாகவும் மற்றொரு விதானத்தில் ப்ரஹ்மா ப்ரதான தேவதையாகவும் கூறியுள்ளது.

க்ரஹ ஹோமம், விஷ்ணு காயத்ரி, முதலியவைகளால் ஹோமமும் விஷேசமாக சொல்லப்பட்டுள்ளது. சிவனால் கூறப்பட்ட காமிகாமத்தில் விசேஷமாக சதருத்ரர்களை பூஜை செய்யும் படி மற்றொரு விதி உள்ளது.

இதில் அபிஷேகத்திற்கு பிறகு பொன் அல்லது வெள்ளி அல்லது தாமிரம் அல்லது வெண்கலம் இப்பாத்திரங்களில் நெய்யை நிரப்பி அதில் ஸ்வர்ணத்தை இட்டு அதில் தன் முகத்தை பார்த்து ப்ராஹ்மணருக்கு தானம் செய்ய சொல்லியுள்ளது. மாலையில் யானை குதிரைகளால் பூட்டப்பட்ட ரதத்திலோ மங்கள வாத்யங்களுடன் ப்ராமணர்கள் வேத கோஷத்துடன் க்ராம ப்ரதக்ஷிணம் செய்து க்ரஹத்திற்கு வந்து பூரி தானங்கள் ப்ராஹ்மண போஜனங்கள் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளது.

இச்சதாபிஷேகம் காணும் தம்பதிகள் சிவ பார்வதிக்கு சமமானவர்கள் என்றும் கூறியுள்ளது. இப்படிப்பட்ட தம்பதிகளுடைய பரிச்சயம் எனக்கு காஞ்சி பரமாச்சார்யர்கள் அவர்கள் கருணையில்லல்லவோ கிடைத்தது.

1986 ஆம் ஆண்டு ஒரு நாள் காஞ்சி பெரியவர் என்னையழைத்து சிலோன் (ஸ்ரீலங்கா) அமைச்சர் "திரு. ராஜதுரை அவர்கள் ஒரு அஸ்வமேத யாகம் நாட்டின் நலனுக்காக நடத்த வேண்டுமாம். நீ சென்று நடத்தி விட்டு வா" என்றார்கள். நான் உடனே இக்கலிகாலத்தில் அஸ்வமேதமாகவது செய்வதாவது, அதுவும் அதன் விவரங்கள் யாதும் எனக்கு தெரியாதே என்றேன்.

எல்லாம் நீ நடத்த முடியும் என்று சிரித்து கொண்டே அனுக்ரஹம் செய்தார். பல வித்வான்களை கேட்டு பார்த்தும் அதன் ப்ரயோகம் கிடைக்கவில்லை. கடைசியில் சென்னை காளிகாம்பாள் ஆலய அர்ச்சகரும், அர்ச்சகர் சங்க தலைவருமான, பலருக்கு வெளிநாட்டில் பூஜை செய்தும் – வாய்ப்புகளை ஏற்படுத்தி கௌரவிக்கும் சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவச்சாரியார் அவர்கள் மேற்படி சென்னையில் உள்ள வேத சாஸ்த்ர விற்பன்னரான அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியாரிடம் அழைத்து சென்றார்.

இவர்களிடம் இதனுடைய விபரங்கள் முறைகளை விவாதித்து தெரிந்து கொண்ட பின் ஒரு குழுவுடன் அங்கு சென்றேன். பல அரிய விஷயங்கள் சீக்கிரம் புரிந்து கொள்ளும் போதுதான் காஞ்சி பெரியவருடைய புன்சிரிப்புடன் கூடிய அனுக்ரஹத்தின் அர்த்தம் புரிந்தது.

நாங்கள் போன நாளன்று அங்கு உடனேயே உணவு முதலானவைகளை ஏற்பாடு செய்வதில் சிறிது தாமதமானதல் மேற்படி சண்முகரத்ன சர்மா க்ரஹத்தில் அவசரத்துடன் அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. யாகம் ஆரம்பித்த பிறகும் கூடி சுமார் 15, 20 நாட்கள் வரை இவர்கள் வீட்டிலேயே அத்தனை ப்ராம்மணர்களுக்கும் மிக்க அன்புடன் சிரமம் பாராது ஆதித்யம் நடைபெற்றது.

அச்சமயம் இவர்களுடைய வீட்டு பெண் பிரசவ நேரம் அப்படியிருந்தும் சர்மாவின் தர்மபத்தினி மகள், [illegible]கள் முதலிய அனைவரும் வந்திருந்த அனைவருக்கும் ச்ரமம் பாராது முகம் கோணாது விருந்துகள் படைத்து அன்னதான புண்யத்தை தேடிக் கொண்டனர்.

அச்சமயம் திரு. சர்மா அவர்களிடம் எவ்வளவோ பேர் நீதிகேட்டு பஞ்சாயத்துக்கு வருவார்கள். எளிய முறையில் அவைகளை தீர்க்கும் முறை கண்டு நான் ஆச்சரியப்படுவேன்.

ஜனாதிபதி ஜயவர்தன, மற்றும் பிரேமதாசா மற்றும் அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானவர் என அப்போதே பல நிகழ்ச்சிகளை கண்டு தெரிந்து கொண்டேன். மறுமுறை 1988 ல் கபித்தாவத்தை வினாயகருக்கு சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்வமயம் மந்திரி ராஜதுரையின் மூலம் வந்திருந்த வித்வான்களுக்கு தங்க மெடல்களும், பட்டங்களும் கொடுத்து கவுரவித்து ஆதரவித்தார்கள்.

"தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும்" என்ற உயர்ந்த உள்ளம் கொண்ட இத்தம்பதியினரின் உபகார சிந்தை யாவும் மற்றைய இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டுதலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மறுமுறை மலேசியா ராஜராஜேஸ்வரி ஆலய கும்பாபிஷேக விழாவில் இப்பெரியவரை காணும் பயனை அடைந்தேன். அவ்வாலயத்தில் இவர் குமாரர் ராதா கிருஷ்ண சர்மா தலைமை அர்ச்சகராக பணியாற்றினார். வயது முதிர்ந்த நிலையிலும் திரு சர்மா அவர்கள் அக்கும்பாபிஷேகத்தில் சுறுசுறுப்பாக ஆற்றிய பணியை கண்டு வியந்துள்ளேன். அந்நாட்டு மந்திரி சாமுவேல் டத்தே முதலியோர்களால் தானும் கவுரவிக்கப்பட்டு எங்களையும் கவுரவிக்குமாறு செய்தார். இன்னும் எத்தனையோ வைதீக கார்யங்களில் ஈடுபட்டு தகுந்தவர்களை கொண்டு இலங்கையில் வைதீக க்ரியைகள் முறைப்படி செய்ய பலருக்கு உதவினார் என்பதை அறிந்து கொண்டேன்.

எனக்கு தெரிந்த அளவு சிறிது தான். ஆனால் பல்லாண்டுகளாக அருடன் பழகும் அந்நாட்டு மக்களுக்கு அவரால் செய்யயப்பட்ட நற்காரியங்கள், உதவிகள் யாவும் எப்போதும் நினைவில் இருக்கும். இத்தகைய பெருந்தகையாரின் சதாபிஷேக விழா ஸ்வஸ்தி தாது வருஷம் சித்திரை மாதம் மிகச்சிறப்பாக இந்நகரமே வியக்கும் வண்ணம் அன்னாருடைய மக்கட்களாலும் பக்தர்களாலும், விசேஷமாக கொண்டாடும் இந்த வைபவத்தை காணும் அனைவருமே மிக புண்யம் பெற்றவர்கள். பக்திமானுமான இவருடையயய சதாபிஷேகத்தில் கலந்து கொண்டு உள்ள பக்தர்களும், உறவினர்களும் மிக்க பாக்யசாலிகள். இப்பெரும் புண்த்தினால் தங்கள் வாழ்விலும் ஒவ்வொருவரும் இம்மாதிரியான சதாபிஷேகத்தை காணும் வாய்ப்பினை அடைய வேண்டுமென இறைவன் கச்சி ஏகம்ப பெருமான் அருளையும், கபித்தாவத்தை வினாயக பெருமான் அருளையும் இந்நாட்டிற்கு சிறப்பாக உள்ள திருக்கோணேச பெருமான், திருக்கேதீச பெருமான் அருளையும் வேண்டி, இவர்தம் மக்களை வாழ்த்தி இக்கட்டுரையை மங்களமாக பூரணம் செய்கின்றேன்.

இப்படிக்கு

**க. ராஜப்பா குருக்கள்**
சைவ சித்தாந்த, சிவாகமசெல்வர்
ஸ்ரீகைலாசநாதர் கோயில்

# குறைவற்ற செல்வர்



பிரம்ம ஸ்ரீ சண்முகரத்ண சர்மா அவர்கள் நீண்ட நாட்களாக சமயத் தொண்டும், சமூகத்தொண்டுமே தனது உயிர் நாடியாக நினைத்து சிறுவயது முதல் தொண்டு செய்து வருகிறார்கள்.

நான் 1961 ஆண்டு முதல் பிரம்ம ஸ்ரீ சண்முகரத்ன சர்மா அவர்களை நன்கு அறிவேன். மாண்புமிகு ராஜதுரை அவர்கள் அஸ்வமேத யாகம் செய்த பொழுது யாரும் செய்யமுடியாத அளவிற்கு பிரம்மஸ்ரீ சண்முகரத்ன சர்மா அவர்கள் பலவகைகளிலும் தொண்டாற்றினார்கள்.

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் பேரருள் நல்லபிள்ளைகளும், நல்ல பெண்களும் அவர்களுக்கு அமைந்துள்ளனர். அதைவிட சிறப்பு அவரது எண்ணம் அறிந்து செயலாற்றும் நல்ல துணைவியார் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டில் இருந்து எத்தனைபேர் வந்தாலும் முகமலர்ச்சியுடன் உபசரிப்பார்கள். அவர்களுக்கு சதாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு நீண்ட ஆயுளும், குறைவற்ற செல்வமும் அமைந்து சகல சௌபாக்கியங்களுடன் இன்புற்று வாழ எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பாளை பிரார்த்தனை செய்கிறேன்.

ஸ்ரீ அம்பாள் ஆசிர்வாதம்.

வேதாகமஞான கலாநிதி

**திரு. சாம்பமூர்த்தி சிவாச்சாரியர்**

*ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம்*

# சதாபிஷேகம்



ஓம்கார பொருளாய் விளங்குபவரும் சகல விக்னங்களையும் நீக்குபவரும் ஆகிய ஸ்ரீபால செல்வ விநாயகர் பாதங்களை வணங்கி 2/5/96 அன்று கனகாபிஷேக நாயகராகிய சிவஸ்ரீ சண்முக சத்னா சர்மா அவர்களை நமஸ்கரித்து சதாபிஷேகம் என்னும் இக்கட்டுரையைத் துவங்குகிறேன்.

உலகில் மாபெரும் மனிதர்களாகவும் மனிதருள் மாணிக்கமாகவும் திகழ்பவர்கள் ஒருசிலரே.

*தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்*
*தோன்றாமை நன்று.*

என்றார் திருவள்ளுவர்.

இக்குறளுக்கேற்ப இனிதே வாழ்ந்து கொண்டிருக்கும். சிவஸ்ரீ ஷண்முகரத்னன சர்மா அவர்கள் ஆகமத்தினை ஆழ்ந்து கற்று அ தற்கேற்ப தம்முடைய பணியினை பாங்குறச் செய்வதை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானின் ஆலய வளர்ச்சியிலும் அன்னார் அருள்மழை பொழிவதிலும் இருந்து நாம் எல்லோரும் உணரக்கூடிய ஒன்றாகும்.

மேலும் ஸ்ரீ சர்மா அவர்கள் அரசியலிலும் ஆர்வம் காட்டி தான்ஒரு J.P. ஆக திகழ்ந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என்னும் கூற்றுக்கு இணங்க மக்களுக்கும் நற்தொண்டுகள் ஆற்றியிருப்பதை அறிந்து மனமகிழ்ச்சி அடைகிறோம்.

சதாபிஷேகம் என்பது சகஸ்ர சந்திர தரிசன சாந்தி, கனகாபிஷேகம் ப்ரகபாத்திர சாந்தி என அழைக்கப்படுகின்றது. இச்சதாபிஷேகத்தை செய்து கொள்பவரும் மற்றும் இவ்விழாவினை சீரிய முறையில் சிறப்புற செய்விப்பதில் பங்கு கொள்பவரும் ஆகிய புதல்வர்கள், புதல்விகள் மற்றும் அனைத்து குடும்பத்தினர் ஆகியோருக்கும் கங்கை நதியில் நீராடி சேது தரிசனம் செய்த புண்ணியம் கிடைக்கும் என்பது மறையோர் வாக்கு.

இவ்விழாக்கானும் தம்பதிகள் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர், ஸ்ரீ உமா மகேஸ்வரி, சூரியன் முதலான நவ நாயகர்கள், கபாலிஷாதி சத ரூத்திரர்கள், இந்திராதி லோகபாலகர்கள் ஆகியோர் இவ்விழாவில் தங்களை வழிபடுவதன் மூலம் அருளை அள்ளி வீசுவார்கள் என்பது சித்தாந்தம்.

*மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் - குறைவிலை*
*கண்ணி நல்ல ஃதுறும் கழுமல வளநகர்*
*பெண்ணி நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே*

எனும் ஞானசம்பந்த பெருமானாரின் வேண்டுதற்கு இணங்க சிவ ஸ்ரீ ஷண்முக ரத்னா சர்மா தம்பதிகள் அழியாப்புகழை அடைந்து மென்மேலும் வாழ்வாங்கு வாழ்ந்து நம் எல்லோரையும் ஆசீர்வதிக்க அனுமதிகோரி இக்கட்டுரையை அன்னாரின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

*தே. சு. முத்துகுமார சுவாமி சிவாச்சாரியார்*
*கிழக்கு தாம்பரம்*

# சிறந்த சிவாச்சாரியார்

ஸ்ரீஷண்முகரத்ன சர்மாவின் வைரவிழா நமது மதிப்பிற்குரிய சர்மா அவர்கள், கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகரையே முழுமூச்சாக நம்பி சுமார் அறுபது ஆண்டுகளாக வழிபட்டு வரும் ஆன்மீகச் செல்வர். ஆகமசாஸ்திரம் கூறுகிறது, "ஆண்டவன் – அர்சகரின் அடக்கம்" அடைக்கலப் பொருள், என்று " அர்சகபராதீன:ஹா:"

நமது வேதமானது ஒரு கேள்வியை எழுப்பி, அதுவே ஆராய்ச்சி செய்து பதிலாக ஒரு முடிவுக்கு வந்தது. அதாவது, மூன்று உலகத்திலும் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது விலை மதிக்கமுடியாது. அழியாத, உயர்ந்த சிறப்புப் பொருள் ஆண்டவனின் திருவடி என்றது. பிறகு அதிலும் மிக உயர்ந்து ஒப்பு உயர்வு இல்லாத ஒரு பொருள் முடிவானது என்று முடிவு செய்தது. அதுதான் ஆண்டவன் திருமேனியை தீண்டி, அர்ச்சனை, அபிஷேகம் அலங்காரம் செய்யும் அர்ச்சகனின் திருக்கரமாகும். இதனை சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில், பொது அடியார்களைக் குறிப்பிடும்போது "முப்போதும்–திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன் என்றார்.

இதனையே வேதமும் – 'அயம்மே, ஹஸ்தோபகவான் அயம்மே – பகவத்தர:' என்று உரைக்கிறது. பகவானைக் காட்டிலும் சிறந்தது, உயர்ந்தது பெருமானின் திருமேனியைத் தொட்டு, 'அபிஷேக அலங்கார, அர்ச்சனை முதலியன செய்யும் கைகள்தான் மிக உயர்ந்தவை என்று வேதம் கூறுகின்றது. நமது சர்மா அவர்கள் வாழ்க்கையே பெருமானுக்கு அர்ப்பணித்தவர். அறுபது ஆண்டு தொண்டு செய்தவர். ஆரம்பத்தில் விநாயமூர்த்திக்கு மிகச் சிறிய கோயில் தான் இருந்தது. பிறகு இவரின் முயற்சியால் நடுத்தரமான சிறு கோயிலாக அமைந்தது. 1986–87ல் பெரிய மண்டபமும், பெரிய ராஜ கோபுரமும் அமைந்து மிக சிறப்பாக விளங்குகிறதை அனைவரும் காண்கிறோம்.

சர்மா அவர்களே – பால செல்வ விநாயகர். விநாயகரே சர்மா. சர்மா அவர்களின் நினைவெல்லாம், செயல், எல்லாம், நேரம் எல்லாம், விநாயகர் தான். வீட்டில் பகல் இரண்டு மணிக்கும் அரைமணிக்கு ஒரு தடவை எழுந்து கோயிலுக்குப் போவார். மழையிலும் கோயிலுக்கு ஒடி ஒடி போவார். நிற்க கோயிலை விட்டு வேறு எங்கும் போகமாட்டார். மிக அவசியம் ஏற்பட்டு இந்தியாவுக்கு வர நேரிட்டால் இரண்டு நாளில் திரும்பி விடுவார். மக்கள் அழைப்பால் சிங்கப்பூர், மலேசியா கனடா முதலிய இடங்களுக்குச் சென்றாலும் ஒரு வாரத்திற்கு மேல் தங்குவதில்லை.

நிற்க, சர்மாவும், அம்மாவும், அன்னதானத்தில் சிவனும் அன்னபூர்ணேச்வரியாகவும் விளங்குகிறார்கள். இந்தியாவிலிருந்தோ வேறு இடங்களிலிருந்தோ யாரும் வந்தால் சர்மா தம்பதிகளை விட்டு வேறு யாரும் கிடையாது. மேலும் அவரவர் வீட்டிலிருப்பது போலவே உணர்வார்கள். விருந்து உபசரிப்பும் அவ்வாறே நடக்கும். குறிப்பாக 1985ல் நடந்த அசுவமேத மகாயாகத்திற்கு ஐம்பதுக்கு மேற்பட்ட சிவாசாரியார்களும் புலவர்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது அனைவருக்குமே, சாப்பாடு முதலாய உபசாரங்களும், அனைவருக்கும் பொன்னாடை முதலிய பாராட்டும் அன்னாரால் செய்து வைக்கப்பட்டது.

பால செல்வ விநாயகர் திருவருளால் எல்லாச் செல்வமும் பெற்று விளங்குகிறார். அன்னாருக்கு 'சதாபிஷேகம் என்ற திருவிழா தாது வருஷம் சித்திரை மாதம் 20ம் தேதி வியாழக்கிழமை சதுர்த்தியன்று நடைபெறுகிறது. அன்ற நரசிம்ம மூர்த்தி அவதரித்த திருநாள் நரசிம்ம ஜயந்தியாகும்.

அன்னாரின் மக்கள் தந்தையைப்போலவே பண்பிலும் – பக்தியிலும் சிறந்தவர்கள். அவர்கள் வற்புறுத்தி இந்த விழாவைச் செய்கிறார்கள். அன்னாரின் குடும்பமும் சுற்றம்சூழலும் சகல பாக்யங்களுடனும் வாழ ஆண்டவனை வேண்டுவோமாக. சர்மா தம்பதிகள் நூற்றாண்டு வாழ்ந்து நம் அனைவரையும் ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

*வணக்கம்.*

அன்பு அகலாத
சுக பிரும்மம்,
சென்னை.

கணேசாய நம
ஸ்ரீ குருப்பியோ நம

கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தானத்தில் அறுபது ஆண்டுகட்கு மேலாக சிறப்பு பூஜைகளையும் ஆலயத்தையும் வழிநடத்திய பெருந்தகை அந்தணர் திலகம் சமாதான நீதிபதி கிரியாசிரோன்மணி வேதாகம கிரியா சூடாமணி பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரத்தினக் குருக்கள் அவர்களின் சதாபிஷேக விழாவில்

# வழங்கப்பட்ட மதிப்புரை



சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இலங்காபுரியின் தலைநகராக விளங்கும் கொழும்பு மாநகரின் கண்ணே கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயம் மிகவும் புராதனமானது. இவ்வாலயத்தில் பலவசதிக்குறைவான காலத்திலிருந்தே பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரத்தினக் குருக்கள் பிரதம குருக்களாக பூசைகளையும் ஆலயத்தையும் வழிநடத்தியும் சைவமக்களை ஈர்க்கும் வகையில் பூசைகளை நடத்தி தம்மை பால செல்வ விநாயகரின் தாசனாக அமைத்துக் கொண்டார். எனவே அவரின் அயராத உழைப்பும் தன்னலம் கருதாத மனப்பான்மையும் சில காலங்களில் சபையைக் கூட்டி ஆலயத்தை திருத்தி அமைத்து முறைப்படி கும்பாபிஷேகத்தை பிரபல உத்தம சிவாச்சார்யர்களைக் கொண்டு நடத்திய பெருமைக்குரியவர்.

அவரின் ஜனனஸ்தானம் சைவம் வளர்த்த நாவலர் பெருமான் அவதரித்த நல்லை நகராகும். அங்கும் இவரின் குலதெய்வம் விநாயகரே. இவர்தக்க பிராயத்தில் உபநயனம் செய்யப்பெற்று சுன்னாகம் பிராசீன பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிந்த தமிழ்நாடு சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதபாஷை கற்றும் பல சிவாச்சார்யர்களின் போதனைகளைக் கேட்டும், ஆரியதிராவிட பஷாபிவிருத்தி சங்கதலைவர் உயர்திரு. தி. சதாசிவ ஐயா அவர்களிடம் வைதீக ஆகம கிரியைகளை நெறிப்படகற்றதும் கொழும்பு வந்து பல ஆலயங்களில் கடமை செய்துபின் நிரந்தரமாக கப்பித்தாவத்தை பாலசெல்வவிநாயக மூர்த்தியிடம் தமது நிலையை திடப்படுத்தியும் சகல மக்களது பெருமைகளையும் அன்பையும் ஏற்றுக்கொண்டு ஆலயத்தை புதுப்பித்து மெருகூட்டி சித்திரவர்ண வேலைப்பாடுகளுடன்கூடிய கர்ப்பகிரகம் மண்டபங்களை அமைத்து மகாகும்பாபிஷேக விழாவை கொழும்பு சர்வ கிரியா திலகம் சோ. விஸ்வநாத சிவாச்சார்யர், நயினை ஐ. கைலாசநாதக்குருக்கள் பிரதிஷ்டா பூஷணம் அவர்களின் தலைமையில் ஸ்வர்ணபந்தன மகாகும்பாபிஷேகத்தை நடத்தி விநாயகர் திருவருள் கிடைக்கப் பெற்றார்கள்.

பல அன்பர்களின் உதவியைக் கொண்டு கதிர்காமத் தொண்டர் சபையைக் கூட்டி கட்டிடத்தை நிர்மாணித்தும் அதற்குரிய தளபாடங்களை தனது கணக்கில் கொடுத்து உதவியும் அங்கு கதிர்காம திருநாள் தினத்தில் புராணபடலம் யாத்திரிகர்கள் வந்து கூடி ஆறுதல் பெற்றும் அன்னதானத்தையும் நடத்திய பெருமைக்குரியவர். ஆலயத்துக்கு வருகை தரும் சகலமத மக்களிடமும் அன்பு, கருணை, பொறுமை, தயை என்னும் மக்களை ஈர்க்கும் தன்மையாக விளங்கினார். சமய வைபவங்களின் இவருக்கு

அரசாங்கத்திலும் பெருமைகள் கிடைக்கப்பெற்றது குறிப்பிடற்கரியது. இவரின் ஆலயபூசை முறை பரிபக்குவம் என்பனவற்றை கவனத்தில் கொண்ட இந்து சமய பீடாதிபதி பிரம்மஸ்ரீ டாக்டர். கா. கைலாசநாதக் குருக்கள் நயினை பிரதிஷ்டா பூஷணம் பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களினதும் பாராட்டைபெற்றமை குறிப்பிடற்கரியது. யாழ்குருமார் குருகுலத்தில் இவருக்கு கிரியா சிரோன்மணி விருதும் கிடைத்தது.

முதல் நடத்திய மகா கும்பாபிஷேக விழாவில் காரைக்குறிச்சி நாதஸ்வரமேதை திரு அருணாசலம் அவர்களையும் வரவழைத்து இசைமாரி வழங்கியது குறிப்பிடற்கரியதாகும். அனேகமான கலைஞர்கள், சிவாச்சார்யர்கள் உபநியாஸகர்கள் எல்லோரும் கொழும்பு வந்தால் குருக்கள் இல்லத்தில் சென்றுதங்கியும் அவரின் அன்பு உபசரிப்புகளைப் பெற்றும் செல்வது குறிப்பிடலாகும். 1988 ம் ஆண்டில் ஆனிமாதத்தில் பால செல்வவிநாயகருக்கு ராஜகோபுரம் அமைத்து மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடத்த சபையின் ஆதரவில் சென்னை சக்தி உபாசகர், டாக்டர் சாம்பமூர்த்தி சிவாசார்யர் (காளி அம்பாள் தேவஸ்தானம் சென்னை) காஞ்சிபுரம் சிவாசார்ய திலகம் பிரம்மஸ்ரீ இராஜப்பா குருக்களையும் முத்துக் குமாரசாமி குருக்கள் தாம்பரத்தையும் வரவழைத்து அடியேனை தலைமையாக வைத்து மகாகும்பாபிஷேகப் பெரும் சாந்திவிழாவினை சிறப்புற நடத்தியும் மாண்புமிகு அமைச்சர் ராசதுரை அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேலியக் கொடை பூபால விநாயகர் ஆலய அந்தரித பிரதிஷ்டையையும் தலைமைதாங்கி நடத்தி வைத்தார்கள். கொழும்பு ராமகான சபைத்தலைவராகவும் சிவப்பிராமண சங்க உபதலைவராகவும் இருந்து சிறப்பித்தார்கள்.

சென்ற சித்திரைத் திருவிழாவில் பால செல்வவிநாயகப் பெருமானுக்கு ஆலய பரிபாலன சபையாருடன் இணைந்து சித்திரத்தேர் உருவாக்கியும் தேர் உற்சவத்தை வெகு சிறப்பாக நடத்த ஆக்கவேலைகள் மேற்கொண்டு காலை சங்காபிஷேகம், வேத அத்தியயனம் செய்ய இரு சாஸ்திரிகளை சென்னையில் இருந்து வரவழைத்தும், உபன்நியாசகரை வரவழைத்தும் நாதஸ்வர கலாநிதி பெண்மணிகளை வரவழைத்தும் பரமசிவத்தை அருள் நெறிக்கு அமர்த்திய திரு இரத உற்சவத்தை அனைத்து மக்களும் தரிசித்து மகிழ்வுபெறச் செய்தமை பெரும் புண்ணியமாகும். எனவே இவையாவையும் நடத்த ஆலய அறங்காவல் சபையாரும் பொதுமக்களும் குருக்கள் அவர்களுடன் இணைந்து செயற்படுவது பெருமைக்குரிய காரியமாகும்.

இவரினது சிறந்த செயல்களின் தன்மையும் செல்வவிநாயகரின் திருவருளும் சேர்ந்து அன்னாரின் பிள்ளைகள் அனைவரும் இறைபக்தி நிறைந்து மக்களிடம் அன்பு கருணை நிறைந்தவர்களாக பலபாகங்களிலும் வியாபித்து வாழ்வு பெறுகிறார்கள். அதிஉத்தம புத்திர வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ ச. ராதகிருஷ்ண குருக்களும் தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழியே என்னும் பொருள்பட சகல விதமான சக்தி படைத்த பெரும் மகனாகத் திகழ்கிறார்கள் எனவே இவர்கள் அனைவருக்கும் பால செல்வ விநாயகர் திருவருளும் பக்த பெருமக்கள் வாழ்த்துக்களும் வழங்கி விநாயகர் திருவருளும் பக்த பெருமக்கள் வாழ்த்துக்களும் வழங்கி விநாயகர் திருப்பாத கமலங்களில் பிரார்த்தனை செய்வதே சிறப்பாகும். ஆலயபரிபாலன சபையாரும் நன்றி உள்ளவர்களாகவும் குருக்களின் மதிப்புக்குரியவர்களாகவும் அமைய வேண்டியும் பிரார்த்திக்க வேண்டியது எமது கடமையாகும். குருக்களிடம் மிகவும் அன்பு கொண்ட திரு தேவராஜா ஸ்ரீநாதகுருக்களுக்கு வேதாகம கிரியா சூடாமணி என்னும் விருதை வழங்கி சிறப்பித்தனர்.

அமரர் பிரேமதாஸா அவர்களின் அத்தியந்த விசுவாசமான குருவாகவும் மதிப்பு பெற்றுக் கொண்டார்கள். எனவே தெய்வீக விழாவாக அமையும் சதாபிஷேகவிழா சிறப்பாக அமைய வேண்டியும் குருக்கள் இன்னும் பலகாலம் இறைவனுக்கும் பக்தப் பெருமக்களுக்கும் சேவை புரியவேண்டும் எனவும் நினைத்து அன்னாரின் பாதமலர்களை வணங்கி எமது மதிப்புரையை சமர்ப்பிக்கும்.

**சாமி விஸ்வநாதக் குருக்கள்.**

# அறவாழி அந்தணப் பெருந்தகை

சாந்திரத்நாகரம் என்னும் நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

*"மஹாதேவவாச"*

*"சந்திரானாந்து ஸகஸ்ர ........................ பிரபௌத்ர*
*தர்சநாத் வாபி சர்வபாபை பிரமுச்சயதே*
*மஹாபுண்யம் அவோப் நோதி – சதாபிஷேகான்*
*லோகே பூஜ்யதே சர்வமா நவை"*



ஆயிரம் சந்திர தர்சனம் செய்தவரின் புத்திர பௌத்திரர்கள் கூட எல்லா பாபங்களில் இருந்தும் விடுபடுகிறார்கள். பெரிய தான புண்யத்தைப் பெறுகிறார். பிதிர்களுக்கான கடன்களில் இருந்தும் விடுபடுகிறார். ஒருவர் சதாபிஷேகம் செய்யும் பேறு பெற்றால் பெரும் செல்வமும், கீர்த்தியும் ஈற்றில் சுவர்க்கத்தையும் நிச்சயமாக அடைவர்.

இன்று கோலாகலமாக எண்பது ஆண்டு பூர்த்திவிழாக்காணும் பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா அவர்களைத் தெரியாதவர்கள் இங்கு இல்லையென்றால் அது மிகையாகாது. நமது அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரியவர். இவர்கள் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதம குருவாக இருக்கின்றார். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு சிவாசார்யராக இருக்கின்றார். ஒரு கோவிலில் மதிப்புடன் சிவாசார்யராக இருக்க வேண்டுமாயின் பொறுமை, திறமை, அறிவுடமை போன்ற நற்பண்புகள் நீங்காதிருக்க வேண்டும்.

*"அர்ச்சகஸ்ய பிரபாவேண சிவா பவதி சங்கர"*

அர்ச்சகருடைய ஆகம நெறிநின்ற பூஜையினால் சிலையில் தெய்வசாந்நித்தியம் உண்டாகிறது. இவர்களின் பூஜையினால் கோவில், அருளும் பிரபல்யமும்அடைந்தது யாவரும் அறிந்ததே. அந்தணர்க்கு உரிய அறமும் செந்தண்மையும் நீங்காதவர். மறைந்த ஜனாதிபதி கௌரவ. ஆர். பிரேமதாசா அவர்களின் பெரும் மதிப்பிற்குரியவராக இருந்து பல நன்மைகள் சமுதாயத்திற்குச் செய்தமை என்றும் மறக்க முடியாததாகும். பல சங்கங்கள் சபைகளுக்குத் தலைவராகவும், போஷகராகவும் உள்ளார். இந்தியாவிலிருந்து வரும் சிவாசார்யர்கள், சங்கீத மேதைகள், எழுத்தாளர்கள் அனைவரும் இவரிடம் வந்து தங்கி பாராட்டி, பாராட்டு பெற்றும் செல்வார்கள்.

இத்தனை மேன்மைக்கும் பால செல்வ விநாயகரே முதற் காரணமாகும். அதனாலே அவரருளால் எண்பது வயது கடந்த இல்லற ஞானியாக திகழ்வது யாவர்க்கும் தெரிந்ததே. இதைவிட இவர்களின் தர்ம பத்தினி அவர்கள் அக்ஷய பாத்திரம் போன்று எந்நேரமும் யாவர்க்கும் உணவளிப்பது இல்லறத்தின் மாண்பாகும். மக்கள் விழா எடுக்கிறார்கள். அஃது புண்யத்தையும் பெருமையையும் கொடுக்கும். எனவே எனது குலதெய்வமாகிய ஸ்ரீ நாகபூஷணியின் பாதகமலங்களில் மன, மொழி, மெய்யால் அர்ச்சித்து இன்னும் பல்லாண்டு சிறப்புக்களுடன் வாழ வாழ்த்தி வணங்குவோம்.

*பிரதிஷ்டா கலாநிதி*
*வேதாகமக் கிரியா சூடாமணி*
**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**

ஆதீன குரு
ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்,
நயினாதீவு

# நற்பண்புகள் நிறைந்த நல்ல அண்ணா



1933 முதல் 1936 வரை அந்த நாட்களில் எனக்கு 7 முதல் 10 வயதிற்குள் எனது பிறப்பு வளர்வு யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோயில். அக்கோயிலில் எனது தாய் மாமா பூசை புரிந்தவர். வருடா வருடம் மஹோற்சவம் கும்பாபிஷேகம் போன்ற விசேஷங்களை எனது தகப்பனார் செய்து வந்தார் சதாபிஷேகம் பெருமகனை எனது தாயார் கயிலாசபிள்ளையார் கோயில் சீனிஐயர் பேரன் என்று செல்லமாகத் தான் கூறுவர்.

அக்காலம் பிள்ளையார் கோயில் திருவிழாக்கள் விடியும் வரை நடைபெறும் பெரிய மேளம், சின்ன மேளம் என்ற சதிர்க் கச்சேரிகள் நடைபெறும். எனக்குப் பார்க்க விருப்பம். எனது தகப்பனார் தாயார் தனியாக விடமாட்டார்கள். சதாபிஷேகம் காணும் அண்ணா நான் கூட்டிக் கொண்டு போய்க்காட்டி மறுபடி வீட்டில் வந்து விடுவேன் என்று ஐயா அம்மாவிடம் சொல்லிக் கூட்டிக் கொண்டுபோவார்கள். நானும் அவருடன் மிகவும் பிரியமாயிருப்பேன். சனநெருக்கமானால் என்னைத் தூக்கியும் திருவிழாக் காட்டுவார். வீட்டில் சொல்ல வேண்டாம் என்று இனிப்பும் வேண்டித்தருவார். இவை இன்றும் மறக்கமுடியவில்லை.

இப்படியான அவர் தான் ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயில் பிரதம சிவாசாரியர் சிவஸ்ரீ பா. ஷண்முகரத்தின சர்மா அண்ணா அவர்கள். நாங்கள் இருவரும் அத்தியடியில் விளையாடினோம், படித்தோம். இப்பொழுது கொழும்பு நகரில் நீண்ட காலமாக ஒரே ஆலயத்தில் பணிபுரியும் சிவாசாரியர்கள் என்ற கூற்றுக்கு இலக்கணம் வகுப்பவர்களாகவும் உள்ளோம். இவற்றை எண்ணிப் பார்க்கையில் நான் பூரிப்படைகின்றேன்.

எமது சமூகத்தவர்கட்கு உபயோகமாகும் வண்ணம் அகில இலங்கைச் சிவப் பிராமண சங்கம் ஆரம்பித்த காலத்தில் ஆயுள் உறுப்பினராகவும், பல்வேறு பதவியிலும் இருந்து தொண்டாற்றினார். வேதாகம பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற விஷயத்தில் எம்மோடு முன்னின்று செயல் புரிந்தார். சங்கக் கூட்டங்களில் சிறப்பான விஷயங்கட்கு முன்னிடம் கொடுப்பார். "இது கட்டாயம் செய்யவேண்டும் எல்லோருக்கும் நல்லது" என்பது அவர் கூறும் வாக்கியங்கள்.

கோயில் கிரியைகள் முறைப்படி நடக்கவேண்டும் என்பது அவரது கொள்கை. அதனால் சிறு ஐமிச்சமிருந்தாலும் அதனைப் பலரிடம் வினாவித் திருப்திப்பட்ட பின்பே கருமமாற்றுவார். பெருமை என்ற குணம் அவரிடம் சற்றேனும் நான் காணவில்லை.

இலங்கையில் இந்து சமய அமைச்சர்களினால் கௌரவிக்கப்பட்டோர் நாமிருவருமே. அத்தோடு அவர் அகில இலங்கைச் சமாதான நீதவான் என்ற சிறப்பு விருதையும் பெற்றிருந்தார்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுவாக்கு. சர்மா அண்ணா அவர்களின் இளமை முதற் தற்போதைய நிலைவரை எனக்குத் தெரிந்தவரை கூறினேன்.

இளமையின் கல்வி, பண்பு, கலை, கலாச்சாரம் என்பவற்றை முறைப்படி கற்று அவ்வழி நடந்ததால் இவர் எண்பது வயதைத் தாண்டி எல்லோராலும் போற்றக்கூடிய விழா எடுக்கும் நிலையை எய்தியுள்ளார் என்றால் அது போற்றப்படக்கூடிய விஷயமாம். எல்லாம் வல்ல ஸ்ரீ பால செல்வ விநாயகனருளால் சதாபிஷேகம் காணும் சிவஸ்ரீ பா. ஷண்முகரத்தின சர்மா J.P. அவர்கள் மனைவி பிள்ளைகளுடன் பல்லாண்டு வாழ்ந்து எல்லா நலங்களும் சீரும் சிறப்பும் பெற்று மேலும் நல்வாழ்வு வாழ வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமானை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*இங்ஙனம்*
*சி. குஞ்சிதபாதக் குருக்கள்.*
பிரதம குரு
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்
தலைவர்
அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்

# புண்ணிய புருஷர்



## (ஆதீனகர்த்தர் ஸ்ரீ நகுலேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்)
## கீரிமலை

" புருஷே ஸதாயுஸ " என்று நூல்கள் ஏற்றிப் போற்றும் தீமைகளின் ஆக்கம் அதிகரித்துள்ள இக்கலியுகத்தில் மனிதனின் சராசரி ஆயுள் மிகமிக அற்பமானது. நோயினாலும் பஞ்சத்தினாலும் போரினாலும் இயற்கையின் உற்பாதங்களாலும் அழிவே அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் ஐம்பதாண்டுகள் வாழ்ந்தாலே அதிகம் என்று நினைக்கும் பொழுது எண்பத்திமூன்றாண்டுகள் மனைவி,மக்கள்,பேரன், பேத்திகள் புடைசூழ ஒருவர் வாழ்கிறார் என்றால் அவர் நிச்சயம் ஒரு புண்ணிய புருஷராகத்தான் இருக்க வேண்டும்.

அப்படிச் சீரும் சிறப்புமிக்க புண்ணிய புருஷராம் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா தம்பதிகளுக்கு "சதாபிஷேகம்" நிகழ்வது சாலப்பொருத்தமானதே.

தம்பதிகளின் மேலும் மேலும் சர்வாபீஷ்டங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எனது ஆன்ம நாயகர் ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

*சுபமஸ்து.*

# மனிதருள் மாணிக்கம்

அண்மையில் சதாபிஷேகம் கண்டவர் சதாபிஷேகம் காணுபவரை வாழ்த்துவது மிகப் பொருத்தமானது. கப்பித்தாவத்தை பிரம்ம ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் மனிதருள் மாணிக்கம். நற்குணங்களுக்கு இருப்பிடமானவர். கொழும்பு ஸ்ரீ ராமகான சபைத் தலைவராகப் பணிபுரியும் அவர்களால் அந்தண குலமே பெருமைப்படுகிறது. திரு சர்மா தனது மனைவி புத்திர பௌத்திரர்களுடன் இனிது நீடுழி வாழ ஸ்ரீ கௌரியம்பாள் சமேத ஸ்ரீ கேதீஸ்வரப் பெருமானைத் தொழுது வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ சதா. சுப்பிரமண்ய பட்டர்

----------------------------------------ooo----------------------------------------

## கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில், சிவஸ்ரீ . சண்முகரத்னக் குருக்கள் (J.P.) ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள் தம்பதிகளின் (சதாபிஷேக) முத்து விழா

## வாழ்த்து மடல்

அன்பும், அறிவும், பண்பும், பணிவும் மிளிரும் பேராளன் கொழும்பு மருதானை, கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவில், சிவஸ்ரீ சண்முகரத்தினக் குருக்கள் (சர்மா ஐயா) அவர்கள் நற்றவம் பலவும் முற்பிறப்பில் ஆற்றியவர் என்பதனை இப்பிறப்பில் அன்னாரின் ஒப்பிலா உயர்வாழ்க்கை நமக்கு உணர்த்துகின்றது. இல்வாழ்க்கைக்கு பலவகையிலும் ஏற்புடைய துணைவி அமைவதே ஒருவனின் தர்மகாரியங்கள் நிமித்தம் காரணமாகின்றது என பெருநூல்கள் கூறுகின்றன. மேலும், கன்னியொருவளைத் தத்தம் செய்து தரும்போது தர்மத்தைச் செய்வதற்காகவும், தர்மசீலர்களாகிய பிரஜைகளைப் பெற்றெடுப்பதற்கும் இப்பெண்ணைத் தருகின்றேன் என்பர். ஆண்டு எண்பது வாழ்ந்திடினும், தர்மபத்தினியுடன் வாழ்ந்துவரும் காலத்தைத்தான் இல்லற வாழ்வு என்போம். இத்தகைய பேறுகளைப் பெற்றுத்திகழும் குருக்கள் அவர்கள் சிவப் பிராம்மண சங்கம் ஸ்ரீ ராம கான சபா ஆகியவற்றின் தலைமை ஸ்தானத்திலிருந்தும் ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானின் ஆலயப் பிரதம குருஸ்தானத்திலிருந்தும் பல வருடகாலம் ஆற்றிய சமய, சமூக சேவை கண்ட அன்பர்கள் புகழ்ந்து வழங்கிய பல பட்டங்களையும், அரசு வழங்கிய சமாதான நீதிபதி (J.P) பட்டத்தையும் தாங்கி அவற்றுக்கும் எம்மனைவருக்கும் பெருமையுறச் செய்தவர். தேவயக்ஞும், பிதிர்யக்ஞும், மனுஷ்ய யக்ஞும், பூதயக்ஞும், பிரும்ம யக்ஞும் ஆகிய பஞ்சமஹா யக்ஞுகளையும் ஆற்றிவருபவர். உலகின் ஐம்பெரும் கண்டங்களிலும் அவரது சந்ததியினது சம்பந்த உறவினரும் பல்கிப் பெருகி வாழ்வதை எண்ணிப் பூரித்து நிற்பவர். குழந்தைபோல் உள்ளம் படைத்த பெரியவர் அவர் அகவை எண்பதை அடைந்துள்ளதை அவரே கூறுவதானால்தான் அவரைப் பார்ப்பவர்களால் நம்ப முடிகின்றது. சாந்திரமானப் பிரகாரம் நூறு பிறை கண்ட பாக்யவான். அன்பினால் சகோதரராகவும், உறவினால் சிறிய தந்தை சித்தியாகவும் விளங்கும் தம்பதிகள் அண்மையில் கப்பித்தாவத்தையில் நிகழ்ந்த கைலாசநாத சுவாமி மஹா கும்பாபிஷேகத்தின் போது உபசரித்தும் சிறியோனைப் பெருமைப் படுத்தியும் செய்த சிறப்புக்கள் என் உயிரில் கலந்துள்ளன. "நகரேஷு" "காஞ்சி" எனப் புகழப்பெறும் ஸ்தலமான காஞ்சியிலிருந்து ஸ்ரீ பெரியவாளின் ஆசிதாங்கி வருகைதரும் எனதருமை நண்பர். வைதீக சைவீக கிரியா விற்பன்னர், சகல கலா வித்தகர், ஸ்ரீ ராஜப்பாக் குருக்களின் தலைமையில் 02–05–96 ல் முத்து விழாக் காணும் இத் தம்பதிகள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு பலவளங்களுடன் வாழ்ந்து பல்லறங்களையும் பக்தியையும் பரப்பிச் சிவப்பணி புரியப் பரமன் பதம் பணிந்து அவர்தம் நல்லாசிக்காக வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம். வாழ்க வாழ்க. சுபம்.

*திருச்சிற்றம்பலம்*

இங்ஙனம்

சுன்னாகம் நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

வத்சலா (காஞ்சனா)

# அபிஜித் புருஷர்



கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில் பிரதம குருவாக அரைநூற்றாண்டுகளாக இருந்து ஆலயத்தையும், சமயத்தையும், அண்டிவந்தவர்களையும் வளர்த்து விட்ட பெருமைக்குரியவர் இன்று சதாபிஷேக விழாக்காணும் பிரம்ம ஸ்ரீ சண்முகரட்ண குருக்கள் ஐயா அவர்கள். அன்புடன் ஜே.பி. மாமா என எல்லோராலும் போற்றப்படும் இவர் சமய தொண்டுகளுடன் சமூகவளர்ச்சியிலும் ஆர்வமிக்கவராகி அனைவருக்கும் பாகுபாடற்று சேவை செய்தவர். தம்பதிகளை காண்பது,புத்திரரோடு காண்பது, பௌத்திரமித்துருக்களுடன் காண்பது, ஒவ்வொன்றிலும் சிறப்பு, சதாபிஷேக புருஷரை காண்பது கோடி நன்மையாகும். எல்லா வைபவங்களிலும் இருப்தேழு நட்சத்திரங்களையும் ஆராதிக்கும் நாம் சதாபிஷேக வைபவத்தில் (அஷ்டாவிம் சதி) இருபத்தெட்டு நட்சத்திரமாக என்றும் ஒளி உடையதும், புகழுடையமாகிய அபிஜித் நட்சத்திரத்தையும் ஆராதிக்கும் படி (கிரியாக்கிரம ஜோதி) ("சாந்திரத்னாகரம்") ஆகிய நூல்கள் சிறப்பிக்கின்றன. பூரணத்துவமும் சிறப்புடைய இவருக்கு அபிஜித் நக்ஷத்திர தேஜஸ் வந்து விடுவதாகவும் அதனால் அவர்கள் உள்ள இடங்கள் சிறப்பும் நிறைவும் பெறுவதாக சிறப்பித்துக் கூறுகின்றன. இயல்பாக எல்லோரையும் உயர்வடையச் செய்யும் அன்புள்ளமும் உதவி புரியும் நிறைந்த மனமும் உடைய ஐயா அவர்களுக்கு இத்தகைய தேஜஸ் மேலும் சிறப்புத்தருவதாகும். இவரது குணயியல்புக்கேற்ற சிறந்த இல்லாளும் பெருமை தரு புத்திரர்களும் அமைந்தது. இவரது சீரிய வாழ்க்கை நெறிக்கு சான்று ஆகும். இவரது ஆயுளும், ஆரோக்கியமும் உயர்வுற இறைவனை துதித்து இவரது குடும்பத்தவருக்கும் விழாவை நடாத்தும் அனைவருக்கும் ஆசி கூறி இவ்விழாவை பெருமதிக்குரிய ஸ்ரீ ராஜப்பா குருக்கள் காஞ்சியில் இருந்து வந்து நடாத்துவது மிகச்சிறப்புடைய வைபவமாகப் போற்றி மகிழ்ந்து சதாபிஷேக தம்பதிகளின் திருவடிகளையும் தொழுது நிற்போமாக.

நா. சர்வேஸ்வர குருக்கள்
சாந்தி

# பூரணத்துவம் பெற்ற புனிதர்

*"அன்பான பேச்சு வெற்றி தரும்"*
*"கோமள வசனம் குருதே விஜயம்"*



ஒரு தனி மனிதவாழ்வில் பூரணத்துவம் என்பது சாஸ்திரங்களில் கூறியபடி கர்ப்பதானம் முதல் தொடங்கி உபநயனம், விவாஹம், உக்ர ரதசாந்தி, ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், சுவர்ணாபிஷேகம் வரை நீண்டு செல்வதைக் காணலாம். இவ்வாறான சமஸ்காரங்கள் யாவும் அந்தந்த காலங்களில் செய்யப்பட்டு இன்று சதாபிஷேகம் காணும் வாய்ப்பு பெற்ற பெரும் மனித தெய்வமாக உலாவருபவர்தான் சர்மா மாமா என்று வயது பேதமின்றி அன்புடன் அழைக்கப்படும் மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில் பிரதம குருக்கள் அவர்கள்.

தலைநகரில் ஆன்மீக சம்பந்தமான எந்த சபையிலும் போஷகர் அல்லது தலைவராக இருப்பதுங், சமய விழாக்களில் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைப்பது போன்று எதிலும் முதன்மை ஸ்தானம் பெற்று விளங்குபவர் . இன்றைய விழா நாயகர் சிவஸ்ரீ பா. ஷண்முகரத்தின குருக்கள் ஜே.பி. அவர்கள், பாராட்டு விழாக்களிலும் முதல் பாராட்டும் பட்டமும் அவருக்கே இவையெல்லாம் தாமாகவே அவரைத் தேடி வந்தவையொழிய இவர் எந்தவித பதவியையும் பாராட்டையும் தேடி ஓடியதில்லை என்பது யாவரும் அறிந்ததே. இப்பொழுது நடைபெறும் சதாபிஷேக விழாவும் அவருடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் அன்பினால் எடுக்கப்பட்டவிழாவாகும். கடந்த வருடம் அருள்மிகு ஸ்ரீ அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் சந்நியில் (திருக்கடவூர் மிருகண்டு க்ஷேத்திய) தனது 80 வது வயது ஆரம்ப தினத்தை சாந்தி, ஹோமப் பூஜையுடன் நிறைவு செய்து திருப்தி கொண்டவர் என்பது அவருடைய தன்னடக்கத்துக்கு எடுத்துக் காட்டாகும்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக ஸ்ரீ செல்வ விநாயகரை பூஜை செய்யும் மாமாவின் சுக்கிர வார சாயங்காலப்பூஜையும், சதுர்த்திப் பூஜையும் ஆத்மார்த்தமான சிறந்த பக்தியோடு கூடிய பூஜை என்பதை பல தடவைகள் நேரில் தரிசிக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. யாவும் பிள்ளையார், எல்லாம் பிள்ளையார் என்பது அவரின் தெளிவு, திருநாரையூர் நம்பி, வயதில் இளையவர், இவர் முதியவர், இதுதான் வேறுபாடு. கடந்த 1995 புரட்டாதி முற்பகுதியில் ஆஸ்திரேலியா முதல் அமெரிக்கா வரை இமயம் முதல் (ஆசியா) ஆபிரிக்காவரை ஒரு அற்புதம் சமகாலத்தில் நடந்தது. அதுதான் விநாயகன் பால் உண்ட திருவிளையாடல். மாமா அவர்கள் பட்ட ஆனந்தம் அளவிடமுடியாது.

இன்று ஸஹஸ்ரசந்திர தரிசனம் கண்ட மாமா அவர்களுக்கு இவ்வளவு சிறப்பும், பெருமையும் எப்படி வந்தது என்பது தான் யாவரையும் வியக்க வைக்கும் கேள்வி. 1970 களின் ஆரம்பம் முதல் இன்றுவரை எங்கள் அன்பும் தொடர்பும் வளர்ந்து கொண்டே இருக்கின்றார். அன்று அமரர் பிரதிஷ்டா பூஷணம், நயினை க. கைலாசநாத குருக்கள் அவர்களின் அறிமுகத்தினால் கிடைத்த (மாமாவின் ஞானகுரு) வாய்ப்பு இன்று கட்டுரை எழுதுமளவுக்கு வளர்ந்துள்ளது. மேலும் வளர அன்னை துர்க்கா அருளுவாள் என்பது நிச்சயம். அன்று பார்த்த அதே உருவம். இன்று முதுமையிலும் தளராத சுறுசுறுப்பு, யாவருடனும், பெரியோர் சிறியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதார் எனும் பேதமின்றி யாவருடனும் அன்பாகப் பேசுவார். யாரிடமும் கோபம் கிடையாது. கோஷ்டி கிடையாது பொறாமை கிடையாது. அவருடைய அன்பான பேச்சும், யாருக்கும் ஆபத்தில் உதவும் தன்மையும் தான் இன்றைய அவரின் உயர்வுக்கு காரணம் என்றால் மிகையாகயொன்றுமில்லை.

ஸ்ரீ செல்வ விநாயகர் முதற் காரணர் அவருடைய பெருங்குணம் துணைக்காரணி, அவரின் வாரிசான பிள்ளைகளின் அன்பு நிமித்த காரணமாக அமைந்து விளங்கும் இவ்விழா நல்விழாவாக அமைய அன்னை ஆட்கொண்டு அருளும் அன்னை ஸ்ரீ துர்க்கா தேவியை வணங்கி, மாமா தம்பதியினர் பாதம் பணிந்து அமைகின்றோம்

*"வேதாகம வித்யா பூஷணம்"*
**ஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா.**

# "பெருங் குணங்கொண்ட நற்குலத்தோன்"

சிவப்பொலிவுடன் கூடியமேனி, சிரித்த முகம், சினேகமாக எல்லோரிடமும் பழகுஞ் சுபாவம் என்பனவற்றைக் கொண்டு விளங்குபவர் எமது சிவஸ்ரீ. பா. சண்முகரத்னக் குருக்கள் மாமா அவர்கள். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கொழும்பு, ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சார்யராக இருந்து வருகின்றார். மாமா அவர்கள் இப்பொழுது எண்பதைத் தாண்டுகிறார் என்றால் நம்பமாட்டார்கள் ஒருவரும். காலை முதல் இரவு வரை அவர் சுறுசுறுப்புடன் கிரியைகளைச் செய்வதாலேயாம். இவ்வேளையில் மாமா அவர்களின் முக்கிய நிகழ்ச்சிகளை நினைவு கூருகின்றேன்.

## அரச கௌரவம்.

ஆம் ! இலங்கை அரசாங்கத்தால் எமது சமூகத்தில் அகில இலங்கைச் சமாதான நீதவானாக நியமனம் பெற்ற ஒரேயொருவர் சர்மா மாமா மட்டுமேயாகும். அதுமட்டுமல்ல 1988 இல் இந்து சமய அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராஜதுரையின் பாராட்டுவிழா உரையை நோக்குகின்றேன். இவ்விழாவில் மாமா அவர்களுக்கு பொன்னாடை, வாழ்த்துமடல் கௌரவம் அளிக்கப்பட்டது.

ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகங்கண்டு களிப்புற்ற வேளையில் அருட் பொலிவுடன் எல்லோரிடமும் இனிய முறையில் உரையாடும் சிவஸ்ரீ சண்முகரத்னக் குருக்கள் ஐயாவைப் பாராட்ட எண்ணம் உதித்தது என்று புகழாரஞ் செய்தார். பின்பு 1993 இல் இந்து சமய இராஜாங்க அமைச்சர் பக்திப் பெருவிழாவில் இவ்வாறு கூறுகின்றார்.

" சிவாச்சார்யர்கள் சிவத்தொண்டுகளைச் செய்வதோடு மக்களைத் தமது அறிவால் ஆற்றுப்படுத்துதலே பன்னெடுங்காலமாக இருந்து வரும் பண்பாக உள்ளது" எனச் சிறப்புரையாற்றி ஸ்ரீ சண்முகரத்ன மாமா அவர்களுக்கும் பட்டம் சூட்டி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## சிறப்புப் பணிகள்.

அகில இலங்கைச் சிவப் பிராமணசங்கம் மூலம் பிராமணச்சிறார்களுக்கான சமஸ்கிருதப் பாடசாலைகளை கொழும்பு, சுன்னாகம் ஆகிய இடங்களில் நிறுவ ஒத்தாசை புரிந்தமை, மேற்படி சங்க தலைவர், உபதலைவர் பதவிகளில் இருந்தமை, ஸ்ரீ ராம கான சபையின் வளர்ச்சியில் தலைவர், உபதலைவர், செயலாளர் ஆகிய பதவிகள் வகித்தமை.

கதிர்காமத் தொண்டர் சபையின் சமயப் பணிகளில் குறிப்பாக புராண படன காலப் பூஜைகளை ஆரம்பித்து அவற்றை நிறைவு செய்யும் பாங்கு என்பன குருக்கள் மாமா அவர்களால் செய்யப்பட்டு வரும் சிறப்புப் பணிகள் எனலாம். கந்தபுராண படலம் மூலம் இந்து சமயமும் இந்து கலாசாரமும் வளர்ந்து வருகின்றன என்றால் மிகையாகாது.

## பெருங்குணத்தோன்

எனது மைத்துனரின் திருமண வரவேற்புக்கான அழைப்பிதழைச் சுன்னாகம் தபாற் கந்தோரில் நானே நேரிற் கொடுத்தேன். ஆனால் மாமா அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. என்றாலும் கொழும்பில் நடைபெற்ற வரவேற்பில் முதன்முதலாக வந்தோரில் மாமாவின் குடும்பமும் அடங்கும்.

அதாவது நன்மை, தீமை எதுவென்றாலும் காதால் கேட்ட மாத்திரத்தில் தமது குடும்பத்தோடு வந்து பங்கு கொண்டு சிறப்பிக்கும் பெருங்குணம் அவருக்கு அன்றும் இன்றும் உள்ளது.

மக்களும் வாழ வேண்டும் நாமும் வாழ வேண்டும் என்ற இலக்கண வாழ்வினைக் கடைப்பிடித்து எம்மை நன்நெறிப்படுத்தி வரும் சண்முகரத்ன மாமா அவர்கள் மேன்மேலும் எம்எல்லோரையும் வழிநடத்த நீண்ட ஆயுள், திடகாத்திரம், நோயற்ற வாழ்வு என்பனவற்றைக் கொடுத்தருள புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

சோ. குஹானந்த சர்மா
*அகில இலங்கை சிவப்பிராமண சங்கக் காரியதரிசி.*

# இந்து மத பீடாதிபதியின்

## அருளுரை



சிறந்த அருளாளரும், விநாயக உபாஸகருமான சண்முகரெத்தினக் குருக்கள் அவர்கள் ஒரு நல்ல வழியிலே மக்களை இட்டுச் செல்ல ஏற்ற ஊன்றுகோலாக நீண்ட நாளாக விநாயகப் பெருமானுக்குப் அரும்பணி செய்து, நன்மதிப்பு பெற்ற பெருந்தகை, ஆயிரம் பிறை கண்ட அண்ணல், அரசாங்கத்தால் சமாதான நீதிபதி என்று விருது பெற்ற செம்மல் அன்னார் கொழும்பு வாழ் மக்களின் உள்ளக் குகையில் குடியிருக்கும் தெய்வம். எல்லோர் அன்புக்கும் பாத்திரமான மெய்யன்பன். அன்னாருக்கு விழா எடுப்பது மக்கள் செலுத்தும் நன்றிக்கடன் என்று கூறி என அருளுரையை நிறைவு செய்து ஆசி வழங்கி அமைகின்றேன்.

சுபம்

அருள் ஜோதி கந்த. சாம்ப சிவ சிவாசாரியார்.

# நிறைந்த மனிதர்

தேனீயைப் போன்ற சுறுசுறுப்பு, அனைவரையும் காந்தம் எனக் கவரும் புன்சிரிப்பு, விடாமுயற்சி, அன்பு, இனிமை, விருந்தோம்பல் போன்ற அனைத்து நற்குணங்களுக்கும் இருப்பிடமான நிறைந்த மனதர் திரு. சண்முகரத்தின சர்மா அவர்கள் மிக நீண்ட காலமாக அவரை அறிவேன்

திரு அனந்தராமஐயர், திரு. பாலசுப்பிரமணிய ஐயர் போன்ற பெரியோர்களின் முயற்சியால் அந்தணர்களுக்கான வேதக் கல்வியைப் பயிலவும், நடைமுறை கர்மாக்களை வழுவின்றிச் செய்யவும் ஸ்ரீஇராமர் பெயரால் "ஸ்ரீ ராமகான சபை என்ற அமைப்பு உருவாயிற்று இச்சபையின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு பதினைந்து ஆண்டுகாலம் இதன் தலைவராகப் பணியாற்றியவர் திரு. சர்மா அவர்கள்

இன்று சதாபிஷேகம் காணும் இந்நல்லவரை மேலும் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து அந்தண குலத்திற்குத் தொண்டாற்ற ஸ்ரீஇராமபிரானின் கருணையாக வேண்டி வாழ்த்துகின்றேன்.

R.I. சுப்பிரமணியம்
(முன்னாள் ஸ்ரீராம கானசபைத் தலைவர்)

# SATHABISHEKAM OF A CHIEF PRIEST

Rev. Shanmugaratna Sharma was born on 05 the November, 1915 as eldest son for Rev. Sivasri Balasubramania Kurukkal and Srimathi Sarathambal at Nallur, Jaffna. He had his early education in Nallur.

In his age of 23 he came to Colombo and joined as Head Priest at Captain Gardens Sri Bala Selva Vinayaga Moorthy Temple and in Charge of daily Poojas and special functions of this temple. He is functioning as Chief Priest continuously for the last 57 years and never failed to perform his duties.

His great achievements are performing Maha Kumbabishekam in 1951, in 1963 Sambrokshana (Renovation) Maha kumbabishekam and in 1974 Maha Kumbabishekam. He was responsible and performed Raja gopura kumbabishekam (the great tower) in 1988.

Rev. Priest's wife Mrs. Rajaluxmi Ammal has an important role in his successful life. They got married in 1942 and now they are successfully completing their 54 th year in family life with Lord Ganesha's blessings. They have eight sons and three daughters and they are living with all wealth and God blessings. They are living as an example to the saying in "Thirukkural".

In 1977 Rev. Sharma was appointed as Justice of Peace by the Goverment of Sri Lanka for honouring his services rendered to the Society. He was also honoured by the Hindu Culture Ministry and various other religious organisations.

There is a belief in Astrology that a human beings life will be 120 years, that is he/ she is completing all nine "Thisa Puthys" Rev. Sharma has already celebrated his " Shasdiaptha Poorthy" (Completing 60 years) in 1975 and this year he is celebrating his 80 year of his brith.

Their children, well wishers and Temple authorities have decided to celebrate his "Sathabishekam" (80th birth year) on 2nd of May 1996 at Bala Selva Vinayager Temple premises with special religious functions. At this function we are praying, that all blessings of Lord Ganesha for the long life of this family with wealth & fortunes.

**A. Subramania Sarma**
***(Sri Lanka Administrative Service)***



# "சைவத் திருவுடையார்"



ஆயிரம் பிறை கண்ட பிரம்ம ஸ்ரீ சண்முகரத்ன சர்மா அவர்களும் அன்னாரது இல்லக் கிழத்தியாரும் சதாபிஷேகம் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வெளியிடுவதில் உவகையும் இறும்பூதும் எய்துகின்றேன்.

1915 ம் ஆண்டில் பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் மகனாக யாழ்ப்பாணத்திற் பிறந்த சண்முகரத்னசர்மா அவர்கள் 1939 ஆம் ஆண்டு முதல் தமது வாழ்க்கையை ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி ஆலயத்தோடு பிணைத்துக் கொண்டார். பல இடர்கள், ஆபத்துக்கள் ஆகியவற்றின் இடையிலும் அன்னார் அக்கோயிலுக்கு ஆற்றிய பணியினை நான் நேரில் அறிவேன். இக்கோயிலின் இடர் நிறைந்த காலத்தில் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக எனது காலஞ்சென்ற தந்தையார், திரு. குமாரவேற்பிள்ளை அவர்கள் இக்கோயில் வழக்கறிஞராக இருந்துள்ளார். பின்னர் நானும் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்த காலத்தில் எனது தந்தையின் வழியில் இக்கோயில் வழக்கறிஞராக இருந்தேன். எனது சகோதரர் சண்முகராஜா சில ஆண்டுகள் இக்கோயில் அறங்காவலராக இருந்துள்ளார். எனவே பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தின சர்மாவுக்கும் இக்கோயிலுக்கும் உள்ள உறவை நான் நன்கு அறிய எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர்கள் ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயிலுக்குப் பணியாற்றினார் என்றால் அது நிறைவான கூற்று ஆகாது. பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்கள் தமது வாழ்க்கையை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயிலோடு இணைத்து கொண்டுள்ளார் என்பதே நிறைவான கூற்று ஆகும்.

அன்னாரது காலத்தில் 1951 ஆம், 1975ஆம், 1987 ஆம் ஆண்டுகளில் பிரம்ம ஸ்ரீ கைலாசநாதக் குருக்கள், நவாலியூர் பிரம்ம ஸ்ரீ விசுவநாதக் குருக்கள் போன்றவர்களால் கும்பாபிஷேகங்கள் இக்கோயிலில் நடத்தப்பட்டுள்ளன. மேலும் விநாயகப் பெருமானுக்கு ரத கோபுரமும் அமைக்கப்பட்டது. இவரது பணிகளையும் குண இயல்புகளையும் போற்றி இவருக்கு வேதாகம மணி, சிவாகமதிலகம் போன்ற பட்டங்களை அடியார்களும், அறிஞர்களும் அளித்துள்ளனர். அரசினரும் இவரை ஒரு சமாதான நீதவான் ஆக்கினர். பல சங்கங்கள், சபைகள் ஆகியன இவரைத் தலைவராகவும், போஷகராகவும் கொண்டுள்ளன.

சைவத் தமிழுலகிற்கு, சிறப்பாக கொழும்பு வாழ் சைவத் தமிழருக்கு, பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தின சர்மாவின் பணி கிடைக்கக் கூடியதாக அன்னார் தமது இல்லக் கிழத்தியாருடன் இன்னும் பல ஆண்டுகள் உடநல உளநலத்துடன் வாழ இடர்தீர்த்து வெற்றி அளிக்கும் விநாயகப் பெருமான் அருளுவாராக !

கே. விக்னராஜா
*மேல்மாகாண ஆளுநர்.*

# தன்னலமற்ற தலைமையாளர்



சமாதான நீதவான் பாலசுப்பிரமணியக் குருக்கள் சண்முகரட்ண சர்மாவின் 80 வது பிறந்த நாள் பூர்த்தியை முன்னிட்டு வெளிவரும் "சகாயுஷ்ய மலர்" வெளியீட்டு இதழுக்கு வாழ்த்து வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சண்முகரட்ண சர்மா குருக்கள் 06.11.1915 ல் நல்லூரில் பிறந்து கடந்த 55 ஆண்டுகளாக சைவத்திற்கும், தமிழுக்கும் அளப்பரிய சேவை செய்து வந்துள்ளதுடன், இந்நாட்டின் தலைசிறந்த சமய இலக்கிய அரசியல் தலைவர்களால் பற்பல சமயங்களில் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையக (சௌமிய பவன்) அடிக்கல் நாட்டு விழாவை இந்து சமயப் முறைப்படி நடாத்தி வைத்த பெருமை அவருக்குரியது. என்னுடைய சொந்த சமய வைபவங்களிலும், பிறந்தநாள் விழாக்களிலும் மலர்ந்த முகத்துடன் கலந்து கொண்டு அவ்விழாக்களுக்கு அழகும் மணமும் சேர்த்தவர் சண்முகரட்ண சர்மா குருக்கள்.

தனது தன்னலமற்ற உயரிய சேவையால் பல்வேறு பட்டங்களை தனதாக்கி கொண்ட சண்முகரட்ண சர்மா குருக்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் சீரிய தெண்டாற்ற இறைவன் அருள் புரிவானாக!

சௌ. தொண்டமான் பா. உ

தலைவர் இ.தொ.கா.

*கால்நடை அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை அமைச்சர்.*

# அன்பில் உயர்ந்தவர்



கப்பித்தாவத்தை ஸ்ரீபாலசெல்வவிநாயகர் ஆலயம், நாட்டின் புகழ்மிக்க ஆலயங்களுள் ஒன்றாகும். ஜனாதிபதிகளும், பிரதமமந்திரிகளும், அமைச்சர்களும் மற்றும் பிரபலமானவர்களும் அடிக்கடி இந்த ஆலயத்திற்கு வந்து போகும் பெருமை அதற்கு உண்டு.

அருள்மிகு ஸ்ரீ பாலசெல்வவிநாயகரின் அருட்கடாட்சத்தை நாடி வரும் அனைவரும் ஆலய குருக்கள் சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்களது அன்பிலும், பண்பிலும் திளைத்து மகிழ்வதைக் காணலாம்.

வேதாகமமாமணி சண்முகரத்தின சர்மா அவர்கள் மந்திரங்களை சுசடறக் கற்றவர். ஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் முதற்கொண்டு, தமிழ்நாட்டிலும் இலங்கையிலுமுள்ள சிவாச்சாரியார்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நாடளாவிய ரீதியில் அவருக்கிருக்கின்ற நன்மதிப்பின் காரணமாக, முக்கியமான அரச விழாக்களில் இந்து மக்களின் பிரதிநிதியாக பங்குபற்றுகின்றார்.

இந்து கலாச்சார ராஜாங்க அமைச்சுக்கு நான் பொறுப்பாக இருந்த காலத்தில் சிவாகமதிலகம் சண்முகரத்தின சர்மா அவாகளின் ஆலோசனைகளும், கருத்துக்களும் எனக்கு பேருதவியாக அமைந்து என் பணிகளை சிறப்புற செய்ய வழிவகுத்தது.

80 ஆண்டுகளைத் தாண்டி சதாபிஷேக விழா கொண்டாட இருக்கும் சண்முகரத்தின சர்மா அவர்களுக்கு, அன்பும், பணிவும் கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் நீடூழி வாழ ஸ்ரீ பாலசெல்வ விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

*பி.பி. தேவராஜ். பா. உ.*

# சைவ சமய எழுச்சியின் நாயகர்



கப்பிதாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தினசர்மா ஜே.பி. தம்பதிகளுக்கு சதாபிஷேக சுப முகூர்த்த விழா நடைபெறும் இனிய செய்தி கேள்வியுற்று மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

கடந்த 55 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தில் பிரதம குருவாகவிருந்து இவர் ஆற்றிவரும் அளப்பரிய சமய சமூக சேவைகள் யாவரும் அறிந்ததே.

பல இந்துசமய அமைப்புக்களில் முக்கிய பதவிகள் வகிக்கும் குருக்கள் ஐயா, கொழும்பு மாநகரிலே ஒரு சமய எழுச்சி ஏற்பட பாடுபட்டுழைத்து வருகிறார். ஒரு சிறு ஆலயமாகவிருந்த இவ்வாலயத்தை இன்று தலைநகரிலேயே பிரசித்தி பெற்ற ஆலயமாக மாற்றிய பெருமையும் குருக்கள் ஐயாவையே சாரும்.

அன்புடன் அனைவரையும் அரவணைத்துப் பழகும் சுபாவம் கொண்ட குருக்கள் ஐயா தம்பதியருக்கு சதாபிஷேக விழா என்றதும் தலைநகரில் வாழும் இந்துக்கள் மட்டுமல்ல உலக இந்துக்களே பெருமகிழ்வு கொண்டனர்.

சமய அனுட்டானத்துடன் சமூகசேவையையும் பெருமனதுடன் செய்துவரும் குருக்கள் ஐயா போன்றே அவரது புதல்வர்களும் தம்மை வளர்த்துக்கொண்டுள்ளனர். இது குருக்கள் ஐயாவுக்குப் பெருமை தரும் விடயமாகும்.

இன்று நடைபெறும் சதாபிஷேக விழா இனிதே நிறைவுபெறவும் குருக்கள் ஐயா தம்பதி மேலும் நூறாண்டுகள் சீருடனும் சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**க.கணேசலிங்கம் J.P.U.M**

*கொழும்பு மாநகர முதல்வர்*

# பல்லாண்டு வாழ்க!



பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா தம்பதியினரின் சதாபிஷேகத்திற்கு இலங்கை இந்துமன்றங்களின் கூட்டமைப்பாக – உச்ச நிறுவனமாக – விளங்கும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வணக்கத்திற்குரிய சண்முகரத்தின சர்மா தம்பதியினர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து இறைபணிநிறக் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாது வருடம் சித்திரை மீ 4ம் திகதி
16.04.1996

தங்கள் சேவையில்
வி. கயிலாச பிள்ளை
அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்

# பிரம்மாவை வியக்க வைக்கும் பிரம்மஸ்ரீயின் தெய்விகப் பணி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பரமாச்சாரியார் பரிபூரண அனுக்ரஹத்துடன் மங்களகரமான தாதுவருடம் சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்ன சர்மா அவர்களுக்கு சதாபிஷேகப் பெருவிழா நடத்துவது அறிந்து பேருவகை அடைகிறேன்.

சிவாச்சாரியார் பாலசுப்பிரமணிய குருக்கள் – திருமதி சாரதாம்பாள் தம்பதிகளின் தவப்புதல்வராம், சிவாகம பூஷணம் – வேதாகம மாமணி சண்முகரத்ன சர்மா அவர்கள் எண்பது ஆண்டுகளைக் கடந்து, அகவை 81 ல் அடியெடுத்து வைக்கும் இச்சுபவேளையில், இப்படி ஒரு விழாவெடுக்கும் பாக்கியம் பெற்றமைக்கு முழுமுதற் கடவுளாம் விநாயகப் பெருமானுக்கு முதலில் நன்றி கூறுவோமாக !

இறைவனுடைய திருவடிவங்களுள்ளே விநாயக வடிவம் தமிழ் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எந்தக் கோயிலிலும் முதலில் வீற்றிருப்பதும் ஆனைமுகக் கடவுளார் தான் ! தொந்திக் கணபதிக்கு தொண்டு செய்வதே, தொண்டுகளில் சிறந்த தொண்டு எனக்கருதிய பிரம்மஸ்ரீ அவர்கள் பிரம்மாவே வியக்கும் வகையில் ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தின் அர்ச்சகராக 1939 ஆம் ஆண்டு முதல் அரும்பணி ஆற்றுகிறார். அளப்பரிய சேவை செய்து வருகிறார்.

மேலும் பல ஆலயங்கள் கொழும்பு மாநகரில் உருவாக்குவதற்கு இயன்ற பணிகளை இன்றுவரை செய்துள்ளர். யார் எந்த காரியத்தைத் துவங்கினாலும் கப்பித்தாவத்தை கோயிலில் வழிபாடு செய்து துவங்கினால், அது வளமும் – பலமும் பெறும் என்ற உணர்வை ஏற்படுத்திய ஞான மகான் இவர். இவ்வுணர்வு ஆட்சியாளர்களையும், அரசியல் தலைவர்களையும் ஆட்கொண்டமைக்கும் இவரே காரணகர்த்தா !

கடந்த இருபத்தைந்து வருடங்களாக நானும் என் குடும்பத்தினரும் இவரது ஆசிர்வாதத்தை நிதமும் பெறத் தவறுவது இல்லை என்பதை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

எண்பது ஆண்டுகளுக்கு முன்பு முண்டாசுக் கவிஞனின் முழக்கம் இது :–

"பூர்வீக மகான்களின் ஞாபகத்தை தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை ….. "

இந்த வகையில் புகழ்பூத்த பழம்பெரும் சிவாச்சாரியார்களை கௌரவிப்பதும், அவர்களின் சமயப் பணிகளை நினைவு கூர்வதும் தெய்விகப் பணிகளில் ஒன்று என்பதையும் மறுப்பதற்கில்லை. வேதஞான சிரோன்மணி சண்முகரத்தின சர்மா அவர்களுக்காக நடத்தும் சதாபிஷேகப் பெருவிழாவும் நினைவுகளை நீண்டு நிலைக்கச் செய்யும் ஒரு பெரு முயற்சியே !

திருவருட்செல்வர் சண்முகரத்தின சர்மாவின் சமயத்தொண்டு தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் வியாபித்து நிற்கும் – என்றும் வியந்து போற்றும் என்பதில் ஐயமில்லை.

*எம். எஸ். செல்லசாமி*
தலைவர் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ்.

உ

கணபதி துணை

# பிரம்ம ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களின்
## 80வது ஆண்டு விழாவை முன்னிட்டு நிர்வாகசபை உறுப்பினரும்
## சமாதான நீதவானுமாகிய திருவாளர் ஆ. சின்னத்தம்பி அவர்களின் புகழாரம்



பால செல்வ விநாயகனின் கிருபையினால் நான் 1936ம் ஆண்டு கப்பித்தாவத்தை என்ற புண்ணிய பூமியில் காலடி வைத்தேன். அக்காலத்தில் விநாயகப் பெருமானது ஆலயம் சிறிதாக இருந்தது. ஆனால் விநாயகப் பெருமானது கீர்த்தியோ பெரிதாக இருந்தது. அக்காலத்திலே குருக்களையா அவர்களின் மாமனாரே பூசகராக இருந்தார். இவ்வாறு சில ஆண்டுகள் செல்ல 1939இல் செல்வபால விநாயகன் தனக்கு இனிய பூசகராக எமது குருக்களையா அவர்களை நல்லூரில் இருந்து வரவழைத்து அமர்த்திக் கொண்டான். "தாரமும் குருவும் தலைவிதி" என்பர். அதுபோல் கப்பித்தாவத்தையானுக்கு சற்குரு வாய்க்கப் பெற்றார்.

இந்நிலையில் குருவருளும், திருவருளும் வாய்க்கப்பெற்ற செல்வபால விநாயகனுக்கு அரசின் அனுமதியோடு தர்மகர்த்தாக்கள் சபையும் அமைக்கப்பட்டது. அதில் நிர்வாக சபை உறுப்பினர்களாகப பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. V.A. கந்தையா, திரு S.T. கனகசபை, திரு. K. மதியாபரணம், திரு. K. சின்னத்துரை, திரு. V. நல்லசேகரம், ஆகிய இவர்களே ஆரம்பகால பஞ்சாயத்தார்களாகும். இவர்களோடு குருக்களையாவும் இணைந்து கோயிற் சுற்றாடலைச் சீர் செய்து பக்தர்களின் வருகைக்கு ஆவன செய்தார்கள்.

இதனை அடுத்து நிர்வாக சபை உறுப்பினர்களும் குருக்களையாவும் இணைந்து ஆலயக் கற்பக் கிருகத்தையும், முன் மண்டபத்தையும் சிறப்பாக அமைத்து ஆலய மூல மூர்த்தியைப் புதிதாக வைத்துச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்வதென்று தீர்மானித்து அன்பர்களிடம் நிதிசேகரித்து 1951ல் சிறப்பாக மகா கும்பாவிஷேகம் செய்தார்கள்.

இக்கால கட்டத்தில் குருக்களையா அவர்களின் பக்தி நிறைந்த பூசையால் திருவருள் பெருக பக்தர் கூட்டம் நாளொரு வண்ணமாக அதிகரித்து வந்தது. அந்த நேரங்களில் நிர்வாகத்தினரது அக்கறையாலும் குருக்களையாவின் நல்வாக்கினாலும் விநாயகப் பெருமானின் விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, கார்த்திகை போன்ற ஏனைய முக்கிய விழாக்களுக்கெல்லாம் உபய காரர்கள் ஏற்படுத்தப்பட்டு விழாக்கள் சிறப்பாக அமைய ஆலயம் வளர்ச்சிப் பாதையில் செல்லத் தொடங்கியது. இந்த வளர்ச்சிக் காலத்தைப் பயன்படுத்தி பக்தர்களது ஆதரவோடு இரண்டாம் மண்டபமும் இராஜகோபுரமும் சிறப்பாக அமைக்கப் பெற்று 1988ல் மகா கும்பாவிஷேகம் சிறந்த முறையில் நடைபெற்றது. அந்தக் கும்பாவிஷேகக் கிரியை முறைகளும் ஏனைய செயற்பாடுகளும் சிறப்பாய் அமைய குருக்களையா அவர்கள் அயராதுழைத்தார். இவ்வாறு செல்வ பால விநாயகன் ஆலயம் வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சிக் காலத்தின் சிறந்த செயற்பாடாக விநாயகப் பெருமான் எழுந்தருளி வீதிவலம்வர "அறங்காவலர் தலைவர் T. தில்லைநாதன் அவர்களின் விடாமுயற்சியாலும் அக்கறையாலும், நிர்வாக சபையின் அனுசரணையுடனும் குருக்களையா அவர்களின் அயராத ஆதரவாலும்" சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டு 1995ல் வெள்ளோட்டமும் நடைபெற்றது. இவ்வாறு எமது ஆலயம் வளர்ச்சியடைந்து உலகம் போற்ற விளங்குகிறதென்றால் அதற்கு மூலகாரணம் விநாயகப் பெருமானது திருவருளே என்றாலும் அந்தத் திருவருள் வளர மூலகாரணம் குருக்களையாவின் பக்தி நிறைந்த பூசையே என்றால் மிகையாகாது.

குருக்களையா அவர்கள் 57 ஆண்டுகளுக்கு மேல் எங்கள் ஆலயத்தோடு தொடர்பு பட்டு ஆலய வளர்ச்சிக்கு ஆவன செய்தவராகவும், செய்கின்றவராகவும் விளங்குகின்றார். இன்றும் ஆலயப் பூசைகளைப் பக்தி பூர்வமாகவும், மக்களைக் கவரும் விதத்திலும் செய்வது அவரது சிறப்பம்சமாகும். குருக்களையா அவர்களின் வசீகரத் தன்மையினால் அவர் மக்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குகிறார்.

இவர் ஒரு சிறந்த சமாதான நீதவானாகவும், ஸ்ரீராம கான சபாவின் போசகராகவும், சிவப்பிராமணர் சங்கத்தின் உபதலைவராகவும் விளங்குவது எமக்குப் பெருமை தருவனவாகும். யாவற்றிற்கும் மேலாக நொந்த உள்ளங்களை ஆறுதற்படுத்தும் இயல்பான தன்மை, மிக மிக மெச்சத்தக்கதாகும்.

இத்தகைய சிறப்பியல்புகள் கொண்ட குருக்களையா அவர்கள் எங்கள் ஆலயத்தின் பிரதம குருவாக நீண்டகாலம் வாய்க்கப் பெற்றது விநாயகப் பெருமானின் திருவருள் என்றுதான் சொல்ல வேண்டும். எது எப்படி இருப்பினும் நன்றி மறப்பது நன்றன்று ன்பதற்கமைய ஸ்ரீ செல்வ பால விநாயக ஆலய வளர்ச்சிப் படிகள் ஒவ்வொன்றிலும் ஐயா அவர்களின் பங்களிப்பை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து ஐயா அவர்கள் மிகுதிக்காலமும் ஐங்கரனின் பணியை மேற்கொண்டு [illegible] நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று தேகஆரோக்கியத்துடன் வாழ பால செல்வ விநாயகன் அருள் பாலிக்க வேண்டி அனைவர் சார்பிலும் மனமார வாழ்த்தி விடை பெறுகிறேன்.

# பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களின் 80 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவரின் போற்றியுரை



ஸ்ரீபால செல்வ விநாயகரின் அருளை முன்னிட்டு திரு. சண்முகரத்தினசர்மா அவர்கள் 1939 ம் ஆண்டு கோவில் அர்ச்சகராகப் பதவி ஏற்றார். அன்று தொட்டு திரு. சர்மா அவர்கள் கோவில் பெரும் பொறுப்பை தானே திறம்பட நடாத்தி வந்தார். விசேஷமாக எல்லா உபயங்களுக்கும் உபயகாரரை ஒழுங்கு செய்து விழாக்களைச் சிறப்பாக நடாத்தினார். இவைகள் மூலமாக விநாயகப் பெருமானின் கருணையும், அருளும் கடாட்சமும் உலகெங்கும் பரவியது. கோவிலுக்கு வரும் அடியார்களை எதிர்கொண்டு இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்கு தேவையான பூசை முறைகளைச் செய்து அவர்களை மகிழ்வித்து அனுப்பி வைப்பார். இதனால் (ஐயா) அவர்களின் சிறப்பு படிப்படியாக உயர்ந்தது. நிர்வாக சபையுடன் இணைந்து கோவில் திருப்பணி வேலைகளை முன்னின்று முடித்ததில் பெரும் பங்கு அவரையே சேரும். இராசகோபுரம் கட்டி மகா கும்பாபிஷேகத்தை முன்னின்று பொறுப்பேற்று சிறந்த முறையில் நடாத்தி வைத்தார். அந்தக் காலகட்டத்தில் ஐயா அவர்கள் விநாயகர் அடியார்களுடைய மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

1995 ஆம் ஆண்டு சித்திரத் தேர் வடிவமைத்ததற்கும் தர்மகர்த்தா சபையுடன் இணைந்து நல்ல முறையில் செயற்பட்டார். 1995 ஆம் ஆண்டு ஆனி உத்திரத்திலன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. அன்று அவர்கள் ஆற்றிய கிரியை முறைகள்,பூசை முறைகள் எல்லாம் அவர் இவ்வளவு காலமும் கோவிலுக்கு ஆற்றிய சேவைக்கு கிரீடம் வைத்தாற்போல் அமைந்தது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தெய்வ வாக்குக்கு இணங்க ஸ்ரீ சண்முகரத்தின சர்மா ஐயா அவர்கள் அடியார்கள் எல்லோருக்கும் குருவாக வாய்க்கப் பெற்றார் என்பதை மகிழ்ச்சியுடனும் மனப்பூர்வமாகவும் உங்கள் எல்லோருக்கும் அறியத்தந்து அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று, நீண்ட ஆயுளுடன் வாழ விநாயகப் பெருமானை வேண்டி ஐயா அவர்கள் 100 ஆண்டுகள் வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. ரி. தில்லைநாதன்**

# மறையவர் குலமாணிக்கம்

*"வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக."*



எமது சைவம் வளர, அந்தணர், ஆனினம், வேந்தர் வாழவேண்டும் அந்த வகையிலே தனது எண்பதாவது வயதினை எட்டி நிற்கும் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா ஜே.பி., அவர்கள் அந்தணர்களுள் ஓர்மாணிக்கம். அவர் நீடூழி வாழ்க.

எமது சபையின் போஷகரும், கப்பித்தாவத்தை பால செல்வ விநாயர் கோவில் பிரதம குருக்களுமாகிய பிரம்ம ஸ்ரீ. பா. சண்முகரத்தின சர்மா ஜே.பி. அவர்களின் எண்பதாவது வயது நிறைவு விழாவினையொட்டி இந்த நல்லாசிச் செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எனது மறைந்த தந்தை திரு. எஸ். ரீ. சின்னத்துரை ஜே.பி. அவர்கள் தனது வாழ்நாளில் பெரும் பகுதியினை கொழும்பு, கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் கோவிலிலும், கதிர்காமயாத்திரீகர் தொண்டர் சபையின் வளர்ச்சியிலும் பெரும் அக்கறை கொண்டு வாழ்ந்து வந்தவர். அந்தவகையினிலே இக்கோயிலின் பிரதம குருக்களாக நெடுங்காலம் இருந்து வரும் சர்மா அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். எனது தந்தையின் காலத்திலிருந்தே கடந்த 60 ஆண்டுகளாக எமது குடும்பத்தின் ஆசானாகவும் மேலும் ஒருபடி மேலாக எமது குடும்ப நண்பராகவும் இருந்து வருகிறார்.

குருக்கள் ஐயா நோய் நொடியின்றி திட ஆரோக்கியத்துடன் இருந்து சைவத்துக்கும், தமிழுக்கும், எமது தொண்டர் சபைக்கும் மேன்மேலும் சேவைகள் செய்து பல்லாண்டுகள் வாழ எல்லாம் வல்ல பால செல்வ விநாயக மூர்த்தியும், கதிர்காமக்கந்தனும் அருள்புரிய வேண்டுமென வேண்டுகிறேன்.

அன்னாரின் எண்பதாவது வருட நினைவு "சதாயுஷ்ய" விழாசிறப்புடன் அமைய எனது நல்லாசிகள்.

*சுபம்*

*ச.த.சி. அருளானந்தன் ஜே.பி.*
*தலைவர்*
*கதிர்காமயாத்திரீகர்*
*தொண்டர் சபை – கொழும்பு.*

''லீலா இல்லம்''
பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு – 12

# " சதாபிஷேக நாயகர்"



கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயர் கோவில் பிரதம குருக்களும் சமாதான நீதிவானுமாகிய பிரம்மஸ்ரீ பா.சண்முகரத்தின சர்மா அவர்களது எண்பதாவது வயது நிறைவு " சதாபிஷேக" விழாவினையொட்டி இந்த பாராட்டுச் செய்தியினை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தலைநகர் கொழும்பினிலே உள்ள பழம்பெரும் கோவில்களில் ஒன்றான இற்றைக்கு 200 வருடங்களுக்கு மேலான சரித்திரத்தை உள்ளடக்கிய கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தில் 1939ம் ஆண்டு தொடக்கம் பிரதம குருக்களாக சர்மா ஐயா அவர்கள் சேவையாற்றி வருகின்றார். அவரது காலகட்டத்தில் இவ்வாலயம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது. 1988ம் ஆண்டில் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது பிரதம குருக்களாகிய சர்மா ஐயா அவர்களின் சேவையும் பங்களிப்பும் காலத்தால் அழியாதவை. 57 ஆண்டுகள் தொடர்ந்து இவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியாராக இருந்து ஆலய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறார் என்பது இவரது வாழ்வின் சிறப்பம்சமாகும். அவரது வழிகாட்டலில் அவரது பிள்ளைகளும் இவ் ஆலயத்திற்கு சேவையாற்றி வருகின்றார்கள். புதல்வர்களில் ஒருவரான ராதா குருக்களும் தற்போது தந்தையுடன் இணைந்து சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்.

காலஞ்சென்ற எனது தந்தையார் சிந்தனைச் சிற்பச் செல்வர் ச.த.சின்னத்துரை ஜே.பி. அவர்கள் 1948ம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தின் அறங்காவலர்களில் ஒருவராக இருந்து சேவையாற்றி வந்த காலம் முதல் எமது குடும்பத்துடன் நெருங்கிய நட்புறவுடன் வாழ்ந்து வருகிறார். எனது மழலை பருவம் தொடக்கம் ஐயா அவர்களுடன் மிகவும் அன்பாக பழகி வந்திருக்கின்றேன்.

எமது கொம்பனித்தெரு முருகன் ஆலய விசேட நிகழ்ச்சிகளிலும் கிரியைகளிலும் சர்மா ஐயா அவர்கள் கலந்து கொண்டு விழாக்களைச் சிறப்பித்திருக்கின்றார் என்பதை மிகவும் பெருமையுடன் நினைவு கூறுகின்றேன்.

சர்மா ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் குறிப்பாக கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலயத்துக்கு மேன்மேலும் சேவைகள் செய்ய வேண்டுமென்றும் அவரது சதாபிஷேக விழா மிகவும் சிறப்புடன் அமைய வேண்டுமென்றும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

*"மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்*

சின்னத்துரை தனபாலா ஜே.பி.
திருப்பணிச் சபைத் தலைவர்
அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோயில்

# குணங்களின் நிறைவு



*அன்புடையீர்,*

நடமாடும் தெய்வங்களாக மதிக்கப்படவேண்டிய ஒரு சிலரில், பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மாவும் ஒருவராவர். *1948* ம் ஆண்டு தொடக்கம் ஐயா அவர்களை நான் அறிவேன். முகத்திலே எந்நேரமும் புன்சிரிப்பு, பேச்சிலே அடக்கம், நெஞ்சிலே கனிவு ஆகிய நற்குணங்களை தன்னத்திலே கொண்ட பெரியவரை வாழ்த்துவதற்கு சிறிதும் அருகதை இல்லவிட்டாலும் மேலும் பலகாலம் வாழ வேண்டும், தெய்வத் தொண்டும், நற்பணியும் மிளிர வேண்டும் என்று என் குல தெய்வமாகிய அன்னை பராசக்தியின் பாதங்களிலே வணங்கி அமர்கின்றேன்.

17, மயூரா பிளேஸ்,
கொழும்பு – 6.

பொன். வல்லிபுரம் ஜே.பி.
*தர்மகர்த்தா*
*மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்.*

# அந்தணப் பெருமானுக்கு அகிலம் எடுக்கும் பெருவிழா



அளவுகடந்த ஆத்மமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி நடைபெறும் நன்னாள் இந்நாள். ஆயிரம் பிறைகண்ட அருமையான அந்தண சிரேஷ்டர் சண்முகரட்ண சர்மாவிற்குப் பெருவிழா எடுக்கும் பெருநிகழ்ச்சி அல்லவா. அதிலேயும் எனக்கென்று ஒரு தனிப்பெரும் மகிழ்ச்சி என்னவென்றால், நான் பிறந்து முதற்கண்ட முதற்பிறை அன்றே அருகிருந்து வாழ்த்திய அந்தண திலகர் இவர். இன்று அவரே ஆயிரம் பிறை காணும் அரிய வேளையில் அவரை நாம் க்ண்டு அவர் வாழ்த்தைப் பெறுகிறோம் என்றால் அது எம்முன்னோர் செய்த தவப்பயனே.

அறுபது ஆண்டுகளாக கொழும்பு மாநகரிலே தொடர்ந்து சிவாச்சாரியராக விளங்கும் பேற்றினாலே வரலாற்றிலே பொறிக்கப்படும் பெருமையையும் பெற்றுவிட்டார்கள். அத்தனை சிவாச்சாரியர்களுள்ளும் இன்று கொழும்பு மாநகரிலே ஆகக் கூடியகாலம் திருமேனி தீண்டிப் பூசனை செய்யும் சிவாச்சாரியர் இவரே. அதுவும் தலச்சிறப்பு மிக்க தலைநகரிலே ஒரே கோயிலில் தொடர்ந்து பெரும் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார் என்றால் எத்தனை சரித்திரம் படைத்து விட்டார்.

முழுமுதற் கடவுள் வீற்றிருக்கும் திருத்தலம் கப்பித்தாவத்தை. இங்கே வந்த மகான்கள் எத்தனை எத்தனையோ. ஈழத்துச் சரித்திரத்திலே இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தலைநகரில் தங்கிப் பெரும் சித்துக்கள் செய்தவர்கள் பெரியானைக் குட்டி, சித்தானைக் குட்டி சுவாமிகள் இருவரும். இவர்களுள் கொழும்பிலே முகத்துவாரத்தில் சமாதிகொண்ட பெரியானைக் குட்டி சுவாமிகளை எங்ஙனம் அடியார் ஈனமுத்து கப்பித்தாவத்தையில் உபசரித்தாரோ அதே வழியில் இன்று சண்முகரட்ண சர்மா அவர்கள் எத்தனையோ மகான்களை உபசரித்து வருகிறார்கள்.

எத்தனை மகான்கள் எத்தனை தபசிகள் எத்தனை கலைஞர்கள் எத்தனை இன்ன பிற ஆன்றோர்கள் எல்லாரும் இங்கே உபசரிக்கப்படுவதைக் காண்கிறோம். இதிகாச காலத்துக்குப் பின் இலங்கை பம்பலப்பிட்டியில் நடத்தப்பட்ட மகா அஸ்வமேத யாகத்தின் போது நாலா திக்குகளிலிருந்தும் கடல் கடந்தும் வந்த பற்பலருக்கும் அமுது தந்து பெரும் புகழ் கொண்டார். எங்கள் மதிப்புக்குரிய சண்முகரட்ண சர்மா அவர்கள். ஈழத்துச் சிவாச்சாரியர் வரிசையில் முக்கிய பங்காற்றி போற்றுதலுக்குரியவரானார். பாரத நாட்டு சிவாச்சாரியர்கள் இவரது பக்குவ நிலையை உணர்ந்து வியந்து "சிவாகம திலகம்" என்று பட்டம் சூட்டி மகிழ்ந்தார்கள்.

ஐம்பது ஆண்டு ஆலய சேவை பூர்த்தி நலம் கண்டு அன்றைய அமைச்சர் சொல்லின் செல்வர் இராஜதுரை அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு "சிவாகம பூஷணம்" என்னும் பட்டமும் பெற்றார்கள். பின்னர் இராஜாங்க அமைச்சர் தேவராஜ் காலத்தில் 'வேதாகம மாமணி' என்னும் உயரிய விருது பெற்றார்கள். இப்பட்டம் பொறிக்கப்பட்ட பட்டயத்தை, அருள்மொழி அரசர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் திருக்கரத்தினாலே பெறும் பேறு பெற்றார்கள்.

அரசினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற பெருமைக்கும் உரியவர் சண்முகரட்ன சர்மா. நாடாள்வோர் எல்லாம் நம்பிக்கையோடு வ்ந்து எம்பெருமானைத் தரிசித்துப் பின் சண்முகரட்ண சர்மாவிடம் விபூதி பெற்றுச் செல்வதைப் பார்க்கும் போது இவரது ஆசியைப் பெறுவதில் அந்நிய மதத்தினராயிருப்பினும் அரசாள்வோர் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்க்ள் என்பதைக் காண்கிறோம். அதே சமயத்தில் கோயிலுக்கு வரும் பக்தர் கூட்டம் எவ்வளவு பெருகினும், அனைவருடனும் அன்பைப் பகிர்ந்து அவர்களை எல்லாம் இறையருளுக்கு ஆளாக்குகிறார். இவருக்குத் துணையாக இவரது குமாரர் ராதா கிருஷ்ன சர்மாவும் கூடவே இருந்து அருஞ்சேவை ஆற்றுகிறார்.

சண்முகரட்ண சர்மாவின் வழிகாட்டலின் பேரில் எத்தனையோ ஆலயங்களில் நியமனம் பெற்ற சிவாச்சாரியர்கள் பலர். இது இவர்மேல் ஏனைய ஆலயத்தோர் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

அந்தணர் பெருமானுக்கு அகிலம் எடுக்கும் பெருவிழாவிற்கு கடல் கடந்தும் சான்றோர் சமூகமளிப்பது சமூகம் அளிக்கும் பெருமதிப்பை எடுத்துக் காட்டுகிறது.

உலக இந்து சமய மகாநாட்டில் பொறுப்போடு ஆற்றிய பங்களிப்பு இவரைச் சமய உலகம் அங்கீகரித்ததைத் தெளிவாகக் காட்டுகிறது.

சண்முகரட்ணசர்மாவின் கிருகலக்ஷ்மியாக இராஜலக்ஷ்மி அமைய, நன்மக்கட் பேறுபெற்று நிறை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியவரின் காலத்தில் நாமும் வாழப் பெரும் பாக்கியம் செய்திருக்கிறோம். போற்றுதலுக்குரிய எங்கள் ஐயரவர்கள் இன்னும் பொலிவுடனே பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே என வாழ்த்துவோம்.

*அறங்காவலர், சிவநெறிச் செம்மல், சிவநெறிப் புரவலர்*
*திரு. செந்தில்வேள்* **J.P.**

# மூத்த குரவர்



மூத்த சந்ததியை சார்ந்த ஒருசில இந்துமத குருமார்களே இப்பொழுது இலங்கையில் வாழ்கின்றார்கள். அத்தகைய ஒருசிலரில் முன்னணியில் வைத்து எண்ணக்கூடிய பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா குருக்கள் ஜே.பி அவர்கள் 80 வயதை பூர்த்தி செய்துள்ளார்கள் என்பதை அறியும்பொழுது மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

80 ஆவது வயது நிறைவை முன்னிட்டு '' சதாபிஷேகம் '' நடாத்துவதற்கும் இவ் அபிஷேகத்தையொட்டி "ஸதாயுஷ்ய மலர்" ஒன்று வெளியிடுவதும் சாலவும் பொருத்தமானதே.

தெய்வத்துக்கு மலர் தூவியும், தீபம் காட்டியும் அர்ச்சனை செய்கின்ற சிவாச்சாரியார்கள் இயல்பாகவே உயிர்களிடத்தில் அன்பை செலுத்தி ஏனையோருக்கு முன்மாதிரியாக வாழ்கின்றார்கள்.

இந்தவகையில் நோக்குகின்ற பொழுது கப்பிதாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவாகவும், ஸ்ரீ ராமகானசபை தலைவராகவும், அகில இலங்கை சிவ பிராமண சங்கத்தின் உப தலைவராகவும் பல்வேறு பதவிகளை வகித்தும் சமய சமூக பணிகளில் ஈடுபட்டும் இச்சிவாச்சாரியார் தொண்டாற்றி வருகின்றார்.

இவருடைய இறைபணியும் பொதுத் தொண்டும் தொடர்ந்தும் பல்லாண்டு நீடிப்பதற்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த சுகத்தையும் அருள்வாராக.

திரு , இ, யோகநாதன்
கலாசார சமய அலுவல்கள் அமைச்சின்
மேலதிகச் செயலாளர்.

# “அந்தணர் என்பர் அறவோர்”



கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தின் பிரதான சிவாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சண்முகரட்ண சர்மா அவர்களின் 80 வது வருட பூர்த்திவிழா நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

*“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலால்”*

என்னும் வள்ளுவரின் குறளுக்கேற்ப வாழ்ந்து காட்டி ஆலய திருப்பணிகளுக்கு அயராது பாடுபட்டு வருபவர். சிரித்த முகமும் அடக்கமான பேச்சும், அருட்பார்வையும் கொண்ட சர்மா அவர்களின் பணியானது இந்துசமய மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆரம்பமான காலம் தொடங்கி இன்றுவரை திணைக்களத்தின் நடவடிக்கையில் கூடிய பங்கெடுத்து செயலாற்றி வருபவர். இவரது சேவையினைப் பாராட்டி திணைக்களம் வேதாகம மாமணி என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்துள்ளது.

அகில இலங்கை சிவப்பிராமணர் சங்கத்தின் உபதலைவராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பல பதவிகளை வகித்துவரும் சண்முகரத்தின சர்மா அவர்களின் 80 வது பூர்த்தி ஸதாயுஷ்ய விழா இனிது நடந்தேறவும் இன்னும் நீடித்த காலம் வாழ்ந்து ஆலய திருப்பணிகளுக்கு தன் உழைப்பை வழங்கவும் எல்லாம் வல்ல திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி சாந்தி நாவுக்கரசன்
*பிரதிப்பணிப்பாளர்*
*இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்*

# சான்றாண்மை மிக்க
# சண்முகரத்தின சர்மா

கொழும்பு மாநகரைத் தம் வசிப்பிடமாகக் கொண்ட பிராமணோத்தமர்களில் தலை சிறந்த ஒருவராகத் திகழ்கின்றார் பிரம்மஸ்ரீ பா. சண்முக ரத்தின சர்மா அவர்கள்.

பல்லாண்டு காலமாக அவர் கொழும்பு கப்பித்தா வத்தை அருள்மிகு ஸ்ரீ பால விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களாக அமர்ந்து ஆற்றிவரும் சைவப் பணி, கணிப்புக்கும், மதிப்புக்கும், புகழுக்கும் உரியதொன்றாகும்.

வேதாகம விஷய ஞானத்திலும், கணித ஜோதிஷக் கலைகளிலும் விற்பன்னராக விளங்கும் *சான்றாண்மை மிக்க சண்முகரத்தின சர்மா* அவர்கள், பண்பிலும், உளப்பாங்கிலும் மிக மிக உயர்ந்தவராவார்.

அன்பும், அனைவரையும், சமமாக மதிக்கும் தன்மையும், இதமான பேச்சும், பணிவான போக்கும், இரக்கமும், கருணையும், இழிந்தவை எண்ணாத ஏற்றமும், ஒப்புரவும், அவரை "செந்தண்மை பூண்டொழுகும் ஓர் அந்தணராக" நம் கண்ணில் நெஞ்சில் நிலை நாட்டுகின்றன.

பிரம்ம ஸ்ரீ சண்முசரத்தின சர்மா அவர்களின் மற்றுமொரு சிறப்பு, அவரிடம் குடி கொண்டுள்ள சர்வ சமய சமரஸ மனோபாவமாகும். இந்த மனோபாவத்தினால், அவர் கொழும்பில் சகல இன மக்களின் நன்மதிப்பையும், போற்றுதலையும் பெற்றவராகிறார். அவ்வாறே சகல கட்சிகளைச் சார்ந்த உயர்மட்ட அரசியல்வாதிகளுக்கும் அவர் அபிமானத்துக்குரியவராக மிளிர்கின்றார்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் சனாதன தர்ம போதனைகளை அவர் ஆன்மிக ஈடுபாட்டுடன் ஏற்றுக் கொள்கிறார். அதனால் சாயி அன்பர்களிடையே அவருக்குத் தனி மதிப்புண்டு.

எண்பது அகவு நிறைவினை அடைந்துள்ள பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்களை, அவருடைய சதாபிஷேக சமயத்தில் மன நிறைவோடு பாராட்டுகிறோம். வணங்குகிறோம்.

அன்னார், எல்லா நலனும் பெற்று, மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ, சொல்லும் மனமும் கடந்து நிற்கும் அருள்மிகு வல்ல ஸ்ரீ பால செல்வ விநாயகரை அடிபணிந்து சிரந்தாழ்த்தி வேண்டுகின்றோம்.

*எஸ். டி. சிவநாயகம்,*
*தலைவர்*
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
கொழும்பு மத்திய நிலையம்.

# அறியாமே வந்து ஆட்கொண்ட உத்தமர்



*"தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"*

என்றார் திருமூலர். திருமூலர் கூறிய மேற்சொன்ன நிலைக்கு நம்மை நெறிப்படுத்தி நம்மைத் தம்பால் ஈர்க்குந் தன்மைத்தான சிவாச்சாரியப் பெருந்தகை பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களின் சதா அபிடேகச் சிறப்புப் மலரில் ஏழையேனின் செய்தியும் இடம்பெற என்ன தவம் செய்தேன் யான். "நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நிற்கும்" திருவருள் வழி நடத்துகின்றது.

கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் ஆலயத்தில் 1939 ம் ஆண்டு முதல் (அரை நூற்றாண்டுக்கு மேலாக) குருவாக அமர்ந்து செந்தண்மை பூண்டொழுகுந் தவசீலர் பா. சண்முகரத்தின சர்மா பால சுப்பிரமணிய சர்மா அவர்களினதும் அவர் பாரியார் சாரதாம்பாள் அம்மையாரும் ஆற்றிய தவத்தின் பேறாய் அணைந்தோரை வாழவைக்க அவதாரமாயினர் நமது சர்மா அவர்கள். முழுநீறணிந்து முப்போதுந் திருமேனி தீண்டி நாம் வாழ அவர்கள் நித்திய பூஜை செய்யும்போது கண்ணீர் மழை பொழிவது காணுந்தோறும் எம்க்கெல்லாம் மயிர்கூச்செறியும் படாடோபமற்ற எளிமையுருவாகிய சர்மா அவர்கள் அக உணர்வை வெளிக்காட்டும் முகமலர்ச்சியுடன் மக்களை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு நல்லுரைகளையும் நல்லாசிகளையும் வழங்கும் ஈடு இணையற்ற பெருந்தகை. எடுத்த காரியஞ் சித்திபெற முதன்முதலில் விநாயக வழிபாடு செய்வது சைவமரபு. நாம் சித்திபெற விநாயக வழிபாட்டிற்கு எம்மை இட்டுச் சென்று தம் நல்லாசிகளையும் வழங்கும் இக் குருக்கள் ஐயா அவர்களின் ஆசியைப் பெற ஜனாதிபதிகள் மந்திரிமார் உட்பட அரச உயர்பதவி வகிப்பவர்களுடன் ஏழை எளியவர்கள் அனைவரும் இவர் சன்னிதானத்தை நாடுவர்.

தமது திருமணச் சடங்குகட்குக் கிரியா பூஷணமாக ஐயா அவர்களே இருக்கவேண்டும் என ஏட்டிக்குப் போட்டியாக மக்கள் முந்தியடித்துச் செல்வது கண்கூடு. ஐயா அவர்கள் மூவாயிரத்திற்கு மேலான திருமணச் சடங்குகளை நிறைவேற்றியிருப்பது அறியத் தக்கதாய் உள்ளது. ஐயா அவர்கள் மங்கலமான மனை மாட்சியில் இராஜலட்சுமி அம்மையாருடன் நன்கலமாம் மக்களைப் பெற்று மனம் போன்று வாழ்வது போன்றே அவர் இணைத்து வைத்த தம்பதிகளும் வாழ்கின்றனர். அத்தகைய தம்பதிகளுள் நானும் என்மனையாளும் அமைந்துள்ளோம் என்று பெருமிதமடைகின்றோம்.

ஐயா அவர்கள் பெண்களைத் தீர்க்க சுமங்கலிபவ என்றும் ஆண்களைத் தீர்க்காயுஷ்பவ என்றும், வாழ்த்துவர். அவர் வாழ்த்திய வாழ்த்தொலியை அவரின் சதா அபிடேகத்தின் போது, இராஜலட்சுமி அம்மையாரைத் தீர்க்க சுமங்கலீபவ என்றும், அவரைத் தீர்க்காயுஷ்பவ என்றும் மீள் அளிப்புச் செய்து பல்லாண்டு கூறுவதில் என்னுடன் என்மனையாள் பத்மனேஸ்வரியும் பிள்ளைகளும் இணைகின்றனர்.

*"பாடு மனமுடைப் பத்தருள்ளீர் வந்து*
*பல்லாண்டு கூறுமினே"*

**வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை**
தலைவர், விவேகானந்த சபை,
கொழும்பு

# குணமெனும் குன்றேறி நின்றார்

இ. ஜெயராஜ்
*(அமைப்பாளர் கம்பன் கழகம்)*



- மறுநாள் இராமனுக்குப் பட்டாபிஷேகம். தசரதன் இராமனுக்கு அறிவுரைகள் கூறுமாறு வசிட்டரை வேண்டுகிறான்.

- இராமனை அழைத்து, வசிட்டர் அறிவுரை கூறத் தொடங்குகிறார்.

- அவரிடம் இருந்து பிறக்கும் முதல் அறிவுரை :-

*கரிய மாலினும், கண்ணுதலானினும்,*
*உரிய தாமரைமேல் உறைவானினும்,*
*விரியும் பூதம் ஓர் ஐந்தினும், மெய்யினும்,*
*பெரியர் அந்தணர், பேணுதி உள்ளத்தால்*

- இவ்வாறு வசிட்டர் வாயால் அந்தணர்தம் பெருமையை கம்பநாடன் எடுத்தோதுகிறான்.

- அந்தணர்க்கு அறுதொழிலோர் எனக் காரணப் பெயரிட்டு மகிழ்ந்தது நம் தமிழ்

- வேட்டல், வேட்பித்தல், கற்றல், கற்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் அறுதொழிலையும் உலக க்ஷேமத்திற்காக உயர்ந்து நின்று செய்தோர் அந்தணர்.

- நம் சமுதாயம் அறிவுப்பொறுப்பை அந்தணர்களிடமே ஒப்படைத்திருந்தது.

- நாற்பத்தெட்டாண்டுகள் பிரம்மச்சாரியம் கடைப்பிடித்து கல்விக்காகத் தம் இளமையை அர்ப்பணித்தனர். அந்தணர் என்று திருமுருகாற்றுப்படை ஓதுகின்றது.

-

இரு - மூன்று எய்திய இயல்பினின் வழாஅது,
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி,
அறு - நான்கு இரட்டி இளமை நல்யாண்டு
ஆறினில் கழிப்பிய, அறன் நவில் கொள்கை,
மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இரு பிறப்பாளர் .......................

- என நக்கீரர் வாக்கால் அந்தணர் பெருமை விரிகிறது.

- தமக்காக அன்றி உலகின் நலனுக்காய் வழிபட்டு நிற்கும் தன்னலமற்ற பெரியோர் அந்தணர்

*லோகா ஸமஸ்தா சுகிநோ பவந்து .........*
*ஸர்வே ஜனா சுகிநோ பவந்து .........*

- இவை அன்றாடம் அவர்தம் வேண்டுதல்கள்.

- தன்னலம்மிக்க இவ்வுலகில் மற்றோர்க்காய் வாழும் மாண்பாளர்.

- உள்ளத்தில் அருள்நிறைந்ததால் எவ்வுயிர்க்கும் அருள் சுரந்து அன்பீனும் பெரியோர்.

- அறமே வாழ்வான அற்புதங்கள்.
- "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்"
- வள்ளுவர் வாக்கு அந்தணர் பெருமையை இவ்வாறு வரைவு செய்கிறது.
- செவ்விய தண்ணளியை விரதமாய்ப் பூண்டவர்கள் இவர்கள்.
- "அந்தணர் என்பது அழகிய தட்பத்தினை உடையார் என ஏதுப்பெயராகலின் அஃது அவ் அருளுடையார் மேலன்றிச் செல்லாது" என அருளே அந்தணர்தம் இலட்சணம் என உரைப்பார் பரிமேலழகர்.
- அறிவின் அந்தமாகிய ஆண்டவனை அவாவிநிற்பாராகலின் அந்தணர் என்பாரும் உளர்.
- அறியாமை இருள் நீக்குதலின் இவர்கள் குரு எனப் போற்றப்படுவர்
- இச் சிறப்புக்களாலேயே அந்தணர் குலம் வர்ணத்துள் முதன்மை பெற்றது.
- பொருளுலகாகிவிட்ட இன்றைய உலகில், இச்சிறப்புக்களைப் பேணிநிற்கும் அந்தணர் ஒருசிலரே.
- அவ் ஒரு சிலருள் வைத்து எண்ணத்தக்க பெரியார் நம் ஷண்முகரட்ண சர்மா குருக்கள் அவர்கள்.
- தன் பக்தியாலும் அறிவாலும் ஒழுக்கத்தாலும் அனைவர் மனதிலும் இடங்கொண்டவர்.
- ஆற்றுப்படுக்கையில் அனாதரவாய்க்கிடந்த விநாயகரை படகேறிச் சென்று பூஜித்து அருள் பெற்றவர்.
- தன் உண்மை வழிபாட்டால் இன்று கொழும்பு மருதானையில் ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி ஆலயத்தை ராஜ கோபுரத்தோடு தலைநிமிர்ந்து நிற்கச் செய்து சாதனை புரிந்திருப்பவர்.
- ஒரு காலத்தில் யாரும் போகமுடியாதிருந்த ஆலயம் இன்று ஆயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டிற்கு உரிய இடமாயிருக்கின்றது என்றால் அப்பெருமை குருக்கள் ஐயா அவர்களினையே சாரும்.
- இத்தகைய பெருமைகொண்ட குருக்கள் ஐயா அவர்கள் எண்பது அகவையைப் பூர்த்தி செய்கின்றார்.
- தன் ஒழுக்கச் சிறப்பால் இன்றும் இளமை மாறாத ஐயா அவர்களின் தெய்வத் தோற்றம் அனைவரதும் வழிபாட்டுக்குரியது.
- அறுபத்து மூன்றாண்டுகள் முப்போதும் திருமேனி தீண்டிய மேனி.
- அவர்தம் பாதம் தொழுதலே நமக்குப் பயன்செய்யுமன்றோ.
- குருக்கள் ஐயாவின் சதாபிஷேக விழா அனைவரினதும் இல்லவிழா.
- அவர்தம் திருவடியை வாழ்த்தி வணங்குவோம்.
- அவர் வாழ்வு நம்மை வாழ்விக்கும்.
- "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" என்றாற்போல் நம்வாழ்விக்காய் அவர்தமை வாழ்த்துவோம்.
- விழாச்சிறப்புற என்னப்பன் கம்பன் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.
- "இன்பமே எந்நாளும் துன்பமில்லை".

# பெருமைக்குரிய சிவாச்சாரியார் வணக்கத்துக்குரிய பிரமஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் ...........

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலான்"*

என்னும் தெய்வப் புலவன் வள்ளுவன் கூறிய வார்த்தைக் கிணக்காய் எல்லோரிடமும் அன்புடன் பழகி தன்னுடைய உயர்ந்த பண்பினாலே அனைவரையும் தன்பால் கவர்ந்தெடுத்த பெருந்தகை அதி உத்தமர் எமது வணக்குத்துக்குரிய பிரமஸ்ரீ பா.சண்முகரெத்தின சர்மா அவர்கள் அன்னாரின் சதாபிஷேகம் இன்று (02.05.96) ல் நடைபெறவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். மனதார இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஐயா அவர்கள் எமது பாடசாலைக்குச் செய்த சேவைகள் எண்ணில் எழுத்தில் அடங்காது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பாடசாலையின் வளர்ச்சிக்கு மூலவேராக அடிநாதமாக நின்று உழைத்த பெருந்தகை ஐயா பிரமஸ்ரீ பா. சண்முகரெத்தின சர்மா J.P. அவர்கள் என்றால் அது மிகையாகாது.

எழில் கொஞ்சும் அழகுடனும்கண்களைக் கவரும் பொலிவுடனும் தலைநகரில் தலைநிமிர்ந்து காட்சியளித்துக் கொண்டிருப்பதுதான் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயக ஆலயம். சகல விக்கினங்களையும் தீர்க்கும் விக்கினேஸ்வரப் பெருமாள், தன்னைத் தேடிவரும் பக்தர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் அருள்மழை பொழிந்து கொண்டிருப்பது இங்குதான்.

பல்வகைப் பெருமைதரும் இவ்வாலயத்தில்தான் எமது ருெமைக்குரிய சிவாச்சாரியார் பிரமஸ்ரீ பா. சண்முகரெத்தின சர்மா J.P. அவர்கள் 1939 ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து தலைமைக்குருக்களாக எமது பெருமானுக்கு நித்திய பூசை செய்து வருகின்றார்.

நல்லூர் என்றால் அனைவருக்கும் நினைவு வருவது ஆறுமுக நாவலர் அவர்களின் பெயர்தான். அவர் சைவம், தமிழ் இரண்டுக்கும் ஆற்றிய தொண்டை அனைவரும் அறிவர் இது நல்லூராகிய இடம் கொடுக்கும் சுரப்பு. இச்சுரப்புத்தான் ஐயா அவர்களூடாகச் சுரந்து வழிகின்றது என்று எண்ணத் தோன்றுகின்றது. ஐயா அவர்கள் 1915 நவம்பர் 6 ல் நல்லூரிலே திரு பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும் திருமதி சாரதாம்பாள் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் மகனாக அவதரித்தார்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கமைய சிறுவனாய் இருக்கும்போதே பெற்றோரின் பெருமை கூறவந்தது போன்று அவரது பணிகள் தொடர்ந்தன. சமயப்பணி, சமூகப்பணி இரண்டும் இரண்டு கண்களாக தன்னகத்தே கொண்ட பெரியாராக எளிமையுடன் விளங்கும் சிவாச்சாரியார் பிரமஸ்ரீ பா. சண்முகரெத்தின சர்மா அவர்களின் இப்பணிகளுக்கு எடுத்துக் காட்டுகளாக இங்கு சிலவற்றைக் கூறலாம்.

1952 ம் ஆண்டுகளில் வர்க்கப்பாகுபாடுகள் மலிந்திருந்த காலகட்டம். வறுமையில் வாடிய ஏழைகள் பலர் எழுத்தறிவுக்காக ஏங்கித் தவித்தனர். தங்கள் நிலையைச் சொல்லிக் கதறியழ அவர்களுக்கு உறுதுணையாக ஸ்ரீ பால செல்வ விநாயகரைத்தவிர யாருளர். அவர்களின் கதறலின் விளைவு 1952 ல் ஏழைச் சிறார்களுக்கென எழுத்தறிவிக்கும் இடமாகச் சிறுகுடிசையொன்று கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபையினால் ஐயா அவர்களின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில் சிறியதொரு தொண்டர் பாடசாலையாக மலர்ந்து நாளடைவில் அரசின் பொறுப்பில் கொழும்பு தொண்டர் வித்தியாலயம் என்ற பெயரில் சிறந்து இன்று விளங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எப்பொழுதும் ஐயா அவர்களின் சிந்தனை பாடசாலையைப் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இக்கால கட்டத்தில் அப்போதிருந்த அதிபர் திரு. க. மகாதேவா அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து பாடசாலைக்குத் தேவையான பல வளங்களை அரசிடமிருந்தும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொடுத்த பெருமை ஐயாவையேசாரும். அவற்றுக்கு எடுத்துக் காட்டுக்களாகச் சில விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றோம்.

முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த திரு. பீற்றகெனமன் அவர்களின் அனுசரனையோடு பாடசாலைக்குகந்த கட்டடம் ஒன்று அமைப்பதற்கு அடித்தளம் போடப்பட்டபோது அடிக்கல் நாட்டுவிழாவுக்குக் கல்லெடுத்துக் கொடுத்து ஆசிர்வதித்த பெருமை ஐயாவுக்குரியதே. சிலர் தொட்டது துலங்கும் என்பார்கள். தொட்டது துலங்கும் கைராசிக்காரரான ஐயாவின் கையினால் ஆசிர்வதித்துக் கொடுக்கப்பட்ட கல்லின் மகிமையினால் மிகவிரைவில் கட்டடம் அமைக்கப்பட்டு அமைச்சர் அவர்களாலேயே திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இப்பாடசாலை மூன்று மாடிக்கட்டடமாக வளர்ச்சியடைய அடிக்கல்லெடுத்துக் கொடுத்து ஆசிர்வதித்த பெருமைம ஐயாவுக்குரியதே. இக்கட்டிடத்திறப்பு விழாவுக்கு 1981 ஏப்பிரல் மாதம் காலஞ்சென்ற ஜனாதிபதி திரு. R. பிரேமதாசா அவர்கள் பிரதமராக இருந்தபோது வருகை தந்து திறந்து வைத்தமைக்கு உந்துசக்தியாக ஐயா அவர்களே விளங்கினார்கள். 1986 ல் எமது பாடசாலையோடிணைந்து நடத்தப்பட்ட அறநெறி பாடசாலைக்குப் பொறுப்பாயிருந்தமையும் அவரது சேவைக்கு எடுத்துக்காட்டாகும்.

எமது பாடசாலையில் சரஸ்வதிபூசை எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ அப்போதிருந்து தொடர்ந்து இதுவரை காலமும் பூசை செய்து நவராத்திரி விழாவைச் சிறப்பித்த செம்மல் ஐயா அவர்களே. 1992, 93 களில், கலாநிதி பொன். விக்கினராசா அவர்களினால் மாலைநேர வகுப்புக்கள் 'ஸ்ரீ சண்முகரெத்தின சர்மா தொழில் முன்னிலைப் பயிற்சி நிலையம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது இதில் கலந்துகொண்ட சகல மாணவர்களுக்கும் மதிய போசனம் இலவசமாக வழங்கி ஊக்குவித்தமை இவருடைய வள்ளல்தன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது.

பாடசாலையில் இல்ல விளையாட்டுப்போட்டியென்றால் என்ன, சீருடை வழங்கும் வைபவம் என்றால் என்ன, பரிசளிப்பு விழாவென்றால் என்ன, ஐயா அவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வதித்துச் சிறப்பிக்காத நிகழ்ச்சி எதுவுமேயில்லை என்பது வெள்ளிடைமலை. அவரது ஆசியினால் பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வருவதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாச்சாரியார் பிரமஸ்ரீ வணக்கத்துக்குரிய பா. சண்முகரத்தின சர்மா ஐயா அவர்கள் இன்று சதாபிஷேகத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்

*அன்பும் அறனம் ஒருங்கே அமைந்து*
*பண்பு பிறழா நெறியில் நின்று*
*என்றும் எங்கள் மனதில் நிறைந்த*
*எங்கள் ஐயா வாழ்க வாழ்க பல்லாண்டு*
*என வாழ்த்தும்*

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
*(தொண்டர் வித்தியாலம், கப்பித்தாவத்தை)*

# சைவ சமய சீலர்

எமது மன்றத்தின் போஷகரும், கப்பிதாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதம குருவுமான பிரம்மஸ்ரீ பா.சண்முகரத்தினசர்மா ஜே.பி. தம்பதியினருக்கு சதாபிஷேக விழா நடைபெறும் செய்தி கேள்வியுற்று நாம்பெருமகிழ்வு கொண்டோம்.

எமது மன்றத்தின் போஷகராகவிருந்து, எமையெல்லாம் சமய, சமூக சேவையில் சிறுவயது முதலே ஈடுபட வைத்த அவருக்கு சதாபிஷேக விழா நடைபெறும் இன்றைய தினம் எம்மால் மறக்கப்பட முடியாத ஒரு தினமாகும்.

எமது மன்றத்தின் வளர்ச்சிக்காக குருக்கள் ஐயா பலவழிகளிலும் உதவிகள் புரிந்துள்ளார். 1983 கலவரத்துடன் கலைந்துபோன கொழும்பு இந்து இளைஞர் மன்றம் (YMHA) 1992 இல் மீண்டும் புத்தெழுச்சியுடன் செயற்பட குருக்கள் ஐயாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

எமது மன்றத்தின் எந்தக் கூட்டம் என்றாலும் அங்கு குருக்கள் ஐயாவைக் காணலாம். அந்தளவிற்கு எமக்கு உற்சாகம் தந்து இன்று கொழும்பில் பலம் மிக்கதோர் அமைப்பாக எமது மன்றத்தை உருவாக்கிய பெருமையும் குருக்கள் ஐயாவையே சாரும்.

எமது மன்றத்தின் மற்றுமொரு போஷகராகவிருந்த மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் நெருக்கமான உறவு வைத்திருந்த குருக்கள் ஐயா தமிழ் மக்களின் பிரச்சினையைக் கூட அவர் ஜனாதிபதியாக விருந்த காலத்தில் அவருக்கு எடுத்துக் கூறினார். குருக்கள் ஐயாவின் கோரிக்கைகள் பலவற்றுக்குச் செவிசாய்த்துச் செயற்பட்ட ஜனாதிபதி பிரேமதாச, தமிழ் மக்களுடன் நெருக்கமான நட்புறவு கொள்ளவும் குருக்கள் ஐயாவே இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார்.

குருக்கள் ஐயா தம்பதியினரின் சதாபிஷேகப் பெருவிழா இனிது நிறைவுபெற எல்லாம் வல்ல பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலய விநாயகப் பெருமானின் அருள் வேண்டி நிற்கிறோம்.

கொழும்பு இந்து இளைஞர் மன்றம்
**YMHA Colombo**

**தே.செந்தில்வேலவர் (தலைவர்)**
**த.செந்தூரன் (செயலாளர்)**

# தேவர்க்கு ஒப்பானவர்

கலாநிதி A. குணசிங்கம் அவர்கள்

*அன்பிலார் எல்லாம் தமக்குரியார்*
*அன்புடைய என்பும் உரியார் பிறர்க்கு*

இது வள்ளுவர் பெருந்தகையின் திருக்குறளாகும். தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் மனிதன் தேவர்க்கு ஒப்பாக மதிக்கப்படுகின்றான் என்று புராண, இதிகாசம் அழகாக செப்புகின்றது. அந்த வகையில் பிரம்ம ஸ்ரீ பா. சண்முக ரட்ண ஐயா அவர்கள் தன்னலம் கருதாது வாழ்ந்த பெருந்தகை ஆகும். எனது சிறு பராயத்திலிருந்தே குருக்கள் ஐயா அவர்களை நான் நன்கு அறிவேன். ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவிலின் வளர்ச்சிக்கு மிகப் பாரிய பங்கு ஐயாவினுடையதாகும். நாங்கள் எந்த ஒரு விடயம் எங்கள் குடும்பத்தில் செய்தாலும் அந்த கைங்கரியங்களுக்கு மேன்மை தங்கிய ஐயா அவர்களே தலைமை தாங்கி நடாத்தி வைப்பது வழக்கம். அது மட்டுமல்லாமல் ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில் வளர்ச்சிக்கு இரு தூண்களாக எனது தந்தையாரும், குருக்கள் ஐயா அவர்களும் தொண்டாற்றுகின்றார்கள் என்பது யாரும் மறுப்பதற்கில்லை.

அன்பான முறுவல் பூத்த வதன்மும் எல்லோரிடமும் அன்பாக பேசும் பண்பும் அனைவருக்கும் தாராள மனம் கொண்டு உதவும் மனப்பான்மையும் பொருந்தியவராக இன்று 81வது வயதைக் காணும் குருக்கள் ஐயாவினது சிறப்புக்களை காணும் போது மெய்சிலிர்க்கின்றது. அவருடைய தொண்டுகள் என்றும் இன்று போல் சிறக்க ஸ்ரீ பால செல்வ விநாயகர் பரிபூரண அருள் புரிவார் என்பது திண்ணம். அவரைப் பற்றி எழுதுவதானால் ஒரு புஸ்தகமே போதாதென்று தான் கூறவேண்டும். என்றும் வற்றாத புகழும் இளமையும் கொண்டு குருக்கள் ஐயா சிறந்து வாழ்ந்து கொண்டிருக்க எல்லாம் வல்ல செல்வ விநாயகர் அருள் என்றும் கிடைக்கும். இந்த நேரத்திலே குருக்கள் ஐயாவிடம் ஆசி பெற நாம் நற்பேறு பெற்று இருக்கின்றோம் என்று தான் கூற வேண்டும். பெரியவர் குருக்கள் ஐயா வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பது எமக்கு கிடைத்த பெரிய பேறு. குருக்கள் ஐயா அவர்களின் பாத கமலம் வணங்கி அமர்கின்றேன்.

***நன்றி***

# "ஆயிரம் பிறைகண்ட அந்தணாளர்"



சைவ உலகில் தனக்கென ஓர் புகழைத்தேடி வரலாறு படைத்தவர் மூத்தசிவாச்சாரியார் எங்கள் இலங்கைத் திருநாட்டின் தலைநகர் கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் எங்கள் அனைவரின் வணக்கத்துக்கும் போற்றுதலுக்கும் உரியவரும் இன்றைய விழாநாயகனுமாகிய பிரம்ம ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா இப்பிரசித்தி பெற்ற புகழ்மிக்க பழம்பெரும் ஆலயத்தில் 1936 ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அறுபது ஆண்டுகளாக இப்பணி செய்து வருவது வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டியது. கொழும்புத் தலை நகரில் இல்லாமல் இலங்கையின் பல பாகங்களிலும், தமிழகம், மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பங்கு பற்றிய கும்பாபிஷேக விழாக்கள் பற்பல.

அதைப் போன்று அவர் செய்து வைத்த திருமணங்கள் எண்ணில் அடங்காதவை. ஆயிரம் பிறை கண்டவர் எங்கள் குருக்கள் ஐயா. கொழும்பு இராம கான சபா தலைவரான குருக்கள் ஐயா சாதி மத பேதமன்றி இலங்கையின் சகல இனமக்களாலும் போற்றப்படுபவர் இவரை பல கல்விமான்களாலும் சிவாசார்யார்களிலும், அரசியல் தலைவர்களாலும் போ–றற்றப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. சேவை மனப்பான்மைதான் அவரது இலட்சியம். அவரிடம் ஆசிபெற்ற குடும்பங்கள் பற்பல !

கலைஞர்களைச் சிறப்பாக நாதஸ்வர, தவில் வித்துவான்கள் கொழும்பு வந்தால் தங்கவைத்த பண்பாளர், ஓர் வள்ளல். எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நலிந்து வரும் கலைஞர்கள் அவர் நிழலில் தங்கி வருவார்கள். இன்றைய சூழ்நிலையை நன்கு அறிந்த ஓர் மகான் 80 ஆண்டுகள் சிறப்பாகவும் இன்பமாகவும் வாழ்ந்து இன்று பெரும் விழாவுக்கு நாயகனுமாகிய குருக்கள் ஐயா ஓர் சங்கீத ரசிகர். கொழும்பில் நடைபெறும் தவில்/ நாதஸ்வர கச்சேரிகளில் முன்வரிசையில் இருந்து ரசிப்பார். இவர் ஓர் ரசிக கலாமணி.

எங்கள் குடும்பத்துடன் பல வழிகளிலும் சென்ற 40 ஆண்டுகளாக தொடர்பு உண்டு. எங்களுக்கு பல உதவி செய்த மகான் 10 ஆண்டுகளுக்கு முன்பு சைவப்பெரு மகான் உயர்திரு பொன்னா விக்னராஜாவுடன் இருந்த காலத்தில் சிதம்பரம் பிரமுகரும் கல்விமானுமாகிய அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் உயர்திரு ஆனந்த நடராஜ தீட்சிதரை இலங்கைக்கு அழைத்தோம். அவர் சிதம்பரத்தில் உத்தரவுபெற்று முதன் முதல் கடல் கடந்து இலங்கைக்கு வந்து பல கணபதி ஹோமங்கள் நடாத்தி பல சமய சொற்பொழிவுகளும் ஆற்றினார். அப்பெரும் கல்விமானும் தில்லை மூவாயிரவரில் ஒருவருமான தீட்சிதர் அவர்கள் குருக்கள் ஐயா வீட்டில்தான் இலங்கை விஜயத்தின்போது தங்கினார். என்ன உபசரிப்பு தீட்சிதர் இன்றும் குருக்கள் ஐயாவினது குடும்பத்தினரை நினைவுபடுத்துவார், நன்றியும் கூறுவார். சிதம்பரம் சென்றால் ஒரே புகழாரம் குருக்கள் ஐயாவிற்கு சூட்டுவார். குருக்கள் ஐயாவின் இல்லத்து அரசி, 8 ஆண்பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் கிடைத்தது அந்த விநாயகர் துணை. கனடா, மலேஷியா, ஜேர்மன் போன்ற நாடுகளிலும் அவரது மகன்மார்கள் பூசை செய்து பெரும் புகழ் தேடி உள்ளார்கள். சென்ற ஆண்டு அடியேன் கனடா சென்ற சமயம் அவரின் மகன் பிரம்மஸ்ரீ ச. ராதா கிருஷ்ணகுருக்கள் மொன்றியல் துர்க்கை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்துக்கு வந்து பங்கு பற்றி நடாத்தியது எங்கள் நாட்டுக்குப் பெரும் புகழ் அடியேன் பல ஆண்டுகளுக்கு முன் மலேஷியா சென்ற பொழுது கோலாலம்பூரில் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலய சிவாச்சாரியராக இவரின் மகன்ராதாக்குருக்கள் மிகச் சிறப்பாக இருந்ததை என் கண்ணால் நேரில் கண்டேன். அச்சமயம் பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தின சர்மாவும் அவ் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார். சதா அபிஷேகம் காணும் குருக்கள் ஐயா பல்லாண்டு வாழ்ந்து இன்னும் தொடர்ந்து சிவப்பணி பொதுப்பணி செய்ய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தில் நித்தம் ஆனந்த தாண்டவம் ஆடும் எம்பெருமானை வேண்டுவோமாக.

*வாழ்க குருக்கள் ! வாழ்க அவர் குடும்பம்*

*சிவநெறிச் செம்மல்,*

**K.K. சுப்பிரமணியம்**

# சதாபிஷேகம் காணும் சமாதான நீதிவான்!



என்பால் அன்புடைய இனிய நல் அந்தணப் பெரியோர் பிரம்ம ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மாவும் அவர்தம் பாரியார் சௌ. ராஜலக்ஷ்மி அம்மையாரையும் இன்று நாம் தமிழர் விசேஷமாக இந்து மக்கள் பாராட்டுவது தலையாய நன்றிக் கடனாகும். இலங்கை வாழ் பல்லின மக்கள் தம் தலைவர்கள் பலர் தம் பாராட்டினைப்பெற்ற பெயரினை இன்றும் காப்பாற்றி வரும் எம் சமயப் பெரியோர் இவர்தாம் என்றால் அது புகழார்வமில்லை.

இவர்தம் நூற்றாண்டுப் பிறந்த தினவிழாவினைக் எமக்கு இன்று நல்லாசிகள் எமக்குக் கூறவேண்டிய திருவருட் கொடையும் திடமும் கொண்ட பெரியார் ஐயா அவர்கள் என்றால் அது மிகையல்ல. நல்ல மனம் படைத்த நலமுற வாழ்ந்து வரும் ஐயா அவர்கள் எல்லாம் வல்ல கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமான் திருவருளால் அவர்தம் துணைவியார், குழந்தைகள், பேரப்பிள்ளைகளுடன் நீடு வாழ்க! வாழ்கவென வாழ்த்துவது எமது தலையாய கடமை.

விநாயகர் அடியவர்
வை. கங்கைவேணியன் ஜே. பி.
தலைவர்
அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்

---------------------------------------------------oo---------------------------------------------------

# தெய்வம் தந்த செல்வம்

*"என்கடன் பணி செய்து கிடப்பதே"*
*சிவத்தொண்டு தவத் தொண்டு*

சொல்லித் தெரிவதன்று சொல்லால் அடங்காது நின் பெருமை. ஈழத் தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்க வந்த வள்ளலே, வளர்பிறையே வாடாமலரே. தேடியும்மை நாம் அடைந்தோம் தெய்வம் தந்த செல்வமே! மங்களமாய் தாங்கள் பல கோடி நூறாயிரம் ஆண்டு நீடுழி வாழ வேண்டும்.

சூடிக்கொடுத்த சூடாமணியே உங்கள் திருக் கரத்தால் எடுத்துக் கொடுத்த மாங்கல்யம் எத்தனை. எட்டுத் திக்கிலும் வாழ்ந்தவர்கள் வாழ்கின்றவர்கள் எண்ணிலடங்கா. உங்கள் ஆசீர்வாதத்தில் இணைந்த ஜோடிகள் பல மூன்று தலைமுறையும் கண்டு விட்டதையா.

ஓம் என்னும் பிரணவப் பொருளை உங்கள் உருவில் கண்டு தரிசிக்கின்றோம். தொண்டு பல செய்து ஆண்டு பல மறைந்தாலும் அயராத உங்கள் பணி, பண்பாடு, தொண்டு, பெருமை, புகழ், மகிமை என்றும் ஜோதிப் பிழம்பாய் தூண்டாமணியாய் சுடர்விட்டு ஒளிரும்.

சதாபிஷேக சுபமங்களமான இன் நாளில் நீங்கள் இருவரும் சிவனும் சக்தியும் போல சுடரும் ஒளியும் போல, நகமும் தசையும் போல, தேனும் சுவையும் போல , நாதமும் இசையும் போல என்றும் இணைபிரியாது பல்லாண்டு காலம் நலமுடன் வாழ எல்லாம் வல்ல விநாயக பெருமான் பெயரால் இரு கை கூப்பி சிரம் தாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றோம். வாழிய தம்பதிகள், வாழிய நின் அறம், தொடரும் நின் திருப்பணி, மலருக வாழ்வு, வளர்க வளம் பெருகுக ஆயுள், தந்திடுக ஆசீர்வாதம் பொங்குக மங்களம் வாழிய நீடுழி

*சுபம்*
*சுபமங்களம்.*

பணிவுடன்
திருமதி. ரட்னாம்பாள் வீரவாகு

# கலை ஞானம் கொண்டவர் பெரியவர்



சிரித்த முகமும், சிறியதோற்றமும், பரிவு கொண்ட பார்வையும், அனைவரையும் அன்புடன் அரவணைக்கும் பண்பும், எல்லோருக்கும் உதவும் மனப்பான்மையும் ஒருங்கே பெற்ற மகான் நாங்கள் போற்றும் பெரிய ஐயாவான பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா J.P. அவர்கள். பெரியவரிடம் உள்ள ஓர் தனிச்சிறப்பு சிறந்த கலைஞானம் கொண்ட உள்ளத்தை பெற்றிருப்பது. கலைபற்றி தெரிந்திருக்க வேண்டும் இல்லையேல் இரசிக்கக்கூடிய தன்மையாவது கொண்டிருக்க வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் பெரியவருக்கு நிறைய உண்டு.

கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவிலிலே இந்திய இலங்கையின் நாதஸ்வர வித்துவான்கள் பலரையும் தமது ஆலயத்தில் இசைக்கச்சேரி நடாத்தி மெய்மறந்து ரசித்து இன்புற்று மகிழ்ந்திருக்கின்றார். இவருடைய கடிதத்தை கண்டாலே எந்தவிதமான மறுப்புமின்றி வந்து சிறப்பாக கச்சேரி நடாத்திசென்றவர்களில் அன்றைய மாமேதைகள் காரைகுறிச்சி அருணாசலம், தவில் மேதை தட்சணாமூர்த்தி ஆகியோரை உதாரணமாக கூறலாம்.

நாதஸ்வர தவில் கலைஞர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு அனுசரித்து தங்கும் இடவசதி கொடுத்து மற்றும் சகல வழிகளிலும் அவர்புரியும் உதவிகளை எந்த கலைஞனும் மறந்திட முடியாது. அவருடைய இசை ஞானத்தின் ஈடுபாட்டின் தன்மையால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் விஷேட உபசார பூஜைக்கு நாதஸ்வர இன்னிசைக் கச்சேரி நடாத்துவது யாவரும் அறிந்த விடயம்.

செல்வம் பெருகினால் செருக்கு பெருகும் என்பர். ஆனால் எவ்வளவோ செல்வமும் பதவிகளும் தேடிவந்த போதும் என்றுமே மாறாத அன்புள்ளமும் எல்லோருக்கும் உதவி புரியும் மனப்பான்மையும் கொண்ட ஐயாவுக்க சதாபிஷேகம் எனப்படும் சிறப்புவிழா நடைபெறுகிறது. இந்த நேரத்தில் கலைஞர்களாகியநாம் எல்லோரும் அந்த மகானிடம் ஆசிபெறுவது சாலப் பொருத்தமாகும். மருதானை ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தான நாதஸ்வர தவில் கலைஞராகிய எம்மை ஆசிர்வதிக்க வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுபம்

இவ்வண்ணம்
அப்புலிங்கம் சோமசுந்தரம்
சின்னத்தம்பி பழநிவேல்
*(தேவஸ்தான ஆஸ்தான நாதஸ்வர தவில் வித்துவான்கள்)*

# இசை ஞானம் கொண்ட பெரியவர்

மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்



கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய குருக்கள் ஐயா அவர்கள் இந்த ஆலயத்திலே 1939 ஆண்டு முதல் பிரணவரூபமாகிய விநாயகப் பெருமானுக்கு பூஜை புரிந்து வருவது எல்லோரும் அறிந்ததே மேன்மை தங்கிய குருக்கள் ஐயா அவர்கள் அன்றுமுதல் இன்றுவரை பூஜை, அபிடேகமுறைகளில் மடடுமன்றி இசைத்துறையிலும் பாரிய ஆர்வம் கொண்டு விளங்குகின்றார் அதனால் தான் கலைஞர்கள் யாரார் எங்கிருந்து வந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று ஆதரவளிப்பதில் அவருக்கு இணை அவரேதான்.

இசை ஞானம் கொண்ட எங்கள் பெரிய ஐயா அவர்களைப் பற்றி கூறுவதானால் ஒரிருநாள் போதாது இவர் கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக எனும் பொருளிற் கிணங்க வேத ஆகமங்களை நன்கு கற்று தெளிந்த ஓர் பெரியாராவார். அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள் எனும் மகான்களது வாதத்திற்கு இலக்கணமாப் வாழும் எம் பெரியப்பா அவர்கள் நாம் எப்ப கொழும்பு வந்தாலும் என் குறை நிறை விசாரித்து ஆதரிப்பதை என்னாலோ ஏனைய கலைஞர்களாலோ மறுக்கவோ. மறக்கவோ முடியாது. எமது பெரிய ஐயா அவர்கள் இனமத பேதமின்றி சகலருடனும் அன்புடனும் பாசத்துடனும் பழகுவார். இவர் சமூகசேவைகளிலும் ஈடுபாடு கொண்டவர் அதனால் தான் பல சமூக சேவை ஸ்தாபனங்களின் போசகராகவும் தலைவராகவும் விளங்குகின்றார். குருக்கள் ஐயா அவர்கள் ஆலயத்திலே பூஜை புரிகின்ற முறை அதாவது கருவறையிலே பக்தர்தம் இடர்களையும் பால செல்வ விநாயகரை பஞ்சமுக விநாயகர் போல் பாவனை செய்து எம்பெருமானை வலம் வந்து தீபாராதனை செய்யும் அருங்காட்சியை காணும் போதும் அடியார்கள் மட்டுமன்றி கலைஞர்களாகிய நாமும் மெய்சிலிர்த்து போகும் வண்ணம் அமைகின்றது. இத்தகைய நற்பண்புகளையெல்லாம் தன்னகத்தே கொண்ட குருக்கள் ஐயா அவர்களின் 81வது ஆண்டு சதாபிஷேக விழாவில் கலைஞர்களாகிய நாம் எல்லோரும் ஆசி பெறுவது எமக்கு கிடைத்த பெரும் பேறாகவும் நாம் செய்த பாக்கியமாகவும் நினைந்து பெருமகிழ்வடைகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
நாதஸ்வரகான வாரிதி
நாதாமிர்தக் கிரவுஞ்சம்
V. K. கானமூர்த்தி

# பல்லாண்டு காலம் வாழ்க !

எனது பெருமதிப்புக்கும் அன்பிற்குமுரிய பிரம்மஸ்ரீ ப. சண்முகரத்தின சர்மா அவர்கள் தனது சதாபிஷேக விழாவினைக் கொண்டாடும் தருணத்தில் நானும் எனது குடும்பத்தினரும் மதிப்புக்குரிய ஐயா அவர்களையும் அவரது பாரியார் அவர்களையும் மேலும் பல்லாண்டு வாழ்ந்து சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ பாலசெல்வவிநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.



இங்ஙனம்
வி.கே. பஞ்சமூர்த்தி
நாதஸ்வரவித்துவான்

# 81 வது ஆண்டு சதாபிஷேக விழா

குருக்கள் ஐயா அவர்கள் இசை ஞானம் மிக்க பெரியாராவார் அவருக்கு நடைபெறும் சதாபிஷேக விழாவை அறிந்து நானும் எனது குடும்பத்தவரும் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அந்த பெரியாரை நாம் வாழ்த்துவதை விட அவரிடம் இருந்து நாம் ஆசி பெறுவதே சாலச்சிறந்ததாகும். ஸ்ரீபால செல்வ விநாயகர் குருக்கள் ஐயா அவர்களை பல்லாண்டு காலம் வாழ வைக்க வேண்டும் என விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.



கலைமாமணி
தவில் வித்வான்
கே . கணேசபிள்ளை

# வாழும் தெய்வம்

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலான்"*



என்ற வள்ளுவ வாக்கிற்கமைய வாழ்ந்துவரும் பேராசான் அந்தண சிரோன்மணி எங்கள் ஷண்முகரட்ண சர்மா குருக்கள் அவர்கள். அவர்தம் அன்புக்கடலுள் ஆழும் பாக்கியம் பெற்றோருள் நானும் ஒருவன். இசைக்கலைக்கு ஐயா அவர்கள் ஆற்றும் தொண்டு அளப்பரியது.

தாம் இசைமேற் கொண்ட பெருங்காதலை இசைவேளாளர்கள் ஆகிய எம்மேற் செலுத்தி நிறைவுகாணும் பெருந்தகைமையாளர். அவரின் அன்புக்கும், ஆதரவிற்கும் ஆட்படாத இசைக்கலைஞர்களே இல்லை எனலாம்.

இன்று இடம்பெயர்ந்த யாழ் இசைவேளாளர் அனைவர்க்கும் ஐயா அவர்களே அடைக்கலம். அத்தனை இசைவேளாளர்களும் ஐயாவின் சந்நிதியில் சொந்தவீட்டுரிமையோடு வாழ்கிறார்கள் என்றால் ஐயாவின் பெருங்கருணைக்கு வேறு விளக்கமும் வேண்டுமா ?

குருக்கள் ஐயாவின் சதாபிஷேக விழா சிறப்புற என் குலதெய்வ இராகச்சி அம்பாளின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

*நாதஸ்வர வித்வான் இசைப்பேரறிஞர்*
**K.M.** பஞ்சாபிகேசன்
சாவகச்சேரி.

# நாதஸ்வர வித்துவான்

# M.B. பாலகிருஷ்ணன் அவர்களின் போற்றியுரை



நித்திலம் கொழிக்கும் இலங்கையின் தலைநகரில் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களின் 80வது சதாபிஷ்யம் நடப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் ஒரு கற்பக விருட்ஷம் அந்த விருட்ஷத்தில் எத்தனையோ சங்கீத வித்துவான்கள், தவில், நாதஸ்வரவித்துவான்கள் வந்து இளைப்பாறி சென்றுள்ளார்கள்.

அவர் கலை உலகிற்கு ஆற்றிய சேவை மிகவும் பெருமைக்குரியவை. அவர் இல்லையென்ற சொல்லே சொல்லாது எங்கள் கலைக்குடும்பங்களிற்கு மிகப்பெரிய சேவை செய்துள்ளார். அவர் எந்த ஒரு தவில், நாதஸ்வர வித்துவானையும் அறியாதவர் என்றே கூறமுடியாது. அந்த அளவிற்கு அவர் ஒரு கலாரசிகர் எங்கு எந்த நாட்டில் இருந்து கலைஞர்கள் வந்தாலும் அவரிடம் ஆசிபெற்றே செல்லுவார்கள். அவர் ஆற்றிய சேவைகள் கலை உலகில் என்றும் மறக்கமுடியாதவையாகும்.

அவரின் உதவி செய்யும் மனம் அவருக்கு மிகை ஆகாது. அவர் ஓர் வள்ளல் என குறிப்பிடலாம். அவரது சேவையும் இன்னும் தொடரவேண்டும் என பிரார்த்தித்து அவரது இல்லத்து அரசி அவரும் இன்னும் நூறாண்டு காலம் வாழவேண்டும் என எல்லாம் வல்ல பால செல்வ விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

# தாயினும் நல்ல தலைவர்

*"நிறைமொழி மாந்தர் ஆணையிற் பிறந்த*
*மறைமொழிதானே மந்திரமென்ப"*



இவ்வுலகில் நிறைமொழி மாந்தராய் நின்று நிலவுவோர் தொகை அருகிவருகிறது. இந்நிலையில் நம்காட்சிக்குட்பட்டு நிறைமொழி மாந்தராக அருள்நிறைந்து வாழ்ந்து வருபவர் நம் வணக்கத்துக்குரிய ஷண்முகரட்ண குருக்கள் ஐயா அவர்கள்.

இசைவேளாளர் அனைவரையும் அணைத்துக் கொண்டவர். தம் ஆலயத்தை கலைக் கோயிலாக்கி இசைவேளாளர்கட்கு வாழ்வளித்தவர். தாயினும் நல்ல தலைவராய் அவர் நம்மேற்காட்டும் அன்பை வெளிப்படுத்த வார்த்தைகளேது ?

ஐயாவின் அருட்தன்மையால் அவர் அடிவணங்கும் சாதாரண அடியாரிலிருந்து அரசியல்வாதிகள் வரை அன்பர்கள் பலபேர். அத்தனைபேரும் அவர் அருள் வாக்கை வேண்டிநிற்பவர்கள்.

நோயுற்று சத்திரசிகிச்சைக்காக புறப்பட்ட நான் ஐயாவின் திருவடிகளை வணங்க "நீ நலம்பெற்று மீண்டும் வந்து தவில் வாசிப்பாய்" என ஐயா கூறிய வாக்கு தெய்வவாக்காய் எனக்கு வாழ்வளித்தது.

வைத்தியசாலையில் தாய்போல் என்னை ஓடிவந்து பார்த்த அவர் பெருங்கருணையை எண்ணியெண்ணி வியக்கிறேன். ஐயாவின் சதாபிஷேக விழா எமக்குத் திருவிழா, தெய்வவிழா விழாச்சிறக்கப் பிராத்திக்கின்றேன்.

*தவில் வித்துவான் லயஞான கலாநிதி*
**N. குமரகுரு**
அளவெட்டி

# இசைக் கலைஞர்களின் காப்பகம்

- லயஞானபூபதி இராசு. புண்ணியமூர்த்தி



- ஷண்முகரட்ண சர்மா குருக்கள்
- இசைவேளாளர்கள் மந்திரம்போல் பக்தியுடன் உச்சரிக்கும் பெயர் இது.
- ஐயா அவர்களின் தெய்வத் தோற்றத்திற்கும், அருள் வார்த்தைக்கும் ஆட்படாத இசைக்கலைஞர்களே இல்லையெனக் கூறலாம்.
- அறவாழி அந்தணராய்த் திகழும் நம் ஐயா, நம் அனைவரையும் ஆட்கொண்டவர்.
- ஸ்ரீ பால செல்வவிநாயக மூர்த்தி ஆலயமும் ஐயா அவர்கள் வீடும் இசைவேளாளர்களாகிய நம் அனைவருக்கும் சரணாலயமாய்த் திகழ்வன.
- தஞ்சைப் பெருங்கோயில் அமைத்து கலைகளனைத்தையும் காத்து வளர்த்தான் இராஜராஜசோழன் எனப் படித்திருக்கிறோம்.
- எம்மைப் பொறுத்தவரை ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி ஆலயமே தஞ்சைப் பெருங்கோயில்
- குருக்கள் ஐயா அவர்களே இராஜராஜசோழன்.
- கலைகளில் குருக்கள் ஐயா காட்டும் ஈடுபாடு ஆச்சரியமானது.
- ஐயா அவர்களால் வாழ்ந்த கலைஞர்கள் பலர்.
- இன்று நாட்டுச் சூழ்நிலையால் நம் சொந்த இடத்தை விட்டு வந்திருக்கும் யாழ்ப்பாண இசைவேளாளர் அனைவர்க்கும், ஐயா அவர்களே அடைக்கலத் தெய்வம்.
- அவர் எம்மேற் காட்டும் அன்பு வார்த்தைகளில் அடங்காதது.
- காரைக்குறிச்சி அருணாசலம் முதல் நம் ஈழமண் செய்த தவத்தால் உதித்த தவில்மேதை தட்சணாமூர்த்திவரை அத்தனை பெருங்கலைஞர்களும் ஐயா அவர்களின் ஆசிக்கும் ஆதரவிற்கும் உட்பட்டவர்களே.
- ஐயா அவர்களின் தெய்வவாக்கில் எனக்கு அளவற்ற நம்பிக்கை.
- தவில் வித்துவான் குமரகுரு அவர்கள் கடும் சுகயீனமுற்று சத்திர சிகிச்சைக்காகச் செல்வதற்குமுன் ஐயாவிடம் ஆசிபெற வந்தபோது நான் அங்கிருந்தேன்.
- இறைவனைத் தியானித்து "பூரண சுகம்பெற்று மீண்டும் இங்கே வந்து நீ வாசிப்பாய்" எனக் குருக்கள் ஐயா அருளிய வாக்கு இன்றும் என் காதில் ஒலிக்கிறது.
- அவர் வாக்குப்போல திரு குமரகுரு அவர்கள் நலம்பெற்று மீண்டும் தவில் வாசிப்பதை ஐயா அவர்களின் அருள்வாக்கின் மகிமை என்றே நான் கருதுகிறேன்.
- ஐயா அவர்கள் 80 வயதைப் பூர்த்தி செய்கிறார்கள் என்பது நாம் செய்த பாக்கியம்.
- அவர்கள் வாழும் ஒவ்வொரு நாளும் இசைக்கலையையும் இசைக்கலைஞரையும் வளர்ப்பிக்கும் நாளாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.
- அவர் திருவடியை வணங்குதலன்றி வாழ்த்துவதற்கு நான் யார் ?
- அவர் பல்லாண்டு வாழ பிரார்த்திப்பதோடு, என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து ஐயா அவர்களின் சதாபிஷேக விழா சிறப்புறப் பணிகிறேன்.



# கவி மலர்

# கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சண்முகசர்மா ஜே.பி. அவர்களின் 80 அகவைப்பூர்த்தி குறித்த வாழ்த்துப்பா

- வ. சிவராசசிங்கம்

## வெண்பா

வித்தையொடு செல்வம் விளங்கவருள் கப்பித்தா
வத்தையுறை வரத வள்ளலே நித்தம்நின்
பூசை புரிசண் முகரத்னப் புண்ணியர்சீர்
பேசக் கவிதந்து பேண்

## தாழிசை

இருஞாலத் துயிரெல்லாம் இறையருளுக் கிலக்காகிக்
கருவேரை யறநீங்கிக் களித்தென்றும் வாழ்கவென
அருள்மேவு கப்பித்தா வத்தையமர் ஐங்கரர்க்கொவ்
வொருநாளும் பூசனைசெய் உயர் குருவை வணங்குவமே
பொன்னிதழித் தொடைமார்பர் புத்திரராம் சண்முகவர்
தன்னருள்வேட் டர்ச்சனைசெய் சற்குருவை வாழ்த்துவமே
ஒருநான்கு மறைவகுத்த உயர்நெறியிற் சிவசுதற்குத்
திருவேறத் தவமியற்று சீர்க்குருவைப் பரவுதுமே
மருவாருஞ் சடைமீது மதிசூடு மணவாளர்
திருப்பாதம் தலைச்சூடும் செம்மல்தனைப் போற்றுவமே.

## தரவு - கொச்சகம்

சைவநெறி தழைத்திலகச் சதுர்மறையின் னிசைவளர
தெய்வதநல்லுணர்வடியார் சிந்தையினில் இனிதுறைக்க
வல்வினைகள் போக்குகின்ற மாமருந்தா கத்திகழும்
செல்வ விநா யகர்தமக்குச் சிந்தைமொழி மெய்யொன்றி
ஆராத காதலுடன் அபிடேகம் அர்ச்சனைகள்
நீரா யுளமென்பு நெக்குருகி அன்பர் தொழப்
பேரா யிரமாகும் பெம்மானா மம்புகன்று
வாராவருட் செல்வம் வந்தெய்தப் பூசைபுரி
மாசிவருட் தெய்வசிகா மணியாஞ்சண்முகரத்ன
தேசிகநின் தேசினையாம் செப்புவதும் எளிதாமோ.
பால செல்வ நாயகரின் பாங்கிலவர்தம்மிளவல்
வேல வரையமர்த்த வேட்டுமனம் ஆறுமுகர்
கோலத்தில் வள்ளிக் குறமாதின் நாயகரை
ஞாலம் நனிசிறக்க நற்றவதா பித்தனையே

அருட் செல்வம் வேட்டுவரும் அன்பர்தமக் கேயன்றி
பொருட் செல்வம் விழைவார்க்கும் போகங்கள் வழங்கிடற்கு
பூங்கமலா சனிகருணை பூத்தொளிரப் பொன்மயில் நேர்
வீங்குபுகழ் விமலைதனை வீற்றிருக்க வைத்தனையே

காணிக்கை யாயிறைவன் கழலடிக்கு பொன்னோடு
மாணிக்க முவந்தளிக்கும் வான்கங்கை வரம்பிகந்து
பாய்ந்துசெலுங் கதிர்காமம் பயில்வள்ளி காந்தருக்கு
ஏய்ந்தவெழில் திருவிழா இயல்கின்ற நாள்களிலே

தொண்டர்மட மதில்முருகன் தொல்புகழ்சீர் விரிக்கின்ற
கண்டிலுந்தீஞ் சுவைதுறும் கந்தபுரா ணப்படலம்
நடைபெறவும் கந்தவேள் நம்பரற்கு நற்பூசை
உடலுறவும் காரணராய் உவந்து களி கொண்டனையே

## அராகம்

இவைநிகர் பலவித இறைபணி புரிவகை
சிவையருள் கயமுக முதலவ னினதுள
அவைதனி லழகுற அருள் நடமிடுதலின்
நனையில நினைதிசை நயமுற ஒளிருமே

## சுரிதகம் - அகவல்

பெருகுறும் அன்பால் ஒருகொம்பர்க்கு
முருகவிழ் நறுமலர் வரைபொரத் தூவியும்
ஆத்தி கொன்றை அறுகுடனலரி
சாத்தி மகிழ்ந்தும் சாத்திரநெறியால்
நேத்திர நெற்றி நிமலர்க்கு நிகழ்த்தும்நின்
பூசையின் வாசனை வாசவன் பதிவரை
வீசு மென்னில் விநாயகன் பொற்றாள்
மலர் சொரியருள்தேன்மாந்தும் நின்வாழ்வு
உலருதலின்றி ஓராயிரம் பிறை
காண்தருவகையில் கவினுருவோடு
நீண்டு நெடிது நிலவுமில் வுலகில்
என்னநின் அன்பர் ஆகியர்
மன்னுமில் வாழ்க்கை, வாய்மலர்ந்தனரே

## கட்டளை கலித்துறை

விண்டல ரும் நறைப் பூங்கற் பகநிழல் வீற்றிருக்கும்
விண்டலப் பொற்பதி வேந்தென இல்லத் திறைவியுடன்
மண்டல மீதுயர் கப்பித்தா வத்தை வரனருளால்
மண்டல மாயிரங் கண்டைய வாழ்க மகிழ்ந்தினிதே.

# சதாயுஷ்ய புருஷர் சண்முகரட்ண சர்மா

சீர் வளர் லங்காத் திருநாட்டின் சிறக்கும்
பேர் வளர் கொழும்பு மருதானைப் பதியின்
ஞால ஒளி தருமீசன் மகனாம் திருவருள் மிகு
பால செல்வ விநாயகர் திருக்கோவிலின்
அருந் தொண்டராய் அர்ச்சிக்கும் பேறு பெற்ற
பெரும் மகான் சண் முகரட்ண சர்மாவின்
சதாபிஷேக பெருவிழா சர்வ மங்கள யுவ வருஷம்
நிதான குருவாரம் சதுர்த்தி கூடிவரும் சித்திரையில்
மதி வளரும் பூர்வ பக்ஷமதில் மங்களமாய்
அதி உன்னத விழாவாய் நடாத்த ஆனைமுகன் அருள்சுரக்க
அன்புள்ளம் கொண்ட அற்புதப் பெரியவர்
பொன் வதன முறுவலால் புவியாரனைவரையும் கவர்ந்து
மெய்கொண்ட உள்ளத்தோடு உதவிபல புரியும்
ஐய்யாவின் பெருந்தன்மை யாருக்கும் இல்லையென
அன்புதவி பெற்று வாழ்ந்து வரும் அனைவரும்
என்றுமே மறவார் பெரியவரின் பெரும் உதவிகள்
கபடமற்ற மனமும் கலைஞான உள்ளமும்
எவருக்கும் ஏற்ப உதவி புரியும் உணர்வும்
திண்ணமுடன் கொண்ட சர்மா ஐயாவின்
வண்ண முடை வாழ்வு சிறப்புற்றதாகும்
ஈழநல்லூர் கந்தனின் இனிய பூசை தொண்டதை
சால மகிழ்வுடன் ஏற்று சிறப்பாற்றி வந்த
பால சுப்பிரமணியக் குருக்களுடன் வாழ் சாரதாம்பா
தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாய்
இம்புறு ஐப்பசி மாத இனிய சித்திரை நக்ஷத்திரமதில்
ஐந்தாம் திகதியுடன் பதினைந்தாம் ஆண்டில்
வந்தார் புவிக்கு மதிமிகு சண்முகரட்ணசர்மா
வாரியாய் வரும் கல்வியதை கந்தர்மடவித்தியாலயத்திலும்
ஆரியக் கல்வியதை சுன்னாகம் குருகுலத்திலும்
வளமாகக் கற்றுத் தேர்ந்த வாஞ்சனையுடன்
சலனமற்ற மனமுடையவராய் கவர்ந்தார் யாவரையும்
இல்லறத்தில் இனிய நாயகியாய் இராசலக்ஷ்மியை
நல்லற வாழ்வு காண கரம் பிடித்தார் மகிழ்வுடன்
இனிமையான வாழ்வின் இலக்கண செல்வமாய்
கனிவுடை மக்களை பெற்றெடுத்தனர் தம்பதிகள்
ஆண்மகவாய் அவதரித்தனர் எட்டுமக்கள்
மாண்புடை பெண்களாய் மூவரும் சேர்ந்தே
மங்கள வாழ்வு பெற்ற மனைச் சிறப்புடன்
தங்களால் இயன்ற தர்மமும் பெற்றார்
பெரிய ஐயாவின் தொண்டுகள் அனைத்துமே
அரிய பல நற்காரிய சித்தி தந்தன
முப்பத்தெட்டாம் ஆண்டினிலே வந்தார்

கப்பித்தாவத்தை பிள்ளையார் திருக்கோவிலில்
அன்று தொடங்கிய அரிய தொண்டு
இன்று வரை நிலை பெற்று நிற்கின்றது
ஐம்பதாம் ஆண்டிலே ஆனைமுகன் முதற்பிரதிஷ்டையை
தம்பத சிரமேற் கொண்டு சீருடன் நடாத்தி
சீருடன் சிறந்த சிரஞ் சீவியாய்
பேருடன் புகழும் பெற்றெடுத்தார்
மூன்று குடமுழுக்கு விழாதனை விநாயகருக்கு
சான்று கொண்டு நடாத்திய பெருமையுண்டு
புகழும் பெருமையும் பட்டமுமாய்
சிகரமாய் தேடிவந்தன பெரியாரை
ராஜ கோபுர குட முழுக்கினை சிறப்பை கண்டு
ஆழ முடை சிறப்புப்பட்டமதை அறங்காவலர்
சிவா கமதிலகமாக சிறப்பித்தார்கள் ஐயாவை
சிகா ரமாய் புகழ் பெற்று பெரிய ஐயா
நற்குணா திசயங்களுடன் சிறப்பான பூசைதனை
சிற்கால வதனமாக சிறப்பித்து வந்தார்
எழுபத்தி ஏழாம் ஆண்டினிலே ஐயாவை
வலு கொண்டு அரசாங்க அனுசரணையால்
சமாதான நீதிபதியாக சிபார்சு செய்து
உமா மகேஸ்வரர் கருணை பெற்றார்
தொண்ணூற்றிரண்டில் தோன்றிய தொருபட்டம்
மின்னு இந்து கலாச்சார அமைச்சானது
திரு முருக கிருபானந்த வாரியாரினால்
அருள் தரு வேதா கமாமணியாய் பட்டமது சூட்டினரே
தேடிவந்த புகழும் பட்டமும் தென்றலாய் வீசியும்
நாடிவரும் அனைவருக்கும் நல்லுதவி செய்தார்
தாய்போன்று சேவை செய்து விநாயகரின்
சேய்யென நல்லருள் பெற்று விட்டார்
என்றும் மாறாத பக்தியின் பெரும்பலனால்
இன்றும் இளமையுடன் இன்புற்றிருக்கிறார்
அற்புத கீர்த்தியுடை பால விநாயகர்
பொற்பதம் நாடுவோம் தினமும்
எப்போதும் இப்படியே பெரியவர் வாழ
தப்பாது நல்லருள் புரிய வேண்டும்
சதாயுஷ்யம் கண்ட சண்முகரட்னசர்மா
நிதானமாய் கனகாபிஷேகமும் காணவேண்டி
ஆழமாய் அன்புடன் வேண்டுகின்றோம் - எம்
பால செல்வ விநாயகர் திருப்பாத கமலம்

*"செஞ் சொற் கவிதா சிரோமணி"*
ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்
*துன்னையூர்*

# மங்கள நலன் பெற்று நெடிது வாழ்க வாழ்கவே

எப்போதும் சிரித்தமுகம் எவரையும் கவரும்திறன்
தப்பேதும் சொல்ல முடியாத தரணிபோற்றும் உத்தமர்
முப்போதும் திருமேனி தீண்டும் திருவருட் செல்வர் எம்
கப்பித்தாவத்தை சர்மா ஐயா காணுகின்றார் சதாபிஷேகம்

திருவருள் திகழ்ந்திருக்கும் பால செல்வ விநாயகரின்
பெருவருள் பேற்றினால் பெற்றுவிட்டார் பல செல்வம்
திறமையுடை ஐயாவின் திகழ்வாழ் வொளியினால்
பெருமையுடை சதாயுஷ்யமதை காணுகிறார் சாந்தமுடன்

அத்தி முகன் விநாயகரின் ஐக்கியம் ஐயாவுடனே
பக்தி கொண்டு ஐயாசெய்யும் தொண்டினாலே
சித்தி பெற்று சிறக்கின்றன காரியங்களனைத்தும்
வித்தி யோங்கி விளங்குகின்றார் சதாயுஷ்ய பெரிய ஐயா

மங்கள நலன் தரும் நல்வாழ்வின் பயனினால்
எங்குமே எழில் கொண்டு ஏற்று விட்ட பெரும் புகழினால்
மங்காத மாட்சிதனை மனையினிலே கொண்டுவிட்டார்
மங்கள நலன் பெற்று நெடிது வாழ்க ! வாழ்கவே !

துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்.

---------------------------------------------oo---------------------------------------------

## சதாபிஷேக வாழ்த்து

என்பால் இனிய அந்தணப் பெரியோரே ஐய
அவர்தம் இன்பத் துணையோளே என்னம்ம
இன்று காண் தங்கள் இனிய சதாபிஷேக பெருநாளில்
ஒன்றுகூடி உவந்து வாழ்த்தி மகிழ்வுற்றோம்
அன்பால் அறத்தால் அரிய சேவைகள் பலவாற்றி
அதியுயர் அந்தணப் பெருமக னவனிவனே
என்றே கூறி இகமது போற்றி மகிழ்ந்தே தான்
இன்னும் பல்லாண்டுகள் பல்லாண்டுகள் வாழ்வீரே!

கண்போல் தமிழும் சைவமும் வளரப் பூவுலகில்
நன்றே கணபதி பூசைகள் செய்து உயர்ந்தோனே
பண்பாலுயர்ந்த சண்முகரட்ண சர்ம ஐய
பாரியார் ராஜலக்ஷ்மி அம்ம இருவீரும்
திண்மைகொள் வாழ்க்கை சிறப்புடனாற்றி நன்கே
திருவெலாம் பலபெற்றுயர்ந்திட வாழ்த்துவமே
அண்மைக்கால பூசல்கள் நாட்டில் அழிந்தொழிய
அசையாப் பூசைகள் ஆயிரம் நடத்திய நீ வாழி

சதாபிஷேக விழாக்கண்ட சண்முகரட்ண சர்மா வாழி
சதா அவருடன் இணைந்த ராஜலக்ஷ்மி அம்ம வாழி
சதா அவர் வழித்தோன்றல்கள் நிதம் வாழி
சதா என் கண்மணித் தமிழன்னையே நீ வாழி

-அருட்கவி வேலணை வேணியன்

உ
கணபதி துணை

# பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்களின் பூர்த்தி விழாவை முன்னிட்டு ஓர் அன்பனின் சமர்ப்பணம்

1. நல்லைச் சண்முகனின் முல்லைத் திருவடியை
அர்ச்சிக்கும் அந்தணர் குடும்பத்திலே பெருநாமம்
சண்முகரத்தினமாய் நல் நாமங்கொண்டு
சுந்தரனாய் அவதரித்தார் எங்கள் குரு.

2. நல்வினை ஈர்த்திழுக்க நல்லைப்பதிவிட்டு
தலைநகராம் கொழும்பில் மருதானை பெரும்பதியாம்
கப்பித்தா வத்தைக் கணேசன் பெரும் பூசைப்
குருவானார் எங்கள் குரு.

3. முப்போதும் தப்பாது முழுமனதாய்ப் பூசைசெய்து
திருவருளைத் தினமும் வளர்த்துநின்று ஐங்கரனார்
அரிய பெரும் புகழ் தன்னை
உலகறிய வைத்தார் எங்கள் குரு.

4. ஐங்கரனை நாடி அருள் வேண்ட வருபவரை
குருவடிவாய் நின்று வழிநடத்தி உபயங்கள்
நிலையாகச் சீராய் நித்தம் நடப்பதற்கு
காலாக நின்றார் எங்கள் குரு.

5. வழிபட வருவோரில் உள்ளவரை நன்கறிந்து
உள்ளன்பு கொண்டு உட்புகுந்து அன்னவரின்
உள்ளக் குறை முடித்து அவர் மூலம்
கலைக் கோயில் வளரவைத்தார் எங்கள் குரு.

6. நீயே கதியென்று கதியின் றிவருபவரை
அன்போடு இன்முகமாய் வரவேற்று மனமுவந்து
ஆதரவு பல வழங்கி அகிலத்தில் பேர்விளங்க
காரணமாய் இருந்தார் எங்கள் குரு.

7. உள்ளத்தில் நிறைவு கொண்டு நிறை குடும்பியாய் விளங்கி
நற்தொண்டு நாட்டுக்குச் செய்தமையால் நேர்மைமிகு
சாந்தமுடைய சமாதான நீதிமானாய்
மேன்மை பெறு பேர் பெற்றார் எங்கள் குரு.

8. இசைப்பிரியனாயிருந்து இசைவளர்க்கும் எண்ணத்தால்
ஸ்ரீராம கானசபா தன்னிலே மேன்மையுறு
போசகராய்ப் பெருமையுடன்
சற்குருவாய் விளங்குகின்றார் எங்கள் குரு.

9. சிவமே பரமென்று சிவபூசை செய்கின்ற
சிறப்பு மிகு அந்தணர் அனைவருக்கும் சிறப்பளிக்க
மேன்மையுறு உபதலைமைப் பதவிதனை
பார்புகழச் செய்பவராம் எங்கள் குரு.

10. மேன்மை பல நிறைந்த மேன்மைக் குணத்தாலே
மேல்நிலைமை எய்திச் சிறப்பாக பல்லாண்டு
பக்குவமாய் வாழ்கின்ற எங்கள் குருநாதன்
திருவடிக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டே.

க. சிவரஞ்சன்
அன்பர்

# உரை மலர்

# திருக்கலைசைச்
# செங்கழுநீர் விநாயகர்
# பிள்ளைத்தமிழ்

*(வ. சிவராசசிங்கம்)*

திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்பது பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் மீது மாதவச் சிவஞான முனிவர் அவர்களால் பாடப்பெற்ற ஒரு பிரபந்தம்.

பிரபந்தம் என்னும் சொல் தமிழில் சிற்றிலக்கியம் என்னும் பொருளில் வழங்கிவருகிறது. பிரபந்தம் தொண்ணுற்றாறு வகைப்படும். அவற்றுள் பிள்ளைத்தமிழ் என்பதும் ஒன்று. பிள்ளைத்தமிழ் ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒவ்வொன்றும் பத்துப்பத்துப் பருவங்களையுடையது. காப்பு, செங்கீரை, தால் சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருவகைக்கும் பொதுவானவை. ஆண்பாற் பிள்ளைத்தமிழாயின் இறுதி மூன்று பருவங்களும் சிற்றிற்பருவம், சிறுதேர்ப்பருவம் சிறுபறைப்பருவம் என அமையும். பெண்பாற் பிள்ளைத்தமிழெனில், இறுதி மூன்றும் அம்மானை, நீராடல் ஊசற் பருவங்களாக அமையும்.

பிள்ளைத்தமிழ் பெற்ற தெய்வங்களுள் முருகவேலும் உமையவளுமே முதன்மையானவர்கள். விநாயகப் பெருமானும் பிள்ளையாகத் தோற்றியவர்தாம். எனினும் அவர்மீது பிள்ளைத்தமிழ் அதிகமாகப்பாடப்பெறவில்லை. இக்குறையை நீக்கக் கருதிப்போலும் சிவஞானமுனிவர் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் பாடியருளினார்.

கலைசை என்பது தொட்டிக்கலை என்பதன் மரூஉமொழி. எல்லையறு பரம்பொருளான இறைவன் அடியார்தம் அல்லலறுத்தாளுதற் பொருட்டு ஐந்தொழில் நடம்புரியும் தில்லைநகரத்து எல்லையில் விளங்குவது கலைசை. இத்தல விநாயகர் அடியார்களினால் செங்கழுநீர் மலர்மாலை அணிவித்து வழிபாடு செய்சிறப்பினால் செங்கழுநீர் விநாயகர் எனும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

சிவஞானமுனிவர் தென்பாண்டி நாட்டுப் பொதியமலைச்சாரலில் பாவநாசத்துக் கணித்தாயுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் சுமார் 185 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். திருவாவடுதுறை ஆதீனக் குலதெய்வம் எனப்போற்றப்படும் இக்கவி முனிவர் காஞ்சிப்புராணம் (முதற்காண்டம்) முதலாக பதினான்கு செய்யுள் இலக்கியங்களையும் தொல்காப்பியச் சூத்திர விருத்தி இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல் விருத்தி உரைத்திருத்தம் ஆகிய இலக்கண நூல்களையும் தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம் ஆகிய தருக்க நூல்களையும் சிவஞானபோதமாபாடியம், சித்தாந்தப்பிரகாசிகை ஆதியாம். சித்தாந்த விளக்க நூல்களையும், இன்னபிற பல நூல்களையும் இயற்றியவர்.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பொதுவாகப் பருவத்துக்குப் பத்தாக பத்துப் பருவங்களுக்கும் ஒரு சேர நூறு பாடல்களைக் கொண்டு அமைவன. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் காப்பு முதல் சிறுபறையீறாகப் பருவத்துக்கு ஐந்துபாடல்கள் வீதம் 45 விருத்தங்களைக் கொண்டுள்ளது. 10 வது சிறு தேர்ப்பருவத்தில் ஆறுபாடல்கள் உள்ளன.

பிள்ளைத்தமிழில் முதலாவது காப்புப்பருவம், பாட்டுடை நாயகராகிய தெய்வக்குழந்தையைக் காக்கும் வண்ணம் பல தெய்வங்களை வேண்டுவதாக அமைவது. திருமால் காத்தற் கடவுளாதலின் காப்புப்பருவத்து முதற்பாடல் அவருக்கு அமைவது மரபு. விநாயகராகிய பாட்டுடைத் தலைவரைக் காக்குமாறு திருமாலை வேண்டும் பாடலில் விநாயகர் சிறப்பும் திருமாலின் சிறப்பும் பேசப்படுகின்றன. பிள்ளையாருக்கு யானைமுகம் இருப்பதால் அவர் ஏனைய யானைகள் போன்றவர் அல்லர். பிற யானைகளைக் கட்டுவாரும் ஏறிச் செலுத்துவாரும் உளர். ஆனால் தம்மைக் கட்டுநரும் ஏறிச் செலுத்துநரும் எவரும் இல்லை. என்பதைக் காட்டவே பாசமும் அங்குசமும் தாங்கியுள்ளார், பஞ்சக்கரத்துக்குஞ்சரமுகத்தர். இத்தகைய விநாயகப் பிள்ளையைக் காக்குமாறு வேண்டப்படும் திருமால் பெருமை

மிக்கவர். பெருமைப் பண்பின் சிறப்பமிசம், பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளல். 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே' என்பது நறுந்தொகைவாக்கு. பாலாழியை அமுதம் வேண்டித் தேவர்கள் கடைந்த காலை அது நஞ்சை வெளிப்படுத்தியது. அதன் காளவெம்மை, முன்னர் பவள வண்ணராக விளங்கிய திருமாலைச் சாமளவண்ணராக்கியது. அத்தகைய குற்றத்தினை அவர் பொருட்படுத்தாது, தமக்கு இலக்குமியையும் கவுத்துவமணியையும் வழங்கிய அப்பாற் கடலைத் தம் சயனப்பள்ளியாக்கிக் கொண்ட பெருமை திருமாலுக்குரியது. இவ்வாறு காத்தற் தெய்வமாகிய திருமாலையும் காக்கப்பெறுந் தெய்வமாகிய கணபதிப் பொருளையும் சிறப்பித்துப் பேசும் பாடல் சிந்தனைக்கு விருந்துபடைப்பது.

*கார்கொண்ட கருநிறக் காளத்தை வெண்திரைக்*
*கைகளின் எடுத்து நீட்டுங்*
*கடும்பிழையை நோக்காது திருவினொடு சுவையமுது*
*கதிர்மணி தனக் குதவிடும்*
*பேர்கொண்ட நன்றியே பாராட்டி வெண்கேழ்ப்*
*பெருங்கடற் பள்ளி கொண்டு*
*பிறங்குநீர்ப் புவியிசைப் புருடோத் தமப்பெரும்*
*பெயர்நிறுவும் அண்ணல் காக்க*
*ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும்*
*இலரென்ப துலகு தேறற்*
*கெடுத்தவெம் பாசமோடங்குசந் தன்கரத்*
*தேந்திமத தாரை சிதறிப்*
*பார்கொண்ட எண்திசைத் தறுகட் களிற்றுடல்*
*பனிப்பச் செவிக்கால் எழீஇப்*
*பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க் கலைசையிற்*
*பதியுமோர் களிறு தனையே.*

கவிதைக்கு உயிராயுள்ளது பொருள்; உடலாயமைவது வனப்புடைய சொல்லிற்பனம்; உயிர் நாடியாயொளிர்வது கற்பனை. கவிஞர்களின் கற்பனை பல வண்ணம் அமையும். சிவஞான முனிவரின் கற்பனைத் திறம் தனிவிதமானது.

ஒரு பொய்கையின் வனப்பை வருணிக்கப் புகுந்த கவிஞர் அப் பொய்கைக்கும் புரவலர்களுக்குமிடையே பொதுமைகளை எடுத்துக்காட்டி விளக்கஞ் செய்யும் சாதுரியத்தில் அவரின் கற்பனைத் திறம் பிரகாசிப்பதைக் காணலாம். கலைசையிலுள்ள தடாகங்கள், மலர்கள் வள்ளியோரை ஒத்து விளங்குகின்றன. வண்மைமிக்க சான்றோர்கள் தமது புகழாகிய பெண்ணைத்தூதாக அனுப்பிப் பரிசிலரை யழைத்து, பொருள் வழங்கியாதரவு செய்து மகிழ்வர். அவ்வாறே வாவியானது மணமாகிய தூதினையனுப்பி, வண்டுகளாகிய விருந்தினர்க்குத் தேனாகிய பரிசிலை வழங்கி மகிழ்கிறது.

இக்கருத்தினைக் கொண்ட பாடலைத் தாலப்பருவத்தில் காணலாம். (தாலப்பருவம், குழந்தை தாலட்டைக் கேட்டு மகிழும் பருவம். இது, ஏழாவது மாதத்தில் நடைபெறுவது) பாடலைப் பார்ப்போம்.

*புதிய வாசத்தனைப் பரப்பிப்*
*புறத்தே யெங்கும் திரிந்தயரும்*
*பொறிவண் டினங்கள் தமையழைத்தம்*
*புயத்தே னூட்டிப் பகலோம்பி*
*முதியநி சிவந்திடும் போது*
*முதைவிண் டலர்ந்த நறுங்குமுத*
*மூரிச் செந்தேன் முகந்தூட்டி*
*முழுதுங்காத்துக் கடல்வரைப்பின்*

*வதியு மிரவோர் தமைக்கீர்த்தி*
*மகளாந் தூதின் வரக் கூவி*
*மகிழ்ந்தெப்போதும் எவ்வாறும்*
*வழங்கிக் காக்கும் பெருங் கொடையோர்*
*கதிய தடஞ்சூழ் திருக்கலைசைக்*
*களிறே தாலோ தாலேலோ*
*கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்*
*கன்றே தாலோ தாலேலோ.*

பொய்கையானது பொழிவில் உலவும் விருந்துகளாகிய பொறி வண்டுகளை பூமணமாகிய தூதினையனுப்பி யழைத்து பகலுணவாகத் தாமரை மலர்த்தேனும் இரவுண்டியாகக் குமுதமலர்த் தேனும் கொடுத்து ஆதரித்து, வள்ளல்கள் போன்று, கொடையாகிய போக்கினைக் கொண்டு திகழ்வன என்பது பாடலின் சாரம்சம்.

இன்னோர் சிறந்த, கற்பனை துறுமும் பாடலை சப்பாணிப்பருவத்தில் காண்கிறோம். (இருகைகளையும் ஒருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம் சப்பாணிப்பருவம்) இக்கற்பனை தத்துவார்த்த அடிப்படையில் அமைந்தது. விநாயகப் பெருமானது மேல் நோக்கிய வலக் கரம் காக்கும் கரம். அது உயிர்க்கூட்டங்களை நோக்கி "உங்களது பிறப்பறு நிலை முற்றி சிவபுண்ணியம் நிரம்பி, முக்குற்நீக்க நிலை எய்தி இருவினை ஒப்பு எய்தப் பெறுங்காலத்து உங்கள் மலக்கட்டை ஒழித்திடுவேன். அதற்காகவே உள்ளேன், ஆதலின் அஞ்சற்க" என்று கூறுவது போல விளங்கும். விநாயகரது இடக்கரம் தாழ்ந்திருப்பது அடியவரின் அகப்புறம் பற்றுக்களுக்குரிய உடலுயிர் பொருள்களை ஏற்பதற்கென்றே இருக்கிறேன். எனவே 'இச்சுமைகளை என் செய்வோம்' என்று எண்ணிக் கவலை கொள்ளற்க' எனத் தேறுதல் கூறுவது போல அமைந்திருக்கும். இத்தகைய இருகரங்களும் சேர்ந்து, தொடர்ந்து கொட்டுதல், ஈதலும் ஏற்றலுமாகிய கொள்கை வேறுபாடுடைய கைகளுக்குள் பகைமை முற்றியிருப்ப அதனைத் தடுப்பார் எவருமின்மையின் அக்கரங்கள் கொட்டிய வண்ணம் இருக்கின்றன என்பது கவிஞரின் கற்பனை.

சிவஞான முனிவரின் கவிக்குச் சிறப்புச் சேர்ப்பது அவரது கற்பனைத் திறன் மாத்திரமன்று. அவரது பாடல்கள் சொல்லும் பொருளும் கந்தத் தொடையும் வன்னநடையும் பயிலும் பொற்பமைந்து உவமை உருவகம் தற்குறிப்பேற்றம் முதலாய அணிகளுக்கிடமாகி ஆற்றொழுக்கோடு இயல்வன. அவரது கவியில் தவவலியும், மொழிப்புலமையும் கருத்துவளமும் ஒருங்கிணைந்து ஒளிர்வதைக் காணலாம். சான்றாகச் சப்பாணிப்பருவத்தில் பிறிதொரு பாடலை நோக்கலாம்.

இப்பாடலில் உயிர்களின் இயல்பும் இறைவனது பேரருள் திறமும் ஒருங்கே காட்டப்படுகின்றன. உலகுள யானைகள் மும்மதம் வடிந்ததும் தம் அறிவை இழக்கும். கட்டுத்தறியைச் சிதைக்கும்; சங்கிலியை அறுத்து வீசிச்செல்லும்; பாகர்களை மதியாது திரியும்; அதேவேளை யானைப் பாகர்களும் சும்மா இரார். பாசமும் அங்குசமுங்கொண்டு யானையைத் தேடியலைவர். யானைகள் போன்று உயிர்கள் காமம் வெகுளி மயக்கம் எனும் முக்குற்றம் கொண்டிருத்தலால் மெய்ம்மையுணர்வை இழக்கும். அன்பினைக் கைவிடும் அருளினை நீக்கும். உலகியலாசா பாசங்களில் ஈடுபடும். ஆசான் உரைக்கும் வழிநில்லா. மனமுதிர்ச்சியால் அறிவும் அன்பும் அருளும் இழந்து குருவழிநில்லாது லௌகிகத்தில் நாட்டங்கொண்டு இறைவனை மறக்கும் இயல்பு உயிர்க்குண்டு. அதனால் உயிரை மத முதிர்ச்சியால் தறியை முறித்து சங்கிலியையறுத்து பாகரைமீறும் யானையாக உருவகம் செய்தார். உயிர்களாகிய யானைகளை விடாது தொடர்ந்து பிடித்து பிணித்து அடக்கவே விநாயகர் கைகளில் பாசங்குசத்தைத் தாங்கியிருக்கிறார்.

*மும்மல மாமத முற்றுப்போத*
*முழுத்தறி யறவீசி*
*முகிழ்த்தலர் அன்பின் சங்கிலியுதறி*
*முதிர்ந்த அருட்கூடத்(து)*
*இம்மென நீங்கி வெளிக்கொடு புவனம்*
*எனும்கடு வனமோடி*
*எப்பா கர்க்கும் அடங்கலவாகி*

*இயங்கும் உயிர்க்கரிகள்*
*தம்மைவிடாது தொடர்ந்து பிணிப்ப*
*தருமங்குசபாசம்*
*தாங்குதல் கண்டும் தம்போலெண்ணித்*
*சார்பவை தமை நகையாகக்*
*கொம்மை மலர்க்கைகள் கொட்டுவ தேய்ப்பக்*
*கொட்டுக சப்பாணி*
*குலைகெழு தடைநிறை கலைசை நகர்க்கிறை*
*கொட்டுக சப்பாணி.*

இவ்வாறே ஏனைய பருவப் பாடல்களிலும் கவிஞர் பிரானின் கற்பனை களிநடம்புரிவதை, பாடல்களைக் கருத்தூன்றிப் படிப்போர்கண்டு உவக்கலாம். பிள்ளைத்தமிழ்ப் பத்துப் பருவங்களுள்ளே அம்புலிப்பருவமே கவிஞர்க்குச் சோதனையாயமைவதும் கவிஞரது கவிதா சாமார்த்தியத்தைப் புலப்படுத்துவதும் ஆகும் என்பர். பாட்டுடைப்பிள்ளையோடு விளையாடுவதற்குச் சந்திரனை வருமாறு அழைக்கும் பொருளுடையது அம்புலிப்பருவம். சாமபேததானதண்ட உபாயங்களைக் கையாண்டு சந்திரனைச் செவிலித்தாய் அழைப்பதாகப் பாடல்கள் அமையுமாதலின் பொருட்சுவை பொதிந்து விளங்கும் இப்பருவம். முதலில் சாமநெறியில் நின்று அம்புலியே "ஐங்கரனுடன் நீ விளையாட வருவதால் நீயடையும் நன்மைகள் அனந்தம். கயமுகனிடமிருந்து நீயும் உட்படத் தேவர்களைக் காத்தவர், இப்பிள்ளையார் நீ இவருடன் விளையாட வந்தால் உன்னைப் பின் தொடரும் பாம்பின் தொல்லையிராது" என்று நயம்படச் சொல்லி, சந்திரன் விநயமாக அழைக்கப்படுகிறான். இனிபேத நெறியினைக் கையாண்டு, "பாராமுகமாகி நீ வராதிருந்தால் இப்பிள்ளையின் கோபத்துக்குள்ளாக நேரும். தக்கன் வேள்வியில் வீரபத்திரர் உன்னைத் தேய்த்ததை நீ மறந்திருக்கமாட்டாய். அவ்வீரனின் அண்ணன் இந்த விநாயகன் என்பதையறிவாய். ஆதலால் பகைத்தல் ஒவ்வாது" என்று கூறியச்சுறுத்தும் தொனியில் அழைப்பதும் ஆகிய பொருளமைந்த பாடல்களும் கவிச்சுவை பொழிவன.

சிவஞானமுனிவரது பாடல்கள் கற்பனை வளம் சிறந்தவை என்பதை ஏலவே பார்த்தோம். அவரது சொல்லிற்பத்தியும் இலக்கணத்திட்பமும் பாடலைப் படிக்க முனைவார்க்கு முதலில் மலைப்பை ஏற்படுத்தும் பாங்கில் அவரது சொற்கட்டுகள் அமைந்துள்ளன. நுண்மதித் திறப்பணங்கொண்டு உட்டுளை செய்து நோக்கவே பாடற் பொருளருமை புலப்படும். எல்லாப் பாடல்களையும் இவ்வாறு நோக்க அவகாசமிலாதார் வருகைப்பருவப் பாடல்களையேனும் படித்துப் பொருட்பயனுங் கவிச்சுவையும் பொருந்தலாம். பிள்ளைத் தமிழ்களில் வருகைப் பருவப்பாடல்கள் தோத்திரத்துக்கு உகந்தனவாக அமைந்தவை. சிறப்பாக, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், 'தொடுக்குங் கடவுட்பழம்பாடல்' என்ற செய்யுளும் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழில் 'பேராதரிக்கும் அடியவர்' என்ற பாடலும் அவ்வத் தெய்வங்களின் உருவச்சிறப்பையும் கருணைத் திறத்தையும் ஓவியமாயுணர்த்துவன. அவ்வாறே செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழிலும் உயிர்வடிவாயுள்ள பாடல் இது.

*உருகும் அடியார் அள்ளுற*
*உள்ளே யூறும் தேன்வருக*
*உண்ணத் தெவிட்டாச் சிவானந்த*
*ஒளியே வருக புலன்வழி போய்த்*
*திருகும் உளத்தார் நினைவினுக்குச்*
*சேயாய் வருக எனையாண்ட*
*செல்வா வருக உமையீன்ற*
*சிறுவாவருக இணைவிழியால்*
*பருகும் அமுதே வருக உயிர்ப்*
*பைங்கூழ் தழைக்கக் கருணைமழை*
*பரப்பும் முகிலே வருக நறும்*
*பாகே வருக வரைகிழித்த*
*முருகவேட்கு முன்னுதித்த*
*முதல்வா வருக வருகவே*
*மூரிக் கலசைச் செங்கழுநீர்*
*முனியே வருக வருகவே.*

# கனகாபிஷேக வைபவம்



கனகாபிஷேகம் என்பது பொன்னால் அபிஷேகம் செய்வது என்று பொருள். மிக உயர்ந்த நிலையிலுள்ள ஒருவரை கௌரவிப்பதில் கனகாபிஷேகம் என்பது மிகவும் போற்றத்தக்க சிறப்பு மிக்க சீரிய வைபவமாகும்.

கனகாபிஷேக வைபவம் பண்டு தொட்டு நமது பாரத மண்ணில் ஓர் ஒப்பற்ற வைபவமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி தஞ்சை நாயக்கர் மன்னர்களுள் ஒருவரான அச்சுதராயன் சிறப்புடன் அரசு புரிந்தகாலம் அது.

மன்னனின் மகன் ரகுநாத நாயக்கர் பிள்ளைப் பருவத்திலேயே பாப்பாடும் திறம் பெற்றிருந்தார். இளவரசன் சமஸ்க்ருத மொழியிலே அபார ஆற்றலைப் பெற்றிருந்தார்.

குருகுலம் பயிலும் நாளிலேயே இளவரசர் நல்ல கவிஞனாக திகழ்ந்தார். அந்தப் பால் மணம் மாறா பருவத்திலேயே பல அரிய காப்பியங்களை இயற்றி ஈடு இணையற்ற கவிஞராகத் திகழ்கிறார்.

இளவரசர் தமது தந்தையார் அச்சுதராய மன்னனின் சரிதத்தை இரண்டே நாளில் கவிதை வடிவில் எழுதி முடித்து தந்தையாரிடம் காண்பித்தார்.

அச்சுதராயன் மகன் இயற்றிய தமது சரிதத்தை படித்து அதிசயித்தான். மகனை ஆரத்தழுவி அகமகிழ்ந்தான். மன்னன் மகனுக்கு பொன்னாரம் சூட்டினான், புகழாரம் சூட்டினான்.

மன்னன் மகன் இயற்றிய கிரந்தத்தை "அச்சுதராயேந்திர அப்யுதம்" என்று பெயர் சூட்டி மகனைப் மென் மேலும் பாராட்டி பேரானந்த பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்தான்.

ஓர் நந்நாள் அரண்மனையிலே அற்புதமான விழா எடுத்து அவையிலே பல தேசத்து மன்னர்கள் சிற்றரசர்கள் பண்டிதர்கள் கலைஞர்கள் கூடியிருக்க இளவரசனுக்கு பொற்காசுகளால் அபிஷேகம் செய்து கௌரவித்தான்.

தந்தையை மகன் கவியால் கௌரவித்தான். தந்தையோ மகனை கனகாபிஷேகம் செய்து கௌரவித்தான்.

அடுத்து சரபோஜி மன்னன் ஆட்சி காலத்தில் ஒரு கனகாபிஷேக வைபவம் நடந்தது.

காஞ்சி காமகோடி பீடத்தின் 63வது ஆசாரிய ஸ்வாமிகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ மஹா தேவேந்திர ஸரஸ்வதி சுவாமிகளுக்கு மன்னன் கனகாபிஷேகம் செய்தான்.

சிவாஜி மஹாராஜாவும் 64வது காமகோடி பீடாதிபதியாக விளங்கிய சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் மகா சந்நிதானத்திற்கு மூன்று முறை கனகாபிஷேகம் நடத்தி கொண்டாடினார்.

அதேபோல் காஞ்சி காமகோடி பீடத்தின் 65வது பீடாதிபதியாகி விளங்கிய ஸ்ரீ சுதர்சன மஹா தேவேந்திர ஸரஸ்வதி சுவாமிகளுக்கும் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தான் சிவாஜி மன்னன்.

இவ்வாறு குரு மகான்களை மன்னர்கள் கனகாபிஷேகம் செய்து கௌரவித்தார்கள். 1954ம் ஆண்டு சங்கரஜெயந்தியன்று காமாக்ஷி அம்மன் ஆலயத்திலுள்ள சங்கர பகவத் பாதாள் விக்ரஹத்திற்கு கனகாபிஷேக வைபவம் மிகச் சிறப்பாக நடந்தது.

பக்தர்களின் பிரார்த்தனைக்கு இணங்க பரமாசாரியாளுக்கு 1957ம் ஆண்டு ஜயேந்திர ஸரஸ்வதிஸ்வாமிகள் கனகாபிஷேகம் செய்தார்கள்.

1965ம் ஆண்டு ராம நவமியன்று ஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் தமது திருக்கரத்தால் பரமாசாரியாளுக்கு கனகாபிஷேகம் நடத்தினார்கள்.

கனகாபேஷேக வைபவத்தை பற்றி பரமாசாரியார் மிக அருமையான தத்துவ போதனையைத் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்கள்.

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்

நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம் பகவத் பாத சங்கரரை நான் நமஸ்கரிக்கின்றேன். அவர் சுருதி, ஸ்ம்ருதி, புராணங்களின் உறைவிடம் மட்டுமல்ல, அவர் கருணையின் உறைவிடம் லோகத்திற்கு சாந்தியை அளிப்பவர்.

"பிரதி தினமும் பக்தர்கள் எனக்குத் தேங்காய்கள் எண்ணற்ற புஷ்ப மாலைகள், துளஸிதளம், வில்வமாலைகள், கவிஞர்கள் இயற்றிய பாமாலைகள் முதலியவைகளை சமர்ப்பிக்கிறார்கள். இவை எல்லாம் எனக்கு ஒருவித அபிஷேகமாகின்றன. இன்று எனக்குக் கனகாபிஷேகம் செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரே ஒரு காரணம் தான் உண்டு.

சுருதிகளும், ஸ்மிருதிகளும், புராணங்களும் வாசம் செய்வதற்கிடமானவரும், சகல ஜீவராசிகளிடம் கருணை நிரம்பியவருமான ஸ்ரீபகவத் பாதர்களின் பெயரையே நான் பெற்றிருப்பதால் தான் எனக்கு கனகாபிஷேகம் நடக்கிறது.

ஸ்ரீஆதிசங்கரின் பவித்திரமான பெயரைத் தரித்திருப்பதின் பலன் இது என்றால் அவருடைய ஆக்ஞைகளை நிறைவேற்றினால் மக்கள் அனைவருக்கும் பொன்மழை பொழியும் என்பதில் சந்தேகமில்லை.

பகவத்பாதரின் கனகரா ஸ்தோத்திரம் வறுமையால் வாடிய தம்பதிகளுக்கு பொன்னைவர்ஷித்து. ஸ்ரீ பகவத்பாதரின் ஆக்ஞை தினசரி நிறைவேற்றப்பட்டால் ஈசுவரனுக்கு கனகாபிஷேகம் செய்ததாக ஆகும்.

**(ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்து அருளிய அமுத மொழிகள்.)**

உ

சிவமயம்

# கும்பாபிடேகம் பெரும் சாந்தி

இலங்கை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள்

(கும்பாபிடேக காலத்தில் பெருமானை யாகசாலையில் கும்பத்தில் வைத்து வழிபடுகிறோம். கும்பம் சிவசொரூபமாக விளங்குகிறது. அங்குச் சொல்லப்படும் மந்திரங்களும், செய்யப்படும் கிரியைகளும், பாவனைகளும் சக்தியுடையனவாக விளங்குகின்றன என்பனபோன்ற பலவற்றை இக்கட்டுரை மூலம் விளக்குகிறார் ஆசிரியர்.)

உலகத்தில் உள்ள பொருட்களில் ஓர்வித பூதசக்தி உண்டு. அதை மேனாட்டார் மின்சாரம் என்பர். அந்த சக்தி எல்லாப்பொருட்களிடத்தும் ஒரே தன்மையாக அமைவதில்லை. குறைந்தும் கூடியும் அமைவதுண்டு.

ஆகவே எல்லாப்பொருட்களிடத்திலும் ஓர் சக்தியுண்டென்பதை இந்த காலத்தில் எவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த சக்தியை நடத்தும் பொருட்கள் நடத்தா பொருட்கள் என இருவகையுண்டு. செம்பு, பொன் முதலியவை மின்சாரத்தை நடாத்தும் பொருள்கள். மண், மரம் முதலியவை நடத்தா பொருள்கள் ஆகும். அதைப்போல தெய்வீக மின்சாரத்தை நடத்தும் பொருள் எதுவெனில் தெளிந்த ஞானியின் உள்ளம், சுவாசம், விரல்கள், தர்ப்பை, மாவிலை முதலியனவாம். மின்சாரம் எங்கும் நிறைந்திருந்தாலும் இப்பொருள்களின் வழியாக மிகச் சிறப்பாகச் செல்லும். அதனால்தான் சிவாலயத் தொழில்கட்கு இவை முக்கியமாக வேண்டப்படுகின்றன. இனி எழுத்தென்பது சொல்லுக்குக் காரணமாய்ச் சுத்த மாயையாகிய குண்டலியில் நின்றெழும்பும் ஒலியாகும்.

அவ்வெழுத்துக்கு ஒலிவடிவு – வரிவடிவென இரண்டு வடிவுகளுண்டு இனி, ஒலிவடிவானது பஞ்சமை முதல் நான்கு வாக்குகளின் நிலைகளை அடைந்து மூலாதாரம் முதலாக மென்மேல் எழுச்சியுறுவதாம். எழுச்சி உறுதலின் எழுத்து எனப்பட்டது என்றும் சொல்லலாம். இனி வரிவடிவு எழுத்தானது சடமாய் இருந்தாலும் அதற்கு மின்சாரம் முதலிய சக்திகளைப் போன்ற சக்தி உண்டு. எங்ஙனமெனில், தூரதேசத்தில் உள்ள ஒருவன் தனது மன எழுச்சிகளைத் தனது நண்பனுக்கு எழுதுகிறான். அப்படியே நண்பனும் அதை வாசித்தவுடன் எழுதியவனுடைய மன எழுச்சிகளை அறிகிறான். அன்றியும் ஒருவன் அவசர வேலை நிமித்தம் ஒருவரைக்கண்டு பேச நினைத்து அவரது அறைக்குள் விரைந்து செல்லும் போது வாயிலில் உத்தரவு இன்றி உட்பிரவேசியாதீர் என்று இருத்தலைக் கண்டவுடனே அவனது வேகம் தணிந்து நிற்றலைக் காண்கிறோம். ஆகவே வரிவடிவிற்கு சக்தி உண்டு.

இனி ஒலிவடிவான சொல்லுக்கும் சக்தி உண்டு. எங்ஙனமெனில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என ஏவியவுடன் ஏவப்பட்டவன் அக்காரியத்தைச் செய்து முடித்தலைக் காண்கிறோம். ஆகவே சொல்லுக்கும் சக்தி உண்டு. இனி செய்கைக்கும் சக்தியுண்டு என்பதை ஒருவன் தனது எண்ணத்தை வாயினால் சொல்லாமலும் எழுத்தால் எழுதாமலும் தனது உடலுறுப்பு ஒன்றினால் சிலவற்றை தெரிவிக்கலாம்.

உதாரணமாக ஊமையர்கள் தங்கள் விருப்பத்தை உடல் உறுப்புகளின் அசைவினால் வெளிப்படுத்துகிறார்கள். ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது மற்றொருவன் அதைச் செய்ய வேண்டாம் என்ற குறிப்பில் கைமறிப்பால் அல்லது கோபத்தோடு கண்ணால் பார்த்தவுடன் அதைச் செய்யாது விடுகிறான். ஆகவே செய்கைக்கும் சக்தியுண்டு.

இதுபோல் எண்ணத்திற்கும் சக்தியுண்டென்பதை, புராண சரித்திரவாயிலாக நாம் அறிந்திருக்கிறோம். இப்போது மேனாட்டார் சிலர் கையாளுகின்ற ஹிப்நாட்டிஸம் மெஸ்மரிசம் என்பதும் நமது எண்ணத்தின் சக்தியால் ஆனதே. அகவே எண்ணத்திற்கும் சக்தியுண்டு.

இப்படியாக ஆராயுமிடத்து சைவக்கிரியைகள் எல்லாம் எழுத்துக்களாலும் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பாவனைகளாலும் செய்யப்படுகின்றன. இவைகள் கும்பாபிஷேகத்தில் இன்றியமையாதனவாகத் தேவைப்படுகின்றன. கும்பாபிஷேகத்தில் வைக்கப்படும் கும்பம் சிவலிங்கத்தைப்போல் சடத்து வடிவாய் இருந்தாலும், சர்வசக்தி ஸ்வரூபமாய் இருந்தாலும், சர்வ தீர்த்தங்களையுடைமையாய் இருந்தாலும் கும்பம் சிவசொரூபமாம். இதையாகசாலையில் வைத்துப்

பூஜிக்கிறோம். யாகசாலா என்ற வடமொழிச் சொல்லில் உள்ள யகரம் யக்ருத்தை ககரம் சொல்லுதலையும் புகரம் சுகத்தையும் லகரம் லயத்தையும் குறிப்பதால் யாகசாலா என்ற சொல்லுக்கு ஞானயாகத்தால் லயஸ்தானத்தில் சுகத்தின் பொருட்டு செல்வது என்பதாகும்.

எனவே ஞானயாகம் செய்வதற்கு உரியஸ்தானம் யாகசாலையாகும். யாகசாலைக்கு ருத்ரசூத்திரம் 64 அல்லது 44 கோடுகளும்

| | | | | |
|---|---|---|---|---|
| விஷ்ணு சூத்திரம் | – | 34 | கோடுகளும் | |
| பிரம சூத்திரம் | – | 24 | " | |
| கண சூத்திரம் | – | 18 | " | |
| கலா சூத்திரம் | – | 16 | " | |
| மனு சூத்திரம் | – | 14 | " | |
| ரவி சூத்திரம் | – | 12 | " | |
| தச அல்லது பங்க்தி சூத்திரம் | – | 10 | " | போடவேண்டும். |

இதில் ரவி, தச சூத்திரங்கள் ஆகிய பன்னிரண்டு பத்து கோடுகள் பிரதிட்டைக்கு ஆகாதெனச் சில ஆகமங்கள் கூறுகின்றன. இனி சூத்திர, சூத்திரயாகசாலைக்கு 33 குண்டங்களும் விஷ்ணு சூத்திர யாகசாலைக்கு 25 குண்டங்களும், பிரம்ம சூத்திர யாகசாலைக்கு 17 குண்டங்களும், கண சூத்திரம், கலா சூத்திரம், மனு சூத்திரம் மூன்றுக்கும் தனித்தனி ஒன்பது குண்டங்களுமாம்.

ரவி சூத்திரத்திற்கு ஐந்து குண்டங்களும் பங்க்தி சூத்திரம் எனும் தச சூத்திரயாகசாலைக்கு ஏக குண்டமும் போடவேண்டும். இனி யாகசாலையில் உள்ள குண்டங்கள் பிருதிவி முதலிய தத்துவங்களை குறிப்பது எங்ஙனமெனில் கிழக்குத்திக்கில் நாற் கோணகுண்டம். இது பிருதிவி தத்துவத்தை உணர்த்தும்.

அக்கினித்திக்கில் அரசிலைபோல் குண்டம். இது நியதி மாயா தத்துவமாகும். இது ஜீவாத்மாவைக் குறிக்கும். தெற்கில் அர்த்த சந்திர குண்டம். இது அப்பு தத்துவத்தைக் குறிக்கும். நிருதியில் முக்கோண குண்டம். இது தேயு தத்துவத்தைக் குறிக்கும். மேற்கில் விருத்த குண்டம். இது ஆகாச தத்துவத்தைக் குறிக்கும். வாயு திக்கில் அறுகோண குண்டம். இது வாயு தத்துவத்தையும் குறிக்கும்.

வடக்கில் பத்ம குண்டம், இதுகலாதத்துவம் : சூரியனைக் குறிக்கும் ஈசானத்தில் எண்கோணகுண்டம். இதுகால தத்துவம்: சந்திரனைக் குறிக்கும். ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் விருத்த குண்டம். இதுவே பிரதானமாம். இது சிவ தத்துவம் சிவபெருமானைக் குறிக்கும்.

ஆகவே யாகசாலை 36 தத்துவ ரூபமானதும் சிவபிரானது அஷ்டமூர்த்த வடிவானதுமாம். இனி நாற்கோண குண்டத்தில் ஆஹவநியாக்கினியையும், அர்த்த சந்திர குண்டத்தில் தஷ்ணாக்கினியையும், விருத்தகுண்டத்தில் (மேற்கில்), காருகபத்தியாக்கினியையும், அறுகோண குண்டத்தில் கலாக்கினியையும், திரிகோண குண்டத்தில் யௌவனாகினியையும், யோனி குண்டத்தில் விருத்தாக் கினியையும் பத்ம குண்டத்தில் கேவலாக் கினியையும் எண்கோண குண்டத்தில் சாமான்யாக்கினியையும் பிரதான குண்டத்தில் சிவாக்கினியையும் பூசிக்க வேண்டும். ஆயினும் மற்றைய குண்டங்களுக்குப் பிரதான குண்டத்தில் இருந்தே அக்கினி எடுக்க வேண்டும். இனி குண்டங்களுக்குச் சிரசு, இருதயம், கீழ்மேகலை என்ற இந்த எட்டு உறுப்புகளும் அஷ்ட மூர்த்தி ஸ்வரூபங்கள் ஆகும். அரசிலைக் குண்டம் ஆகிய யோனி குண்டத்திற்கு யோனியும் பத்ம குண்டத்திற்கு நாபியும் வேண்டியதில்லை. இனி 33 குண்டத்தின் விசேஷடங்களைச் சிறிது சிந்திப்போம்.

சிவபெருமானுக்கு, சொரூபம் – தடத்தம் என இரண்டு வடிவங்கள் உள்ளன. சொரூபம் உலகத்திற்கு அப்பாற்பட்டது. சுயம் பிரகாசம் என்றும் சொல்லலாம். தடத்தம் என்பது உலகத்தோடு கலந்தவடிவமாகும். யாகசாலை, மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் அத்துவா வடிவமாகும். ஆனதன்மையால் இறைவனைப் பூசிப்பதற்கு யாகசாலை சிறந்த இடமாகும். சிவபெருமானும் 64 கலைவடிவமாக விளங்குகின்றார். அந்த கருத்தினையே 33 குண்ட யாக சாலையில் போடுகின்ற 64 சூத்திரங்களும் புலப்படுத்துகின்றன.

இந்த யாகசாலை, பூரணவடிவம் பெற்ற உத்தமபக்ஷ யாகசாலையாம். சிவபெருமானுடைய தடத்த வடிவம் ஆகிய திருமேனியில் சொரூபசிவபெருமானை ஆவாகித்துப் பூசிப்பது இந்த யாகசாலையின் தத்துவமாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம், சூரியன், சந்திரன், ஜீவாத்மா என்னும் எட்டுப்பேதமுடையது இந்த உலகம்.

இந்த எட்டுப் பொருள்களிலும் சிவபெருமான் கலந்து விளங்குகிறார். அன்றியும் பரம்பொருளை இந்து எட்டு இடங்களில் தான் வைத்து வணங்க வேண்டும். எப்படியெனில் நமது உயிர் அருவமானது. இந்த அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்துத்தான் அனுமானித்துக் காணவேண்டும். ஆகவே அவரது ஞானமயமானஅருட்டிருமேனியை மேலேகுறித்த தடத்த வடிவில் வைத்து பூசிக்க வேண்டும். இனி யாகசாலை குண்டங்களின் 1வது உள் ஆவரணம் எட்டிலும் மூர்த்திகளாகிய க்ஷமா முதல் வாயு இறுதியாக எட்டு மூர்த்திகளையும், மூர்த்தீஸ்வரராகிய தத்புருஷம் முதல் கவசம் இறுதியான எட்டு மூர்த்தீஸ்வரர்களையும் பூஜித்து ஹோமம் செய்ய வேண்டும். 2வது ஆவரணம் எட்டுக் குண்டங்களிலும் தாரிகா முதல் சேதனா இறுதியாகிய மூர்த்தீஸ்வரிகளையும் பூஜித்து ஹோமம் செய்யவேண்டும்.

3வது ஆவரணம் எட்டுக் குண்டங்களிலும் பிருதிவி முதல் வாயு இறுதியான எட்டுத் தத்துவங்களையும், பவன் முதல் பசுபதி இறுதியான தத்துவேஸ்வரர்களையும் பூஜித்து ஹோமம் செய்யவேண்டும். 4 எட்டுக் குண்டங்களிலும் வாமை முதல் காளி இறுதியான தத்துவவேஸ்வரிகளைப் பூஜித்து ஹோமம் செய்ய வேண்டும். பிரதமான குண்டமாகிய இந்திர ஈசான மத்தியில் வட்ட வடிவமான குண்டத்தில் சொரூபவனாகிய பரமசிவத்தையும் அதாவது இதிகாசமூர்த்தி சிவதத்துவம் தத்துவேஸ்வரரான மகாதேவரையும் தத்துவேஸ்வரியான மனோன்மணியையும் ஈசான மந்திரத்ததையும் விபவியையும் நேத்திர அஸ்திரத்தையும் பூஜித்து ஹோமம் செய்ய வேண்டும். இப்படி 33 குண்டங்கள் அமைத்த யாகசாலையே உத்தமோத்தம யாகசாலையாம்.

இனி, கும்பாபிடேகம் பெரும் சாந்தி என்பது எங்ஙனமெனில், சாந்தி என்பது பிராயச்சித்தம். இது மனம் வாக்குக் காயங்களினால் அறியாது செய்த குற்றங்களை நீக்குவாதாம். இது சாந்திராயணம் கிரிச்சரம் முதலிய விரதங்களாகும். விரதமூர்த்தி, தலம் தீர்த்தங்களை சேவிப்பதுமாம். ஒருவன் செய்த தீவினைக்கு நல்வினையால் தீர்வு உண்டு.

உதாரணம் :

*உற்ற தொழில் நினைவுரையிலிரு வினையும் ........*

*.......................... ............... ....................*

*சேராதங்கது மேலைத் தொடர்ச்சியாமே .........*

என்னும் சிவப்பிரகாச நூலால் அறியலாம். தீவினைக்கெல்லாம் தலையானது சிவாபராதமாகும். அது எப்படி நம்மை பந்திக்கும் எனில், சிவபிரான் நமக்கு செய்த உதவிகளைக் குறித்து நாள்தோறும் சிவாலயத்துக்குச் சென்று சிவாகம நெறிப்படி வழிபடாமையாலே நம்மைப் பந்திக்குமாம்.

இது இங்ஙனம் நாடோறும் செய்துவரும் வழிபாட்டில் புத்தி பூர்வம் அபுத்தி பூர்வமாய் ஏற்படும் பிழைகளை மாகோற்சவ தரிசனத்தால் நீக்கலாம். இனி உற்சவ தரிசனத்தில் இங்ஙனமான பிழைகள் ஏற்பட்டால் அவை கும்பாபிஷேகத்தால் தீரும். ஆகவே வேறு எவ்வகையாலும் தீர்க்க முடியாத சிவாபராதம் தீர்க்கப்படுகின்றமையால்தான் கும்பாபிஷேகத்தை பெரும் சாந்தி என்று சாந்தி என்று சைவநூல் உணர்ந்த பெரியோர் கூறுகிறார்கள்.

*உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்*
*இருஞ்சாக் கியர்களெடுத்துரைப்ப நாட்டில்*
*கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத்தான்றன்*
*பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்*

என நமது சமயகுரவருள் ஒருவரான திருஞான சம்பந்த மூர்த்திகள் அருளிய தேவாரத்திலும் அமைந்தமை போற்றத்தக்கது. ஒரு சில நல்வினைகளினாலும் ஏனைய தெய்வ வழிபாட்டாலும் போகமோட்சம் கிட்டினாலும் அவைகள் சில காலத்துக்குள் அழிந்துவிடும். மகா கும்பாபிஷேகத்தால் ஏற்படும் போகம் சிவபோகமாகும் மோக்ஷமும் நித்தியானந்த மோக்ஷமாகும். யார், யார் எதை விரும்பினார்களோ அவரவர் அதை, அதை அடைவார்கள் என்பது நிச்சயம்.... நிச்சயம். நிச்சயம் .

*சுபம்.*

# ஸ்ரீ பரமசிவனே சிறந்த வைத்தியன்

- சேங்காலிபுரம். பிரம்மஸ்ரீ. அனந்தராம தீக்ஷிதர்

*(வேதங்களில், இறைவன், தீராநோய் தீர்த்தருளு வைத்தியநாதனாக விளங்கும் சிறப்பியல்பையும் கலியுகத்தில் கண்கண்ட கடவுளாக வேளூர்ப் பெருமான் விளங்கி வருவதையும் இக்கட்டுரையில் ஆசிரியர் விவரித்துள்ளார்.)*

ஸ்ரீ பகவானுடைய உபதேசங்களே வேதங்கள். அவைகள் வைத்தியநாதனான ஸ்ரீ பரமேச்வரனை சிறந்த வைத்தியன் என்று கூறுகின்றன. உலகத்திலுள்ள சாதாரண வைத்தியர்கள் உடல் வியாதிகளை மட்டுமே போக்கவல்லர்கள். ஆனால் ஸ்ரீ பரமேச்வரனோ உடல் வியாதிகளை மட்டுமன்றி மனோவியாதிகளையும் போக்கும் சக்தி படைத்தவன். ஸ்ரீ ருத்ரமென்னும் மஹாமந்திரம், ஸ்ரீ பரமேச்வரன் தெய்வசக்தி வாய்ந்த முதன்மையான வைத்தியன் "प्रथमो दैव्यो भिषक" என்று கூறுகிறது.

ருக்வேதமும் தேவர்களுக்கெல்லாம் வைத்தியம் செய்கின்ற அச்வினீ தேவர்களுக்கும் மற்றும் சரகர்ஸுச்ருதர் போன்ற சிறந்த முனிவர்களான வைத்தியர்களுக்கும் கூட வைத்தியம் செய்யும் சிறந்த வைத்தியன் என்று அவனைக் கூறுகின்றது. "भिषक्तमं त्वा भिषजां" என்று மேலும் பரம சிவனைத் தொட்டு அர்ச்சிக்கும் அதிகாரத்தைப் பெற்ற வலது கையைப் பார்த்து, ஓர் முனிவர் கூறுவதாய் வேதம் கூறும் போது, எனது இந்த வலது கையானது ஈசனேயாகும். ஈசனுக்கு மேற்பட்டதாகவும் ஆகும். உலகத்திலுள்ள யாவருடைய வியாதிகளையும் போக்கி மருந்தளிக்கும் ஸ்ரீ வைத்தியநாதனாகவும் ஆகும்.

ஏனென்றால் சிவலிங்கத்தைத் தொட்டு பூஜை செய்யும் பாக்யத்தை இக்கை அடைந்திருக்கிறது.

"अयं मे हस्तो भगवान् अयं मे भगवत्तरः ।
अयं मे विश्वभेषजोऽयं शिवाभिमर्शनः ॥"

என்று கூறுகிறது.

ஆதலால்தான் உலகில் ஏதாமவது ஜ்வரம் முதலிய நோய்கள் நேரும்போது சிவபூஜை செய்யும் பெரியோர்களிடமிருந்து விபூதி வாங்கித் தரித்துக் கொள்வது வழக்கம். இன்று பல ஊர்களில் நித்யமும் ஆலயம் சென்று ஸ்ரீ சிவாசாரியர்களிடமிருந்து அவர்களது கையால் வாங்கி சிவதரிசனம் செய்து விபூதி தரித்துக்கொள்வதாலேயே ஜ்வரம் முதலிய வியாதிகள் நீங்கி ஆரோக்கியத்துடன் இருப்பதையும் கண்கூடாகக் காண்கிறோம். நித்யம் சிவதரிசனம் செய்வதால், இரத்தக் கொதிப்பு, மூத்திர வியாதி உடனே நீங்குகிறது.

உலகத்திலுள்ள யாவரும் வியாதி அற்றவர்களாகவும், மனக் கவலை அற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று ஸ்ரீ பரமேச்வரனை வேண்டும்படி ஸ்ரீ ருத்ரம் கூறுகிறது.

"यथा नः सर्वमिज्जगदयक्ष्मं सुमना असत्"

என்று. இதனால் உடல் நோயையும் உள் நோயையும் ஒருங்கே சொஸ்தப்படுத்த ஸ்ரீ பரமசிவன் ஒருவரால் தான் முடியும் என்பது தெளிவாகிறது.

மேலும் ஸ்ரீ ருத்ரமானது ஸ்ரீ வைத்தியநாதனுடைய பாதி சரீரமாயுள்ள ஸ்ரீ அம்பாள் மங்களத்தை அளிப்பவள் என்றும், உலகத்திலுள்ள யாவருடைய வியாதிகளையும் போக்குபவள் என்றும், ஸ்ரீ பரமசிவனுடைய மனத்திற்குக்கூட மருந்து எனவும் கூறி, அப்படிப்பட்ட அம்பாளின் ஸ்வரூபத்தால் எங்களை நீண்டகாலம் வியாதியற்றவர்களாய், சுகவாழ்க்கை உள்ளவர்களாய் இருக்க அருளவேண்டுமென ஸ்ரீ பரமசிவனையே வேண்டும்படி கூறியுள்ளது.

"या ते रुद्र शिवा तनूः शिवा विश्वाह भेषजी ।
शिवा रुद्रस्य भेषजी तया नो मृड जीवसे ॥"

என்றும் இன்னும் எங்களைச் சேர்ந்த மனிதர்களும், பசுக்கள் முதலிய உயிர்களும் வியாதி இல்லாமல் இருக்க

வேண்டும். உலகம் முழுவதும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என்றும்.

"एषां पुरुषाणामेषां पशूनां मा भेर्मा रो
मो एषां किं च नाऽऽममत्"

என்ற மந்திரத்தால் வேண்டப்படுகிறது.

மேலும் என்னைச் சேர்ந்த மனிதர்களுக்கும் பசுக்களுக்கும் பயமின்மையையும் ஆரோக்கியத்தையும் அளிக்கவேண்டும். அகால மரணமில்லாமல் காப்பாற்றவேண்டும். பசு முதலியவற்றைக் கொன்ற உபபாதகங்கள், வேதம் கற்றவரைக் கொன்ற மகா பாதங்கள் இவையெல்லாம் ஜனங்களுக்கு உண்ண உணவும் அருந்த நீரும் இல்லாது போவதற்கான காரணங்கள். இந்த பாதகங்களை எல்லாம் நீக்கி, நிரம்ப உணவு, பொருள் இவற்றையும், அனைவரும் பருக நல்ல ஜலத்தையும் அளிக்கவேண்டுமென ஸ்ரீ பரமசிவனை வேண்டும்படி வேதம் கூறுகிறது.

வேறு எந்தக் கஷ்டங்களையும் மனதிலேயே வைத்துக் கொண்டு விடலாம். ஆனால் பசி தாகம் இரண்டையும் ஜனங்களால் பொறுக்கமுடியாது. அப்பொழுது வாக்கினால் தன் துயரத்தைக் கூறும்படி நேரும். இந்தத் துயரங்களுக்குக் காரணம், இந்த ஜன்மத்திலோ முன்ஜன்மத்திலோ செய்த பாவங்களேயாகும். அந்தப் பாவங்களையெல்லாம் போக்கி அருள் புரிய வேண்டும் என்று ஸ்ரீ பரமேச்வரனை வேண்டும்படி வேதம் கூறுகிறது.

"उग्रं वचो अपावधीं त्वेषं वचो अपावधीं स्वाहा ।"

இதன் கருத்தைக் கூறும் வேதமாவது :–

अशनयापिपासे ह वा उग्रं वचः ।
एनश्च वैरहत्यं च त्वेषं वचः ॥

எனக் கூறுகிறது.

ஸ்ரீ ஆதி சங்கரரும், பசியை ஓர் வியாதி என்றும், அதற்கு மருந்து ஆகாரமென்றும், அந்த வியாதியைப் போக்கத் தினந்தோறும் உணவாகிய மருந்தை உட்கொள்ளவேண்டும் என்றும்,

"क्षुद्व्याधिश्च चिकित्स्यतां प्रतिदिनं भिक्षौषधं भुज्यतां"

எனக் கூறியுள்ளார். மரணமாகிய வியாதிக்கு ஸ்ரீ பரமேச்வரனே மருந்தாக இருக்கிறார். அகாலத்தில் மரணம் வராமல் இருப்பதற்காக ஸ்ரீ ருத்ரமான்து ஸ்ரீ பரமேச்வரனைக் குறித்து வேண்டும்படிச் சொன்ன இடத்தில் ஓ பரமேச்வரா ! எங்கள் வீட்டில் முதியவர்களையும் குழந்தைகளையும் என் தாய் தந்தையரையும் பிரியமான சரீரத்தையும் மரணமாகிற வியாதி பாதிக்காமல் இருக்கும்படிச் செய்யவேண்டும் என்று மிருத்யுஞ்ஜயனான ஸ்ரீ வைத்தியநாதன் வேண்டப்படுகிறான். அதாவது : –

मानो महान्तमुत मानो अर्भकं मान उक्षन्तमुत मान उक्षितम् ।
मानोवधीः पितरं मोतमातरं प्रियामानस्तनुवो रुद्र रीरिषः ॥

என இந்த மந்திரங்களைக் கோவில்களில் அபிஷேகம் செய்யும்போதும் வீட்டில் பூஜை செய்யும் போதும் திரும்பத்திரும்ப பெரியோர்கள் ஜபிப்பார்கள். மேலும் பல மஹான்கள் வருஷம் ஒருமுறை தனது வார்ஷிக ஜன்ம நக்ஷத்திரத்திலோ வேறு புண்ய காலங்களிலோ, பதினொருவேதவித்துக்களை வைத்து ஒவ்வொருவரையும் பதினொருமுறை மஹாந்யாஸத்துடன் ஸ்ரீ ருத்ரத்தையும் சமகத்தையும் ஜபிக்கும்படிச் செய்து ஸ்ரீ ருத்ரஹோமம் செய்து வஸோர்த்தாரை என்ற மஹாஹூதியையும் (பெரிய ஆஹூதியையும்) செய்வார்கள். இதற்கு ருத்ரைகாதசினீ எனப் பெயர். 121 வேத வித்துக்களைக் கொண்டு இம்மாதிரி செய்வதற்கு மஹாருத்ரம் எனப் பெயர். 1331 ரித்விக்குகளை வைத்து இம்மாதிரி செய்வதற்கு அதிருத்ரமஹாயாகம் எனப் பெயர். தேசத்தில் பல தீங்குகள் ஏற்படும்போது ஸ்ரீ மடாதிபதிகள் போன்ற பெரியோர்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் இந்த யாகத்தைச் செய்வது வழக்கம்.

கோவில்களிலும் மஹாந்யாஸ ருத்ராபிஷேகம் அடிக்கடி வேத வித்துக்கள் செய்வதுண்டு.

சூரியன் குரு சனி முதலிய கிரஹங்கள் தோஷமுள்ளவர்களாக இருந்தால் நரம்பில் வியாதியோ, மூத்திர ரோகமோ, வயிற்றுவலி, மார்புவலி, தலைசுற்றல், மயக்கம் போன்ற வியாதிகளோ அவர்களுக்கு நிச்சயம் இருக்கும். இந்த வியாதிகளைப் போக்கிக்கொள்ள ஸ்ரீ வைத்தீச்வரனுக்கும், ஸ்ரீ பாலாம்பிகைக்கும் மஹாந்யாஸ ருத்ராபிஷேகம் செய்து வைத்தால் போதும்.

இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீராமன், லக்ஷ்மணன், ஜடாயு, ருக்வேதம், முருகன், அங்காரன் ஆகியோர் ஸ்ரீ பாலாம்பிகையுடன் கூடிய ஸ்ரீ பரமேச்வரனைப் பூஜித்துள்ளனர். ஜடாயு பூஜித்ததால்

'ஜடாயுபுரி' என்றும், வேதம் பூஜித்ததால் 'வேதபுரி' என்றும், ஸ்கந்தன் பூஜித்ததால் 'ஸ்கந்தபுரி' என்றும், சூரியன் பூஜித்தால் 'பரிதிபுரி' என்றும், (பரிதி – சூரியன்) அங்காரகன் பூஜித்ததால் 'அங்காரகபுரம்' என்றும் இந்த க்ஷேத்திரம் பல பெயர்களால் அழைக்கப்படும். மேலும் பக்தர்களின் பாபங்களையும் ரோகங்களையும் போக்கவல்ல பதினெட்டு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. பக்தர்களுக்கு நிரம்ப அன்னம் அளிப்பதற்காக மடப்பள்ளியில் ஸ்ரீ அன்னபூர்ணாதேவி பிரகாசிக்கிறாள்.

இவையன்றியும் வினைதீர்த்தான் கோயில் தையல் நாயகிகோயில் என்ற பெயர்களும் இந்த ஸ்தலத்திற்கு உண்டு.

இந்த ஸ்தலத்தில் மேற்கு முகமாய் ஸ்ரீ சுவாமியும் தெற்கு முகமாய் ஸ்ரீ அம்பாளும் அமர்ந்துள்ளனர். மேற்கு முகமாயுள்ள லிங்கத்தைத் தரிசனம் செய்தால் கோடி ஜன்மங்களில் செய்த பாபங்களும் விலகும். இந்த க்ஷேத்திர விருக்ஷம் வேம்பு. பல பக்தர்கள் இந்த மரத்தை வலம் வந்து, அதனடியில் உதிர்ந்த பழுப்புகளை எடுத்து மருந்தாக உபயோகிப்பது வழக்கம். பிசாசு யமபயம் முதலிய 4448 நோய்களையும் தீர்ப்பதற்காக கைலாஸத்திலிருந்து தையல்நாயகி அம்மை எண்ணெய் பாத்திரத்தையும் ஸஞ்ஜீவி என்னும் பச்சிலையையும் வில்வமரத்து அடிமண்ணையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு இந்த க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டாள்.

இந்த க்ஷேத்திரத்தில் கொடுக்கப்படும் மருந்தை வாங்கி உட்கொண்டு பல பக்தர்கள் பலனடைந்தார்கள் என்றும், கோவிலுக்குத் தென்புறத்திலுள்ள குளத்தைச் 'சித்தாமிர்த தீர்த்தம்' என்றும் புராணம் கூறுகிறது. சதானந்தர் என்ற ஒரு முனிவரின் சாபத்தால் அந்தக் குளத்தில் தவளையோ பாம்போ இன்றும் இல்லை. இந்தத் தீர்த்தம் ஸ்ரீ அம்பாளின் ஸந்நிதியில் அமைந்துள்ளது. இக் குளத்தையும் கோவிலையும் தருமபுர ஆதீனத்தில் தற்போது எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மிகப் பரிசுத்தமாய் வைத்திருக்கிறார்கள். அந்த அழகைப் பக்தர்கள் எல்லோரும் சென்று கண்டு களிக்கவேண்டும்.

ஜடாயுவுக்கு ஸ்ரீ ராமன் சிதை அடுக்கி ஸம்ஸ்காரம் செய்த இடத்தை ஜடாயு குண்டமென இந்த க்ஷேத்திரத்தில் சொல்லுவார்கள். இந்திரசேனன் என்ற அரசனுக்கு க்ஷயரோகம் (T.B.) என்னும் வியாதி ஏற்பட்டு அது வைத்தியத்தால் நீங்காமல் தங்கள் குலகுருவான அந்தணரின் கட்டளைப்படி இந்த புண்யஸ்தலத்திற்கு வந்து இக் குண்டத்திற்கு பூஜை செய்து வெல்லப்பம், வடை முதலியவற்றை நிவேதனம் செய்து தங்கத்தினால் அக்குண்டத்திற்கு கவசம் செய்து, அந்த விபூதியை தரித்துக் கொண்டான். உடனே அந்த நோய் நீங்கிவிட்டது. அதனால் பல பக்தர்கள் இவ்வாறு பூஜிப்பதுண்டு. மற்றும் பலர் அக் குண்டத்திலுள்ள விபூதியைத் தரித்துக் கொள்வதாலேயே தங்கள் ரோகங்களைப் போக்கிக் கொள்கின்றனர். மனிதர்கள் மட்டுமல்லாமல் தேவர்கள் யாவரும் இத்தலத்திற்கு வந்து ஸ்ரீ வைத்தியநாதனையும், ஸ்ரீ பாலாம்பிகையையும், ஸ்ரீ செல்வ முத்துக்குமாரனையும் தரிசித்து பூஜை செய்து நோய் முதலிய கஷ்டங்களைப் போக்கிக் கொண்டனர். அதனால் இத்தலத்திற்கு மிகப் பெருமை.

சமீபத்தில் மிகப்பெரிய ஜட்ஜியின் குமாரனுக்கு உடல் முழுவதும் சிறிய முத்து முத்தாக அத்தி மரத்தில் காய்கள் தொங்குவது போல ஒரு வியாதி ஏற்பட்டு விட்டது. பல மருத்துகளாலும் நீங்கவில்லை. அப்பொழுது நான் அக் குடும்பத்தினரிடம் 'ஸ்ரீ வைத்தீச்வரனுக்கு உப்பு மிளகு வெல்லம் முதலியன வாங்கிப் போடுவதாய்ப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்', எனச் சொன்னேன். ஆனால் அப்பொழுது அவர்கள் போகுமுன்னேமேயே சில தினங்களுக்கு முன்னே நானே அங்கு தரிசனத்திற்குச் சென்றேன். அது சமயம் அந்தப் பையனுக்காக மிளகு உப்பு வெல்லம் வாங்கிப்போட்டு அர்ச்சனமும் செய்து பிரசாதமும் அனுப்பினேன். அந்த விபூதியைத் தரித்துக் கொண்ட மறுதினமே அவைகள் யாவும் உதிர்ந்து விட்டன. மேலும் எங்கள் ஊரில் சில வருஷங்களுக்கு முன்பு ஒருவருக்குக் கன்னத்தில் சிறுவயதிலேயே ஒருகட்டி நெல்லிக்காயளவு இருந்து வந்தது. அது முப்பது வயதுக்கு மேல் வலிக்கத் தொடங்கியது. அதை வைத்தியர்கள் ஆப்ரேசன் செய்யவும் சம்மதிக்கவில்லை. அப்பொழுது எங்களது ஸ்ரீ பிதா அவர்களிடம் அவர் அந்தவியாதி நீங்கப் பரிகாரம் கேட்டார். எங்கள் தகப்பனார் 13 கிருத்திகைகளில் வைத்தீச்வரன் கோவிலுக்குச் சென்று சுத்த உபவாசம் அன்று இருக்கும்படிக் கூறினார். அதேபோல் 12 கிருத்திகைகள் சென்று வந்தும் அக்கட்டி வலி நீங்காமலும் குறையாமலும் இருந்து வந்தது. இன்னும் நீங்கவில்லையே; என்று என் பிதாவைக் கேட்டதற்கு 13 கிருத்தகைகள் ஆகிவிட்டதோ ? என எங்கள் பெரியவர்கள் கேட்டதும்

இன்னும் ஒரு கிருத்திகை மீதமிருப்பதாக அவர் கூறினார். அந்தக் கிருத்திகையிலும் தரிசித்து வந்தபின் தன்னிடம் கேட்கும்படி சொன்னார்கள். அதே போல் 13வது கிருத்திகை வைத்தீச்வரன் கோவிலுக்குச் சென்று மஹான்யாஸ ருத்ராபிஷேகம் அர்ச்சனம் முதலியவற்றையும் மிகச்சிறப்பாகச் செய்துவிட்டுத் திரும்பி உபவாஸத்துடன் ரயிலில் வந்தார். அப்பொழுது ஒரு பரதேசி எதிரில் இருந்தவர் தன் பையில் இருந்த ஒரு மெழுகை எடுத்து இது என்னவென்று கேட்டுவிட்டு அக்கட்டியின் மீது மெழுகைத் தடவி விட்டுப் பக்கத்துஸ்டேஷனில் இறங்கிவிட்டார். பழக்கமில்லாத பரதேசி கொடுத்த மருந்தைத் தடவிக் கொள்ள அந்த நோயாளி கைகளால் தடைசெய்தும் அம்மருந்தைப் பரதேசி தடவிச் சென்று விட்டார். சிறிது நேரம் கழித்ததும் தாங்க முடியாத எரிச்சல் ஏற்பட்டு அந்த நோயாளி கூச்சலிட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கட்டி உடைந்து உள்ளிருந்து அழுக்குகள் எல்லாம் நீங்கி எங்கள் ஊர் வருவதற்குள் அந்த இடத்தில் ஒரு சிறிய கருப்புப்புள்ளி தான் தெரிந்தது. இதைக் கண்ட நாங்கள் யாவரும் மிக ஆச்சர்யமடைந்தோம். இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் ஸ்ரீ வைத்தீச்வரன் கோவிலிலும், ஸ்ரீ குருவாயூர் க்ஷேத்திரத்திலும் இக்கலியிலும் இன்றும் நடந்து வருவதுபோல் என்றும் நடந்து வருவது ஆச்சர்யப்படத்தக்கது.

முதல் காண்டம் 8வது பிரச்னத்தில் ஸ்ரீ அம்பாளுடன் ஸ்ரீ பரமேச்வரனை, பூஜை முதலியவற்றால் ஆராதித்து வேண்டிக் கொள்ளும்படியாகக் கூறிய இடத்தில்; "ஒ பரமேச்வர! தாங்கள் ஸ்ரீ அம்பாளுடன் நான் கொடுக்கும் பூஜையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள பசுக்கள் யாவுக்கும் வந்த வியாதியைப் போக்க மருந்தை அளிக்கவேண்டும். உலகத்திலுள்ள குதிரைகள் யாவுக்குமுள்ள வியாதியைப் போக்க மருந்தை அளிக்கவேண்டும். பின்பு உங்களைப் பூஜிக்கின்ற எங்களுக்கும் உலகத்திலுள்ள மனிதர் யாவருக்கும் வந்த வியாதியைப் போக்க மருந்தை அளிக்க வேண்டும். எங்களைச் சேர்ந்தவர்களுக்கும் எங்கள் ஊரிலுள்ள யாவர்க்கும் வந்த வியாதியைப் போக்க மருந்தளிக்க வேண்டும். அப்போதைக்கப்போது வந்த வியாதிகளைப் போக்குவதோடு இனி வராமலும் இப்பொழுதே நல்ல மருந்தை அளித்துப் பாதுகாக்க வேண்டும்." என்று வேண்டச் சொல்லி இந்தக் காரியத்தை ஸ்ரீ ருத்ரனான பரமசிவன் ஒருவன் தான் செய்யவல்லவன் என்றும் வேதம் கூறியுள்ளது. அதாவது :–

'एक एव रुद्रो न द्वितीयाय तस्थे'

एष ते रुद्र भागः सह स्वस्राम्बिकया तं जुषस्व भेषजं गवेऽश्वाय पुरुषाय भेषजं । अथो अस्मभ्यं भेषजं । सुभेषजं यथासति ।

மேலும் பெரியோர்கள் தினந்தோறும், அனுஷ்டுப்ச்லோக ரூபமான மஹா மந்திரத்தை ஜபித்து வருவதை யாவரும் அறியலாம்.

संसारवैद्यः सर्वज्ञः भिषजामपि यो भिषक् ।
मृत्युंजयः प्रसन्नात्मा दीर्घमायुः प्रयच्छतु ॥

சரீரவியாதிக்கும் ஜனனமரணவியாதிக்கும் வைத்தியனாகவும் யாவற்றையும் அறிந்தவனும் அச்வினீதேவர்கள் போன்ற தேவவைத்தியர்களுக்கும் மருந்தளிப்பவனும் யமனை ஜயித்தவனும் சிறிய பூஜையினாலேயே மனங்குளிர்கின்றவனுமான ஸ்ரீ பரம சிவன் யாவர்க்கும் நீண்ட ஆயுளை அளிக்க வேண்டும்.

மேலும் வாக்படர் என்னும் வைத்தியசாஸ்திரம் எழுதிய மகான் ஸ்ரீ வைத்தியநாதனான பரம சிவனையே முதலில் நமஸ்கரித்து வைத்யசாஸ்திர நூலைத் துவக்குகிறார், அந்த சுலோகமானது

रागादिरोगान् सततानुषक्तान्
अशेषकाय प्रसृतानशेषान् ।
औत्सुक्यमोहारतिदान् जघान
यो पूर्ववैद्याय नमोऽस्तु तस्मै ॥

" ஸ்ரீ பரமசிவன் ஆச்சர்யமானவைத்தியன், அதாவது எல்லாக்காலங்களிலும் யாவருடைய சரீரங்களிலும் எப்பொழுதும் தொடர்ந்து பற்றிக் கொண்டவைகளும், அதிக ஆசை அஞ்ஞானம் வெறுப்பு, இவைகளை உண்டாக்குவதுமான காமக்குரோதம் முதலிய ரோகங்களைப் போக்கும் வைத்தியன் பரமசிவன்" என்று கூறுகிறது.

பல இடங்களில் பரமசிவனே, அக்னி என வேதம் கூறுவது வழக்கம். அக்னி என்றால் அக்ரம் நயதி – கீழ் லோகமாகிய நரகத்திற்குச் செல்லாமல் மேல் லோகத்திற்கு அழைத்துச் செல்லுகிறவன்; என அர்த்தம். வேதமே :–

"रुद्रो वा एष यदग्निः"

அதனால் "अग्निभेषजं" என்று ஸௌத்ராமணி முதலிய யாகங்களில் வேதமானது பரமசிவனை மருந்தாகவே கூறியுள்ளது. அவ்வாறு மருந்தளிக்கும் வைத்யனாதனாய்க்காக்ஷியளிக்கும் உருவத்துடன் வைத்தீச்வரன் கோவில் என்ற புண்ய க்ஷேத்திரத்தில் தஞ்சை ஜில்லாவில் காவேரியால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தலத்தில் விளங்கி வருகிறார். இந்த வைத்தீச்வரன் கோவிலோவெனில் தினந்தோறும் தேவர்கள் யாவரும் தரிசித்து பூஜிக்கவரும் புண்ய ஸ்தலமாகும்.

இந்த க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ வைத்தீச்வரனையும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரனையும் குலதெய்வமாகக் கொண்ட குடும்பங்கள் பல்லாயிரக்கணக்காக இவ்வுலகில் உள்ளன.

பிறந்த குழந்தைகளுக்கு முதலில் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்துதான் முடி கொடுப்பார்கள். பலர் செவ்வாய்க்கிழமை தோறும் ஒருவேளை உணவு உட்கொண்டு உண்டியலில் காணிக்கை போட்டு, உண்டியல் நிரம்பியதும் அதை வைத்தீச்வரன் கோவிலுக்குச் சென்றோ, மனுஷ்யாள் மூலமாகவோ கொடுப்பார்கள். இந்த ஆண்டவனைக் குலதெய்வமாகக் கொண்டவர்களும் மற்றுமுள்ளவர்களும் மாசி மாதம் செவ்வாய்க்கிழமைகளிலோ அல்லது வருஷம் முழுவதும் செவ்வாய்க் கிழமைகளிலோ பலவேத வித்துக்களை அழைத்து பூஜித்து அன்னமிடுவார்கள். மேலும் பல பரதேசிகளுக்கும், ஏழைகளுக்கும் அன்னமிடுவதுண்டு அல்லது கஞ்சியாவது காய்ச்சிக் கொடுப்பதுண்டு. மேலும் பலர் இத்தலத்திலுள்ள தீர்த்தங்களில் நீராடி தேவபித்ருதர்ப்பணம் செய்வார்கள்.

இம்மாதிரி இத்தலத்தில் பிரார்த்தனா காரியங்களைச் செய்யும் குடும்பங்களில், வியாதி, கடன், பங்காளிகளால் தொல்லை, கூடப்பிறந்தவர்களால் துயரம், நெல் முதலியவைகள் விளையும் பூமிகளில் நஷ்டம் போன்ற கஷ்டங்கள் வருவதே இல்லை. இப்படிப்பட்ட புண்ய ஸ்தலத்தில் தர்மபுரம் ஆதீன கர்த்தராகிய 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் மஹாகும்பாபிஷேகத்தை, சமீபத்தில் விமர்சையாய் செய்யப் போகிறார்கள்.

இவர்கள் செய்யும் நல்ல காரியங்கள் யாவும் உலகத்திலுள்ள யாவராலும் போற்றும்படி இருப்பது வழக்கம். அதனால் இந்த மஹாகும்பாபிஷேகம் எவ்வளவு சிறப்பாய் நடைபெறும் என்பதை ஆஸ்திகர்கள் அனைவரும் உணரலாம். ஸ்ரீ பாலாம்பிகையுடன் கூடிய ஸ்ரீவைத்தியநாதனும் ஸ்ரீ வல்லீ,ஸ்ரீ தேவஸேனை இவர்களுடன் கூடிய ஸ்ரீ செல்வ முத்துக்குமாரஸ்வாமியும் ஸ்ரீ தர்மபுரம் ஆதீன கர்த்தர் அவர்களுக்கும் மற்றும் உலகத்திலுள்ள யாவருக்கும் சகல க்ஷேமங்களையும் அளிக்கும்படி வேண்டுகிறேன்

உ
சிவமயம்

# ஆலய - நகர அமைப்புக்கள்

## திருவாடானை - சிவஸ்ரீ. M. ஐயாமணி சிவம்

( மிகப் பழைய காலத்தில் சிவாகமங்களில் நகர அமைப்புக் கோயில் அமைப்பு முதலியன பற்றித் தெளிவுறக் கூறப்பட்டுள்ள செய்தி புதிய உலகின் சிந்தனைக்குரியது. முன்னோரது நுட்பமதியின் சிறப்பை, விளக்கப் படங்களுடன் விளக்கிக் காட்டுகின்றார் ஆகமப்புலவர்.)

*கல்லா னிழல்மலை வில்லா ரருளிய*
*பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே.*

*சத்தெ னச்சொலுந் தாவில் சிவத்திலுஞ்*
*சித்தெ னச்சொலுந் தேவி யிடத்திலும்*
*புத்தி ரப்பெயர் பூண்டிலகு ஆனந்த*
*வத்து வின்கழல் வாழ்த்தி வணங்குவாம்.*

*திருச்சிற்றம்பலம்*

முன்னுரை:

உலகத்து உயிர்களெல்லாம் உய்தி பெறுவான் வேண்டிப் பரம கருணாநிதியாகிய தாண்டவேசுரவப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்த நூல்கள் வேத சிவாகமங்களாகும். அவ்வருள் நூல்களில் வேதம் பொது நூலெனவும், சிவாகமங்கள் சிறப்பு நூலெனவும் திருமுறைகள் பேசாநிற்கும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த உண்மை ஞான நூல்களின் பொருளை மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து, நல்வாழ்வு வாழவேண்டும் என்று திருவுளத்தில் முகிழ்த்தெழுந்த பெருங்கருணையினாலே தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிவஞானதானம் செய்யத் திருவருள் பாலித்து சைவாகமங்களில் காணப்பெறும் பல்வேறு விஷயங்களில் உடம்பெடுத்த மக்கள் அனைவரின் வாழ்விற்கும் உறுதுணையாகி நகர கிராமங்களின் அமைப்பும் உயிரனைத்தும் உய்திபெற ஆலயங்களும் இன்றியமையாதன என்பதை ஓர்ந்து நகர அமைப்புக்களும் ஆலய அமைப்புக்களும் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுமாறு பணித்தார்கள். வேதப் பசுவின் பாலாகிய சிவாகமக் கடலுள் எளியேன் புகுந்து தேடுதற்குக் குருவருளும், அதன் பயனாகிய சிவஞானமுமாகிய பேறுகளாம் மணிகள் கிட்டும் என்ற ஆசையால் ஆழ்கடலில் ஆழவமுக்கி முகந்த நாழிநீர் போல, என்னறிவுக் கெட்டியவாறு எழுதிய இக்கட்டுரையை இங்குச் சமர்ப்பிக்கிறேன். பிழை பொறுத்துச் செம்மை செய்வது அறிஞர் கடன் என்று தெரிவிக்க என்னுள்ளம் நாணுகிறது. ஏனெனில்,

*கருவிக ளனைத்து மென்னுட் கலந்துநின் றியக்கா நிற்கும்*
*ஒருவனை யன்றி யானே யுருற்றுத லின்மை யாலே*
*மருவுமென் பாடற் குற்றம் பொறுமென மதிக்க நாணி*
*திருவமர் கல்வி சான்றோர் திறத்தொன்றும் செப்பிலேனால்*

என்ற இனிய பாட்டு எனக்கு நினைவுக்கு வருகிறது அதன்படி செய்தும் செய்வித்தும், சொல்லியும் சொல்வித்தும் எல்லாம் நிகழ்த்துபவன் எம்பெருமானே ஆதலால் என்க.

மக்கள் நலத்திற்குரிய ஆலயங்கள் அமைத்தற்கு நகரங்கள் இன்றியமையாதன. ஆகலின் முதற்கண் நகர அமைப்பினை விளக்கிப் பின்னர் ஆலயங்களின் அமைப்பினை எழுத முற்படுகின்றேன்.

### சைவாகமங்கள்

சைவாகமங்கள் சர்வேசுவரனால் அருளிச் செய்யப்பெற்ற பெருஞ் சிறப்பினையுடையன. இவை காமிகம், முதல் வாதுளம் ஈறாக 28 பகுப்பினையுடையன. ஆதிப்படைப்பின் ஆரம்பத்தில் சிவ சக்தியின் சேர்க்கையினின்றும் தோன்றிய யோக மாயையினால் சிருஷ்டியின் வித்து கலக்கப்பெற அதில் தோன்றிய ஒலியே பின்னர் பிந்துவாகி, சக்தி

வடிவங்களாக 50 அக்கரங்களாயின. அவைகள் இணைந்து பதங்களாகவும், சொற்களாகவும் விரிந்தன. இதனை,

*ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களும்*
*ஐம்ப தெழுத்தே அனைத்தா கமங்களும்*
*ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்*
*ஐம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே*

என்ற திருமூலர் திருவாக்கால் அறியலாம். இத்தகைய சிறப்புவாய்ந்த சைவ ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பாதங்களைக் கொண்டன. அவற்றுள் கிரியை என்ற பகுதியில் (கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம்) பெறுதல், நிறுத்துதல், விழாக்காண்டல், கழுவாய் என்ற நால்வகை முறைகள் பேசப்படுகின்றன. அவற்றுள், காமிகாகமத்தில், கர்ஷளணம் என்ற தலைப்பின் கீழ் கிராம, நகர, ஆலய அமைப்புக்கள் மிகவும் விரிவாகக் காணப்பெறுகின்றன. காரணாகமம், சுப்ரபேதாகமம், கிரணாகமம், முதலிய சைவ ஆகமங்களிலும் ஓரளவு கூறப்பட்டுள்ளன. சிவாகமங்கள் முழுவதும் இக்காலத்தில் காண்பது அருமையாகி விட்டதால் முற்றிலும் ஆராய்ந்து எழுத முடியவில்லை.

### நகர அமைப்பு

இந்த முறைகள் சைவாகமங்கள் தவிர மற்றும் வேதத்தின் அங்கமாகிய கல்ப சூத்திரங்களிலும், சிற்ப நூல்களாகிய பானுசாரம், மயமதம் மகாவிஸ்வ கர்மீயம், வாஸ்துவித்யை, காசிபம், முதலியவற்றிலும் கௌடில்யர் அர்த்த சாஸ்திரம், சுக்ரநீதி இவைகளிலும், புராணங்களிலும், ஆங்காங்குப் பேசப்படுகின்றன. முதலாவதாக சைவ ஆகமங்களில் காணப்படும் முறைகளை ஆய்வோம்.

### 1. கால நிர்ணயம்

நல்ல சுபகரமான உத்தராயணத்தில் மார்கழி மாசி என்ற இரண்டு மாதங்கள் நீங்கலாக சுக்ல பக்ஷத்தில் பிரதமை, சஷ்டி, அட்டமி, நவமி, சதுர்தசி முதலிய திதிகள் நீங்கலாக மற்றய சுபதிதிகளில் அனுஷம், புனர்வசு, மகம், அசுவதி, ரோகினி, சுவாதி, மிருகசீரிடம், திருவாதிரை, ஹஸ்தம் உத்தரத்திரயங்கள், ரேவதி, திருவோணம் முதலிய புண்ய நக்ஷத்திரங்களில் புதன், வெள்ளி, வியாழக் கிழமைகளில் சுபலக்னத்துடன் ஜீவதிருஷ்டிகளுடன் கூடிய சுபவேளையில் அரசன் அல்லது எஜமானர் கிராமம் முதலியவைகளின் ஜன்ம நக்ஷத்திரங்களுக்கு அனுகூலமான தினங்களில் தொடக்கப் பெறுதல் வேண்டும்.

[illegible]

(சைவகால விவேகம்)

### 2. கிராம நகர பேதங்கள்

இவை நகரம், பட்டணம், துர்க்கம் அல்லது சேனாமுகம், ராஜதானி, கேடம், கர்வடம், சிபிரம், புரம், குடிகம், கிராமம் என்று பத்து விதங்களாகக் காணப்படுகின்றன.

" [illegible] "

என்பது காரணாகமம்.

" [illegible] "

என்பது சுப்பிரபேதாகமம்.

I. கிராமம்:- இவைகள் சுமார் 15 பகுப்புகளாக மண்டனக் கிராமம், சதுர்முக கிராமம், மங்கள கிராமம், விஸ்வேசக் கிராமம், நித்யமங்கள கிராமம், சரவட கிராமம், வசந்த கிராமம் என்பன முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

II. நகரம்:- பல்வேறு தொழிற்சாலைகளும், அரசாங்க நிர்வாக மாவட்டத் தலைமை அலுவலகங்களும், கலைச் செல்வங்களும், காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத் தலைநகராகும்.

III. பட்டணம்:- நதிகள், கடற்றுறை முகங்கள், வியாபாரத் தலைமை நிலையங்கள், கருவூலங்கள், ஆபரணத் தொழிற் கூடங்கள், நெசவு சாலைகள், அயல்நாட்டு வர்த்தகர் தங்கும் இடங்கள்,

மாவட்டத் தலைமை அதிகாரிகள் சுங்க அதிகாரிகள் தங்குமிடங்களுடன் கூடிய நகரைக் குறிக்கும்.

IV. கர்வடம்:- சுமார் 500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்களும், ஆறு, காடு, மலை இவைகளின் சமீபத்தில் உள்ளதுமான இடமாகும்.

V. புரம்:- இது சாமான்யமாகவுள்ள சுமார் 200க்கு மேற்படாத கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் வசிக்குமிடமாகும்.

VI. கேடம்:- ஆற்றங்கரை மலையுச்சிகள் இவைகளில் பிரிந்து பிரிந்து குடிசை கட்டி வாழும் மக்களின் இருப்பிடம்.

VII. குடிகம்:- இது தாழ்ந்த குடிமக்கள் என்று முன்னாளில் கருதப்பட்டு வந்த அரிஜனங்கள் வசிக்கும் சேரிகள் அமைந்த இடம்.

VIII. சிபிரம்:- எப்பொழுதும் நாட்டுப் பாது காப்பிற்காக, யுத்த வீரர்களைச் சேர்த்தும் தயார் செய்வித்தும் சேனாமுகத்தின் சுற்றுப்புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.

IX. ராஜதானி:- அரசருடைய மாளிகையும் மற்றும் மந்திரிகள் பிரதானிகள் சேனாவீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களுடன் சுமார் இரண்டு லக்ஷம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நால்வகை ஜாதியினரும் வாழுமிடம்.

X. சேனாமுகம் அல்லது துர்க்கம்:- நாட்டின் பாதுகாப்பிற்காக உள்ள நான்கு பக்கங்களிலும் கோட்டைகள், பொறியியல் யந்திரங்கள், யுத்த தளவாட உற்பத்திசாலைகள், யுத்தவீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலியவற்றையுடைய ராஜதானியை, அடுத்துள்ள இடமாகும்.

## 3. பூமி பரிக்ஷை

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌭𑍂𑌮𑌿𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌦𑍇𑌶𑌿𑌕𑍋
𑌰𑌸𑌗𑌨𑍍𑌧 𑌨 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌦𑍋𑌷𑌵𑌿 𑌚 ।
𑌦𑍍𑌰𑍁𑌮𑌾 𑌜𑌾 𑌤𑍃𑌣 𑌨𑌿𑌕𑍃𑌤𑍋𑌷𑌵𑍃𑌯𑌾
𑌶𑌾𑌸𑌿𑌤𑌾 𑌕𑌾𑌯𑌭𑌾𑌵𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌾𑌰𑌾𑌃 ॥

பூமியானது, அதன் கண்ணுள்ள மரங்களாலும் செடி, கொடிகளாலும் அதில் வாசம் செய்யும் மிருகங்கள் பக்ஷிகளாலும் மண்களின் நிறத்தாலும் வாசனையாலும் உருசிளாலும் 12 பேதங்களாக பேசப்படுகிறது. அவையாவன,

𑌶𑍈𑌵𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂
𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌯𑌾𑌕𑍍𑌷𑌂 𑌭𑍌𑌤𑌿𑌕𑌮𑍇𑌵 𑌚𑌾𑌸𑍁𑌰𑌂 𑌪𑍈𑌶𑌾𑌚𑌕𑌂 ॥
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌮𑍇𑌵 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾𑌰𑍁𑌣𑌮𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥

என்றபடி சைவம், பிராம்ஹம், வைஷ்ணவம் ஐந்திரம், யக்ஷம், பௌதிகம், ஆஸுரம், பைசாசம், ராக்ஷஸம், வாயவ்யம், வாருணம், ஆக்னேயம் என்ப் பன்னிரண்டு ஆகும்.

உதாரணமாக,

𑌕𑌣𑍍𑌟𑌕𑌾𑌰𑌾𑌜𑌾𑌨𑌾𑌶𑍍𑌵𑌤𑍍𑌥 𑌕𑌪𑌿𑌤𑍍𑌥𑌾𑌶𑍋𑌕𑌯𑌾𑌤𑌕𑍀 ।
𑌸𑍍𑌥𑌲𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦 𑌤𑍁𑌲𑌸𑍀 𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌤𑌤𑌾𑌶𑍈𑌵𑍀 ॥
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌹𑍍𑌵𑌕𑌣𑍍𑌟𑌕𑌶𑌾𑌲𑍍𑌮𑌲𑍀 𑌶𑌿𑌂𑌶𑌪𑌾 𑌶𑌿𑌵𑌾 ।
𑌶𑍁𑌕𑍋𑌤 𑌶𑌾𑌕 𑌹𑌂𑌸𑍈𑌶𑍍𑌚 𑌗𑍋𑌵𑍀𑌸𑌾𑌸𑌾𑌹
𑌤𑌾𑌶𑍈𑌵𑍀 ॥
𑌬𑌿𑌲𑍍𑌵𑍈𑌃 𑌪𑌲𑌾𑌶𑍈𑌰𑍍𑌦𑌰𑍍𑌭𑍈𑌶𑍍𑌚 𑌕𑍁𑌶𑍈𑌶𑍍𑌚
𑌸𑌾𑌰𑌿𑌕𑍈𑌣𑍍𑌵𑌯𑌾 ।
𑌹𑍋𑌮𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌤𑌿 ॥

என்றபடி மருது, அரசு, விளா, அசோகம், தாழை, நிலத்தாமரை, துளசி, அருகு முதலிய மரம் செடிகளும் செம்போத்து, கிளி, அன்னம் முதலிய பறவைகளும் பசு, ஆடு முதலிய மிருகங்களும் வசிக்கும் பூமி சைவபூமியாகும். விஸ்வம், புரசு, தர்ப்பை, குசம், நாணல் முதலியனவும் ஹோமத்திற்குரிய சாமான்களும் கிடைக்கும் பூமி பிரம்மபூமி ஆகும். இதைப் போல பலவிதமான அடையாளங்களாலும் பூமிகளின் பேதங்களைக் கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்தப்பூமிகளில் ஆஸுரம், பைசாசம், ராக்ஷஸம் என்ற பூமிகள் கிராம நகரங்கள் அமைத்தற்குக் கூடாவாம். இந்தவித பூமிகள் நிறங்களால் நான்கு வகைப்படும்.

“𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌰𑌕𑍍𑌤𑌾 𑌤𑌥𑌾 𑌪𑍀𑌤𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌸𑌂𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮
𑌣𑌾𑌦𑌯𑌃 ॥”

இவ்வாறு சோதிக்கப்பட்ட பூமியின் மண்கள் உருசியாலும் மணத்தாலும் சோதிக்கப்பட வேண்டும்.

“𑌮𑌧𑍁𑌰𑌾𑌮𑍍𑌲 𑌜𑌾𑌤𑌿 𑌮𑌧𑍁𑌰𑌾 𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌦𑌯
𑌗𑌨𑍍𑌧𑌕𑍈𑌃 ।
𑌮𑌧𑍁𑌗𑌨𑍍𑌧𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌸𑌰𑍍𑌵𑌬𑍀𑌜𑌪𑍍𑌰
𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 ॥
𑌦𑍍𑌵𑌾𑌜𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌗𑌨𑍍𑌧𑌾 𑌚 𑌤𑍈𑌲𑌾𑌸𑍃𑌗𑍍𑌗𑌨𑍍𑌧𑌿𑌕𑌾𑌤𑌥𑌾 ।
𑌶𑌵𑌨𑍀𑌵𑌕𑌗𑌨𑍍𑌧𑌾 𑌸𑌾𑌯𑌰𑌾 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌭𑍂𑌮𑌯𑌃 ।”

நல்ல மல்லிகை, புன்னை, தாமரை, நெல், பாதிரி முதலிய வாசனையுள்ள பூமி உயர்ந்தது; எல்லா தான்யங்களும் விளையக்கூடியது. தேன், வெல்லம், எண்ணெய்ச்சிக்கு, பிணம் முதலியவாசனை உள்ளது நீக்கப்படத்தக்கதாகும் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது.

ஜாநுமாத்ரும் வநேகூ ஒஙிம் த நூரzzவ ஒபடு
வாவடிடு ||

உத்தரோகுயிகா ஷ ஒஙிஷூதூரா வெத்துஸூரா ।
நூ ஒநா வஜடுராபூயதெந ஐதி ஶாஸூவிஷொ
விஷுமு ||

குறிப்பிட்ட நல்லபூமியை முழங்கால் அளவு தோண்டி அதே மண்ணைக்கொண்டு அந்தப் பள்ளத்தை நிரப்ப மண் மிகுதியானால் உத்தமம் சரியானால் மத்திமம் குறைந்தால் அதமம்: அதமம் கூடாது.

### நீர் பரிக்ஷை

மேலே சொன்னபடி முழங்காலளவு பள்ளம் வெட்டிக் குடங்களில் புஷ்பம்போட்ட நீரை, அந்தப் பள்ளத்தில்விட்டு நிரப்பும்போது, புஷ்பங்கள் மேல் நோக்கி மிதந்தும் வலமாகவும் சுழன்றால் உத்தமம்; கீழ்நோக்கிக் கவிழ்ந்தாலும் இடமாகவும் சுழன்றால் கூடாது என்று காமிகாமம் கூறுகிறது.

ஷவாஷு கூஷதொயெந வஒபடுரேணெzவடெ
ஷதி ।
ஶஷூம் பூதிக்ஷிணாவதடுமஷகம் ஶாஷுவாஷுஷிடு ||
உத்தாந வாஷுகா ஶ்ரேஷ்டம் நகுயொமவெ
வாஷுகம் ||

### தான்ய பரிக்ஷை

ஷஷிடுவாணாம் திஷாநாவா வொஷூாநாமேகூரா
ஷுவி ।
த்ரிராயேத்ருண பூஜாயதெ யஷூரம் ஷாஶஷ
ஷாமேஷீ ||

கடுகு, எள் போன்ற தான்யங்களை விதைத்தால் மூன்று நாட்களுக்குள் முளை காணவேண்டும். அப்படியுள்ள பூமி சுபமாகும் என்று காமிகாகமத்தில் காணப்படுகிறது. இப்படிப் பல முறைகளால் பரிசோதனை செய்யப்பெற்ற நல்ல பூமியில், நல்ல வெண்மை நிறமுள்ள காளைகளால், பாலுள்ள மரங்களால் செய்யப்பட்ட கலப்பைகளைக் கொண்டு கிழக்கு முகமாகவும் வடக்கு முகமாகவும் உழவு செய்தல் வேண்டும்.

## 4. திக் பரீக்ஷை அல்லது சங்கு ஸ்தாபனம்

அந்தப்பூமியைச் சமப்படுத்தி, நடுவில், சுமார் 3/4 அடி கனமும் 1' 6" உயரமும் உள்ள, பாலுள்ள ஓர் முளையை அடித்து, அதன் நிழல் காலை 6 மணிக்குப்படும் இடத்திலும் அடையாளம் செய்துகொண்டு அயனாம் சங்களைக் கழித்து, கிழக்கு மேற்கு என்று அடையாளம் செய்யவேண்டும் எனக் காரணாகமம் கூறுகிறது. இதிலிருந்தே தெற்கு வடக்கு முதலியவைகளும் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

## 5. ஆயாதிப்பொருத்தம்

முன் கூறியபடி திக்குகளை அறிந்தபின் வேண்டிய அளவு சம சதுரமாக அல்லது வட்டமாக நிலத்தைத் தண்டம் என்ற அளவுகோலால் அளந்து கொண்டு நான்கு பக்கங்களிலும் உள்ள சுற்றளவுகளைக் கூட்டி மொத்த அளவை 8ஆல் வகுத்தால் என்ன யோனி என்பது தெரியவரும். மிகுந்தது 1. துவஜயோனி, 2. தூமயோனி 3. அச்வயோனி, 4. சிம்மயோனி, 5. விருஷபயோனி, 6.நாய்யோனி, 7. கஜயோனி, 8. கழுதையோனி. இவைகளில் துவஜம், சிம்மம், விருஷபம், கஜம் என்ற யோனிகள் வரும்படி அளவைக் கூட்டிக் குறைத்துக் கொள்ள வேண்டும். மற்ற யோனிகள் கூடாது. இதே போல நக்ஷத்திரம், ஆயுள், ராசி, ஆதாயம், விரயம் முதலியவைகளைக்கண்டு எஜமானருக்கும் கிராமத்திற்கும் பொருத்தமானதாக அளவுகள் அமைத்தல் வேண்டும் என்று காரணாகமம் பேசுகிறது. கிராமம் நகரங்கள் தண்டப்பிரமாணம் என்ற அளவுகோலால் அளக்கப்பெறுதல் வேண்டும்.

### தண்டம் என்ற அளவு கோல் விபரம்

| | |
|---|---|
| பரமாணு | 8 கொண்டது 1 அணு |
| அணு | 8 கொண்டது 1 ரேணு |
| ரேணு | 8 கொண்டது 1 ரோமம் |
| ரோமம் | 8 கொண்டது 1 கலிக்ஷுகோ |
| கலிக்ஷுகோ | 8 கொண்டது 1 யூகம் |
| யூகம் | 8 கொண்டது 1 யவம் |
| யவத்தின் குறுக்களவு | 8 கொண்டது 1 அங்குலம் |
| அங்குலம் | 12 கொண்டது 1 விதஸ்தி (0'9") |
| விதஸ்தி | 2 கொண்டது 1 ஹஸ்தம் (1' 6") |
| ஹஸ்தம் | 2 கொண்டது 1 தனுர்முஷ்டி (3' 0") |

| | |
|---|---|
| தனுர்முஷ்டி | 2கொண்டது 1ராஜதண்டம்(6'0") |
| தண்டம் | 2 கொண்டது 1 ராஜதண்டம் |
| ராஜதண்டம் | 2 கொண்டது 1 பிரம்ம தண்டம் |

இந்த அளவைகள் அஜிதம் என்ற ஆகமத்தில் உள்ளவை.

## 6. வாஸ்து விந்யாஸம்

மேலே சொன்ன தண்டப்பிரமாணத்தால் அளந்து நாற்சதுரமாகச் செய்யப்பட்ட பூமியை தென் வடல் 8 பதங்களும் கீழ்மேல் 8 பதங்களுமாக 8X8=64 அறுபத்து நான்கு பதங்களாகச் செய்வது மண்டூகவாஸ்துவாகும். 9X9=81 எண்பத்தொன்று பதங்களாகச் செய்வது பரமசாயிவாஸ்துவாகும். மேலே கண்டபடி பிரித்துள்ள பதங்களுக்கு 53 தேவதைகளின் பெயரால் அடையாளம் செய்தல் வேண்டும். அந்தந்த இடங்களில் அந்தந்த தெய்வங்களைப் பூசித்து, சிவாகமங்களில் கூறியபடி அந்தந்த தேவர்களைத் திருப்தி செய்வித்த பின்னர் அந்த பூமியை 9X9= 81 பாகம் செய்தால் நடுவில் உள்ள 9 பதங்கள் பிரம்மபதம் ஆகும். இந்தப் பதத்தில் ஆலயங்கள், மடங்கள், சபைகள், பிரம்மவிசாரம் செய்யுமிடங்கள், வேதாகமத்யயன மண்டபங்கள் இவைகள் அமைக்க வேண்டும். அதற்கு வெளியில் உள்ள சுற்றில் 16 பதங்கள் தைவிகபதம் ஆகும். இதிலும் ஆலயங்கள், பொதுச்சாவடிகள், அக்கிரஹாரங்கள் முதலிய கட்டப்பெறுதல் வேண்டும். இதற்கு வெளியில் உள்ள சுற்றில் 24 பதங்கள் மானுஷபதம் ஆகும். இதில் ஜனங்கள் வசிக்கும் வீடுகள், சாலைகள், வீதிகள், ராஜகிருஹங்கள் முதலியன அமைத்தல் வேண்டும். இதற்கு வெளிச்சுற்றில் உள்ள 36 பதங்கள் பைசாசபதமாகும். இதில் உட்பாதியில் வீடுகளும் தெருக்களும் அமைப்பதுடன் வெளிப் பாதியில் மயானம், துர்க்கைகோயில், குளங்கள், சலவை செய்யுமிடம், மத்ஸ்ய மாம்ச வியாபாரிகள் தங்குமிடம், வைத்தியசாலை, ஆயுதசாலை, கோட்டைகள் முதலியன அமைத்தல் வேண்டும். இவ்வாறு அமைக்கும் கிராமம், நகரம், பட்டணம் முதலிய அமைப்புக்கள் நூறுதண்ட அளவு முதல் பத்தாயிரம் தண்ட அளவு வரை பேசப்படுகின்றன.

## 7. கிராம நகர விந்யாஸம்

மேலே கூறப்பட்டபடி தயாரிக்கப்பெற்ற பூமியில் கீழேகண்ட முறைப்படி கிராமங்கள், நகரங்கள், பட்டணங்கள் முதலியவைகளின் வீதிகளையும் வீடுகளையும் ஆலயங்களையும் அமைத்தல் வேண்டும். அந்த அமைப்புக்கள் கீழேகண்ட பிரகாரம் 12 விதங்களாகும்.

𑌦𑌣𑍍𑌡𑌕𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑌞𑍍𑌚𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑌮𑍍 ।
𑌸𑌂𑌪𑌤𑍍 𑌕𑌰𑌂 𑌪𑌰𑌾𑌕𑌞𑍍𑌚𑌪𑌦𑍍𑌮𑌕𑌂 𑌶𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌂 𑌵𑍈𑌦𑌿𑌕𑌞𑍍𑌚𑍈𑌵 𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌞𑍍𑌚
𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌮𑍍 ।

### 1. தண்டகம்

கிழக்கு மேற்கில் நீண்ட சதுரவடிவாகவும் மேற்கே விஷ்ணு கோயிலும் கிழக்கே சிவன் கோயிலும் பெரும்பகுதி 2 பக்கமும் பிராமண அக்கிரஹாரமும் அதற்கு வெளியில் கீழ்மேல் இரண்டு தெருக்களும் குறுக்கு வீதிகளும் உள்ள கிராம அமைப்பாகும். இதற்குப் பெரும்பாலும் காவிரிக்கரை ஓரமாக அமைந்துள்ள அக்கிரஹாரக் கிராமங்களை ஒப்பிடலாம்.

### 2. ஸ்வஸ்திகம்

இது, சுற்றிலும் 4 வீதிகளும் நடுவில் கோயிலும் ஒரு பக்கம் நுழைவாயிலும் வளைவான மறு பக்கம் வெளிவரும் வாயிலும் உள்ள நகர அமைப்பாகும். இது அரசர்களின் கோட்டைகள் கொத்தளங்கள் கட்டுவதின் அமைப்பாகும்.

### 3. பிரஸ்தரம்

இஃது சமசதுரமானதும் நடுவில் கோயிலும் சுற்றிலும் அக்கிரஹாரங்களும் அதற்கு வெளியில் நான்கு வீதிகளும் நான்கு மூலைகளிலும் வீதிகளின் சந்திப்பில் 16 பகுப்புகளும் உள்ளது. ராஜக்கிரகம் இதரர் வீடுகளும் உள்ள நகரமாகும். இது பெரும்பாலும் மதுரை ஸ்ரீரங்கம் திருவானைக்கா திருக்கோயில் முதலிய ஊர்களின் அமைப்பை ஒத்ததாகும்.

### 4. பிரகீர்ணகம்

இஃது ஒருபக்கம் மலையும் மற்றொரு பக்கம் நதியும் கூடிய நீண்ட பட்டணத்தின் அமைப்பாகும்.

### 5. ஸம்பத்கரம் அல்லது ஸர்வதோபத்ரம்

இதுவும் பிரஸ்தரம்போன்ற அமைப்புடன் கூடியது. மூலைகளில் 16 பகுப்புகள் இல்லை. நடுவில் கோயிலும் குளமும். வெளியே சமசதுரமாக ஆறு வீதிகள். ராஜதானி அமைப்புக்களின் இலக்கணம் உடையது. புதுக்கோட்டை நகர அமைப்பைப் போன்றது.

### 6. பராகம்

இஃது கயிறுபோல நதிக்கரை ஓரத்தில் ஒரே வீதியுடன் கூடிய கிராம அமைப்பு.

### 7. பத்மகம்

இஃது ஒருபக்கம் வட்டமாகவும் மறுபக்கம் 4 பட்டமாகவும் உள்ள ராஜதானி. சேனாமுகம் என்ற நகர அமைப்பாகும். இதில் சைன்யங்கள் ஆயுத சாலைகள் இருப்பதுடன் நடுவில் ஆலயங்களும் மானுஷபதத்தில் வீடுகளும் அமைத்தல் ஆகும்.

### 8. ஸ்ரீபிரதிஷ்டிதம் அல்லது சதுர்முகம்

இந்த நகரம் நான்கு சதுரமாகவும் நான்கு மூலைகளிலும் கோணங்களின் நேர்வீதிகளும் சுற்றிலும் 3 வீதிகளும் நடுவில் கோவிலும் எட்டு துவாரங்களுடனும் கூடிய அமைப்பாகும்.

### 9. ஸ்ரீ வத்ஸம் கார்முகம்

இஃது கிழக்கு மேற்காக ஓடும் நதிக்கரைகளில் நதியின் பிரவாகம் வந்து நகரத்தை அழித்துவிடாமல் அமைக்கும் நகரமாகும். இதில் பிரம்மபதம் கோயிலாகும். தைவிகபதம் பொதுக் கட்டிடங்கட்குரியது. மானுஷம் பைசாசம் 2 பதங்களும் வீடுகளின் அமைப்புக்குரியன. முக்கோணமாக 8 வீதிகளும் 3 குறுக்கு வீதிகளும் கூடிய நதிக்கரை நகரம் இது. காசி கயா போன்ற நகரங்களின் அமைப்பாகும்.

### 10. வைதிகம்

இது ஒரே தெருவுடனும் பிராமணர்கள் மட்டும் தனித்து வசிக்கக் கூடியதுமான அக்கிரஹார கிராமம்.

### 11. நந்தியாவர்த்தம்

இது நீண்ட சதுரமானதும் அரசர்கள் வசிக்கக் கூடியதும் பிரதான 3 வீதிகளும் 3 க்ஷுத்ர வீதிகளும் நடுவில் கோவிலும் நான்கு பக்கங்களிலும் குளங்களும் நாநாஜாதி தொழில் பிரிவினர்களும் வசிக்கக்கூடிய நதி உள்ள பட்டணமாகும்.

### 12. கும்பகம்

இது நான்கு புறமும் தெருக்கள் வளைந்து சென்றும் நேரான மங்கள வீதிகள் இல்லாமலும் இரண்டு கிராமங்கள் இணைந்தும் உள்ள கிராம அமைப்பாகும். மேலே கண்டபடி பரமசாயி அல்லது மண்டுக பதத்தின்மீது நகர கிராம அமைப்புக்களை நிர்ணயம் செய்தல் வேண்டும். அப்படி அமைந்த பதில் வீதிகளையும் அமைத்தல் வேண்டும்.

### வீதிகள் அமைப்பு

| | |
|---|---|
| 1. ராஜமார்க்கம் | 10 தண்டம் 60' 0" |
| 2. மங்களவீதி அல்லது ரதவீதி | 8 தண்டம் 48' 0" |
| 3. புறமார்க்கம் | 4 தண்டம் 24' 0" |
| 4. க்ஷுத்ரமார்க்கம் | ¾ தண்டம் 4' 6" |
| 5. ஜலமார்க்கம் | ½ தண்டம் 3' 0" |

ராஜமார்க்கம் யானை குதிரைகளுடன் பவனி வரவும், மங்களவீதி ரதோற்சவம் நடத்தவும், புறமார்க்கம் வண்டிகள் போக்குவரத்திற்கும், க்ஷுத்ர மார்க்கம் தாழ்ந்த ஜாதியார் மலஜலங்கள் எடுப்பவர்கள் செல்லவும், ஜலமார்க்கம் ஜலதாரைகள் ஏற்படுத்தவும் அமைக்கவேண்டும்.

[illegible]
[illegible]

என்று காமிகாகமத்தில் காணப்படுகின்றது.

### வீடுகள் அமைப்பு

வீடுகள் 3 தண்டம் அகலமும், 7,9 தண்டம் நீளமும் உள்ளவைகளாக இருத்தல் வேண்டும். 7 தண்டம் அகலமுள்ள வீடுகளுக்கு 11 தண்டம் நீளமிருக்கவேண்டும். ஊரின் மேற்குப் பாகத்தில் விஷ்ணுகோயிலும், கிழக்கே சிவாலயமும், நடுவில்

வீதியும், இரண்டு பக்கமும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் வீடுகளும், பின்புறம் க்ஷுத்ரவீதிகளும் அதன் பின்னர் இரண்டு வீதிகளும் கிழக்கு மேற்காக நீண்ட சதுர வடிவமாக உள்ள சர்வதோபத்ரம் என்ற அமைப்பில் உள்ள கிராமம் தண்டக கிராமமாகும். கிழக்கு மேற்காகச் செல்லும் வீதிக்கு ராஜவீதி என்றும், தெற்கு வடக்காகச் செல்லும் வீதிக்கு வாமனவீதி என்றும் பெயர்.

காரணாகமம் பிராகார லக்ஷணவிதி படலத்தில் கூறியபடி வீடுகளின் அமைப்பு கீழ்வருமாறு:– ஊரின் நடுவில் திருக்கோயில். இரண்டு அல்லது மூன்று பிராகாரங்களுடனும் நான்கு வாயில்களுடனும் இருத்தல்வேண்டும். திருக்கோயிலின் சுற்றாலைச் சுவருக்கு வெளியில் 4 தண்டம் அகலம் உள்ள வீதிகள் நாற்புறமும் செய்து, அதற்கு வெளியில் வாமன வீதிக்கு வடக்கே கிழக்கில் பூசகர்கள் வீடுகளும், கிழக்கு, வடகிழக்கு இவற்றின் நடுவே மடங்களும், கிழக்கு திக்கில் சைவர்களின் இருப்பிடங்களும், கிழக்குவீதி மத்யநாராசத்திற்கு தெற்கில் வாத்தியகாரர்கள் நாட்டியமாடுபவர்கள் வீடுகளும், தென்கிழக்கில் சத்ரசிகிச்சை செய்பவர்களும், தெற்கு வாமன வீதிக்கு மேற்கே வைத்தியர்கள் சோதிடர்கள் வீடுகளும், மேற்கே பரிசாரகர்கள் விடுதிகளும், வடக்கில் வேதப் பிராமணர்கள் வீடுகளும் அமைத்தல் வேண்டும். இந்த வீடுகளின் பின்புறம் க்ஷுத்ரமார்க்கங்களும் முன்புறம் ஜலமார்க்கங்களும் அமைத்தல் வேண்டும். அதற்கு வெளியில் மர்யாதை என்று சொல்லும் மங்கள வீதியின் உட்புறம் கிழக்கு திக்கில் ஸ்நானம் செய்ய குளமும், தென்கிழக்கு தெற்கு நடுவில் குடி தண்ணீர் ஊருணியும், தெற்கு, தென்மேற்கு நடுவில் பசுத்தொழுவம், பால்ப்பண்ணைகளும் தென்மேற்கு தெற்கு நடுவில் மகப்பேறு விடுதியும் மேற்கு வடமேற்கு நடுவில் வைத்தியசாலைகளும், வடக்கு வடமேற்கு நடுவில் ஆரம்பப்பள்ளியும், வடக்கு வடகிழக்கு நடுவில் உயர்நிலைப் பள்ளியும், ஈசானத்தில் தானியக் கிடங்கும் அமைத்தல் வேண்டும். அதற்கு வெளியில் மர்யாதை என்ற வீதியில், மறுபக்கம் பிறசமயத்தவர்கள் வசிக்க விடுதிகளும், மகாமர்யாதையில் முறையே கிழக்கு முதல் வைசியர் (வியாபாரிகள்), வாணியர், குயவர், நெசவுத் தொழில் செய்பவர், ஓடம் ஓட்டுபவர், நாவிதர், கோபாலகர், தச்சர், கொல்லர் முதலியவர்களின் வீடுகளும், அதற்கு வெளியில் மத்ஸ்யமாம்சம் விற்பவர், புஷ்ப வியாபாரிகள், கூத்தாடிகள், வண்ணார் முதலியோர் வீடுகளும், ஈசானத்தில் மயானமும், அதற்கு வெளியில் பிணம் சுடும் தொழிலாளர்கள் குடிசைகளும் இருத்தல் வேண்டும் என்று காணப்படுகிறது. மகாமர்யாதையில் நான்கு கோணங்களிலும் குளங்களும், வடக்கில் துர்க்கை கோயிலும் குளமும் நிருதியில் சாஸ்தா கோயிலும் இருத்தல் வேண்டும்.

[illegible]

என்றும்.

[illegible]

என்று காரணாகமமும் பேசுகிறது.

## II. ஆலய அமைப்பு

மேலே காணப்பட்ட முறைகளின்படி நிர்ணயம் செய்த தண்டகம், சர்வதோபத்ரம் முதலிய கிராமங்களின் நடுப்பாகமாகிய பிரம்மபதத்தில் ஆலயங்கள் அமைத்தல்வேண்டும். இந்த ஆலயங்கள் 2 முதல் 5 வரை சுற்றுப் பிராகாரங்களுடனும் நான்கு

கோபுர வாயில்களுடனும் நடுவில் விமானங்களுடனும் அமைத்தல் வேண்டும் என சைவாகமங்கள் விரிவாகப் பேசுகின்றன.

1. பூபரீக்ஷை முன்பு கூறியதுபோல கர்ஷணம் (உழவு) செய்தல், சங்கு ஸ்தாபித்தல், வாஸ்துபதம் செய்து பூஜித்தல் முதலிய சோதனைகளைச் செய்த பின்னர் ஆலயம் கட்டுதல்வேண்டும்.

2. சல்யோத்தாரம்:- ஆலயம் கட்ட நியமித்துள்ள பூமியை 25 அடி ஆழம் வெட்டி மண்ணை அப்புறப்படுத்திவிட்டு ஓடு, கல், மயிர், எலும்பு முதலிய அசுபத்தைத் தரும் பொருள்களை நீக்கி நல்ல சுத்தமான மணலால் நிரப்புதல் வேண்டும். இவை 4 தண்டம் என அளவு காணப்படுகிறது.

3. இஷ்டிகா ஸ்தாபனம்:- இதற்கு ஆத்யேஷ்டிகா ஸ்தாபனம் என்று பெயர். (கால்கோள் விழாவாகும்.)

வ௲நம வ-ஂ௵ரணஂ கூ௶கா வாஷ்ு ஷெவாநு
பூ௵வ-௵ஜயெசு ।
தவெஸ்௶ாத்ரெ பூ௵வாஂ கூ௶கா வ-௵வெ-௴வாய
விஶெஷதஃ ॥
சுயிவாஸ௶ாஷ-௴ராத்௶ாஂதா-ஂ வத்வஸ் ஃ பூ௶யஶெஷ்டகாஃ ।
பரிஊஃயவிஶோந்஡ு வெஷூஊவஷூணாயிகாவஸ்யெசு ॥
ஊஷிகாஂய யாஜ்ஞிதா-ஂ ஜஷ்டகாஂஷூாவயெசு ஸ-ஂயீஃ ।

– சுப்ரபேதாகமம்

நான்கு செங்கல்களைப் பூஜைசெய்து ஹோமம் முதலியன செய்து குறிப்பிட்டபடி ஸ்தாபனம் செய்யவேண்டும்.

4. கர்ப்பநியாஸம்:- திருக்கோயிலின் மூல மூர்த்தி வைக்கும் இடத்திலும் கோபுரங்களில் கால்கள் நிறுத்துமிடத்திலும் சபைகள் மடங்களின் ஈசான்ய பாகத்திலும் விமானங்களில் ஸ்தூபியின் அடிப்பாகத்திலும் கர்ப்பநியாஸம் வேண்டும்.

தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளில் ஏதாவதொன்றால், நல்ல கனமுள்ள தகட்டால் 25 அறைகள் கொண்டதாக, ஒரு முழம் அல்லது அரைமுழ அளவில் ஒருபேழை செய்து அதில் நவரத்தினங்களும், தங்கம் முதலிய உலோகங்களும், ஹரிதாரம், வீரம், பூரம், ரசம் முதலிய தாதுப்பொருள்களும் எல்லாவகை தானியங்களும் 8 வகை மிருத்திகை (மண்)களும், ஓஷதிகளும், மற்றும் அஷ்டமங்கலக் குறிப்புகளைக் காட்டும் அடையாள சாமான்களும் வைத்து ஆகமங்களில் கூறியபடி பூஜைசெய்து ஸ்தாபித்தல் வேண்டும்.

ரெளஜெஹரௌவ௵கூத-௴௶ாமெ ஊாவொகூ
௵ரோணதஃ ।
வாதவிஷஂஹ விஷூாராவஷூஷ்விஂஶஸு வதாவிதா ॥

5. உபபீடம் அமைத்தல்:- குறிப்பிட்ட இடத்தில் திருக்கோயிலின் பிராசாதம் ஹஸ்தம் என்ற அளவையினால் 20 – 30 – 50 அளவுள்ள அகல நீளமுள்ளது உத்தம பிராசாதம். 10 – 12 – 16 ஹஸ்த அளவுள்ளது மத்யம பிராசாதம். 7 – 8 – 9 ஹஸ்தம் கொண்டது அதம பிராசாதமாகும். அளவு அப்படி நிர்ணயம் செய்த பிராசாதத்தின் அடிப்பரப்பை 25 பாகம் செய்து 9 பங்கு கர்ப்பகிருஹமும் 16 பங்கு சுற்றுச்சுவர் கனமும் உள்ளதாக அமைக்க வேண்டும். லிங்கத்தின் அளவைக்கொண்டு பிராசாதம் அமைக்கும் முறையில் மகாலிங்கத்தின் சுற்றளவு 3 கொண்டது பீடமாகும். அந்த பீடத்தின் அளவு 3 பங்கு கொண்டது கர்ப்பகிருஹ அகலமாகும். கர்ப்பகிருஹ அளவில் 3ல் ஒரு பங்கு சுற்றுச் சுவராகும். அப்படி நிர்ணயம் செய்த பிராசாத கர்ப்பகிருஹ அளவை 8 பாகம் செய்து, ஒரு பங்கு சேர்த்துக்கொண்டு உபபீடம் அமைக்கவேண்டும்.

விஷூாரஸ௶ாஷ்டஹாஶெகஂ உ-ஂவெபீடஂ ௵கஷ்௵யெசு ।

உபபீடத்தின் உயரமும் அகலத்தின் 8ல் ஒரு பாகமாக இருத்தல் வேண்டும். இந்த உபபீடம் ஸ்ரீகரம், லலிதம், பத்ரம் என மூன்று வகைப்படும்.

## அதிஷ்டானம் அல்லது பிராசாதம்

அதிஷ்டானம், மஸூரகம், விஸ்வதாரம், திருதாலகம் என்ற பெயர்கள் ஒரே பொருளுள்ளவைகளாகும். இது உபபீடத்தின்மேல் மேலே விமானத்தின் கீழ்பாகம் வியாழம் என்ற வர்க்கம் வரையுள்ளத. இந்த அதிஷ்டானங்கள் சதுரமாகவும், விருத்தமாகவும், கோணங்களாகவும் இருக்கலாம். அதிஷ்டானம், பாதபந்தம், பிரதிபந்தம் என்ற இரண்டு வகையாகக் காணப்படுகிறது.

பாதபந்தம் என்ற வர்க்கம் பாதபந்தம், பத்மகம், பத்மபுஷ்கலம், பத்மாஸம் என்ற 4 பகுப்புகளுடன் கூடியது.

பிரதிபந்தம் என்ற வர்க்கம், பிரதிபந்தம், பிரதிக் கிரமம், ப்ரகீர்ணகம், பிரதிசுந்தரம் என்ற நால்வகையாகும். ஆக 8 பேதமுடையன் அதிஷ்டான அமைப்புக்களாகும். கட்டுரையின் விரிவஞ்சி ஒவ்வொன்றின் அளவுகளையும் வித்யாஸங்களையும் எழுதாமல் பெயர்களை மட்டும் குறிப்பிட்டுச்செல்லுகிறேன். காமிகம் என்ற ஆகமத்தில் இந்த அதிஷ்டான வர்க்கம் பற்றிப் பல வேறுவிதமான பஞ்சரங்களும், கர்ண கூடங்களும், கோஷ்டங்களும், முகசாலைகளும், உபரிசாலைகளும் காணப்படுகின்றன. இந்த அதிஷ்டானம் 5, 8, 12, 16 என்ற கோஷ்டங்கள் என்ற அமைப்பில் காணப்படுகிறது. சாதாரணமாக 8 கோஷ்டங்கள் உள்ள திருக்கோயில்களே அதிகமாக உள்ளன. முன் வாசலின் இரண்டு பக்கத்திலுமுள்ள கோஷ்டங்களில் துவாரபாலகர்களும், தென்புறமுள்ள கோஷ்டங்களில் நிருத்த கணபதி, தக்ஷிணாமூர்த்தியும், மேற்கு கோஷ்டத்தில் விஷ்ணு அல்லது லிங்கோத்பவரும், வடக்கு கோஷ்டங்களில், பிரம்மா துர்க்கையும், கோஷ்ட தேவதைகளாகப் பேசப்பெறுகின்றனர்.

" 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑍇𑌨 𑌹𑌾𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌗𑌰𑍍𑌭𑌾𑌰𑍍𑌧𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌨 𑌗𑌰𑍍𑌭𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ "

## அர்த்த மண்டபம்

இது கர்ப்பக்கிரகத்தின் முன்பக்கம். கருவறையின் பாதியளவாகவாவது சரியாகவாவது செய்யலாம்.

### மகாமண்டபம் முதலியன

அதற்கு வெளியில் மகாமண்டபம் அல்லது தேவமண்டபம். இது 4, 2 ஸ்தம்பங்களுடன் கூடியதாக இருக்கலாம். இதற்கு வெளியில் உள்ளது ஸ்நபன மண்டபம். அதற்கு வெளியில் உள்ளவை விருஷப மண்டபமும், அடுத்து நிருத்த மண்டபமும், அதற்கு வெளியில் கோபுரத்துவாரமும் அமைத்தல் சாஸ்திர சம்மதமாகும். மகாமண்டபத்திற்கு வெளியில் உள்ள மண்டபங்கள் 16. 32. 64. 96. 100 கால்களுடன் கூடியதாகவும் பேசப்படுகின்றன. அந்த மண்டபங்கள் நந்தியாவர்த்தம் 4 கால்கள் ஸ்ரீபிரதிஷ்டிதம் 16 கால்கள், வீராஸனம் 20 ஸ்தம்பங்கள், ஜயபத்ரம் 32 தூண்கள், ஸ்ரீயாவர்த்தம் 36 கால்கள், மாணிபத்ரகம் 64 கால்கள், விசாலம் 100 கால்கள் என்ற பெயருடையதாகும். மண்டபங்கள் எல்லாம் பிராசாத உயரத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது.

𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌸𑍍𑌨𑌪𑌨𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌵𑍃𑌷𑌾𑌯𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌤𑍍𑌵𑍇𑌤𑌤𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌨𑍃𑌤𑍍𑌤 𑌮𑌣𑍍𑌡𑌪𑌮𑍍 ॥

𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌂 𑌷𑍋𑌡𑌶𑌂 𑌶𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍
𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌪𑌾𑌦𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌜𑌯𑌭𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 ।
𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌪𑌾𑌦𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌨𑌾𑌂 𑌮𑌣𑌿𑌭𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌨𑌾𑌂 𑌶𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌮𑍍 ॥

என்று சுப்ரபேதாகமத்திலும் காணப்படுகிறது.

### விமானம்

பிராசாதம், விமானம், கோபுரம், மேரு என்ற பல பெயர்களால் அழைக்கப்பெறும். இது திராவிட, நாகர, வேசரம் என்ற மூன்று வகையாக 96 பேதங்களில் காணப்படுகிறது.

𑌨𑌾𑌗𑌰𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌂 𑌚𑍈𑌵 𑌵𑍇𑌸𑌰𑌞𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌮𑌤𑌮𑍍 ।
𑌕𑌣𑍍𑌠𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌸𑌰𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌾𑌖𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍈 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌂 𑌨𑌾𑌗𑌰𑌂
𑌕𑌥𑌿𑌤𑌮𑍍 ॥

கழுத்துமுதல் வட்டவடிவமானது வேசரம். கழுத்தடிமுதல் எட்டு பட்டையானது திராவிடம். எல்லாமும் சமசதுரவடிவம் நாகரம் எனப்படும். இந்த விமானங்கள் தூங்கானைமாடம், கைலாசம், மந்தரம், நளிநகம், ப்ரலீநகம் என்றெல்லாம் பல பேதங்களுடன் காணப்படுகின்றன.

### பிராகாரங்கள்

அதிஷ்டானத்தைச் சுற்றியுள்ளது அந்தர் ஹாரம். அதற்கு வெளியில் உள்ளது மத்யஹாரம். அதற்கு வெளியே மர்யாதி. அதன் வெளியில் மகாமர்யாதி என்று பெயர். அந்தர்ஹாரம் ஒரு தண்ட

அளவும், மத்யஹாரமாகிய இரண்டாம் பிராகாரம் 2 தண்ட அளவும், மர்யாதி என்ற 3வது பிராகாரம் 4 தண்ட அளவும், மகாமர்யாதி 7 தண்ட அளவுள்ளதாகவுமிருத்தல் வேண்டும்.

[illegible]

மகாமர்யாதிக்கு வெளியில் 4 கோபுரவாயில்கள் இருத்தல் வேண்டும். இரண்டாவது பிராகாரத்தில் அக்நிமூலையில் பாகசாலையும், ஈசானத்தில் யாக சாலையும், கிழக்கு ஈசானமத்தியில் கிணறும், கிழக்கு தென்கிழக்கு மத்தியில் வாத்யசாலையும், மற்றும் சுற்றுப்புறங்களில் ஆயுதமண்டபம், புஷ்பமண்டபம் முதலியனவும், குபேர திசையில் சயனஸ்தானமும் இருத்தல்வேண்டும்.

## பரிவார தேவதைகள்

[illegible]

என்றபடி கோபுரத்தின் தெற்கே சூரியனும், அதற்குத் தெற்கே பாகசாலையும், தெற்குத் திக்கில் உமையவளும், சிறிது நிருதியை ஒட்டி மேற்கே சோமாஸ்கந்தரும், அதற்குத் தெற்கே விநாயகரும், மேற்குத் திக்கில் ஸ்கந்தரும், வாயுவில் லக்ஷ்மியும், அதற்குக் கிழக்கே சண்டிகையும், வடக்கே மஹிஷ மர்த்தனியும், ஈசான உத்தரதிக்கு மத்தியில் நடராஜப் பெருமானும், அதற்கு மேற்கே சந்திர சேகர மூர்த்தியும், வடக்கே கௌரி ஆலயமும், நடேசரின் ஈசானத்தில் சயனாலயமும், கோபுரத்தின் வடக்கே க்ஷேத்திரபாலரும், அதற்கு வடக்கே யாகஸ்தானமும், இறைவன் திருமுன்னே இடப தேவரும், அதற்கு வெளியில் பலிபீடமும் அமைக்க வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது. மேலும் விமானங்களில் உள்ள தேவர்களின் விபரமும் 2, 3, பிராகாரங்களில் உள்ள தேவதைகளின் ஸ்தான நிர்ணயங்களும் கூறப்படுகின்றன.

## முடிவுரை

சைவ ஆகமங்களில் காணப்படும் நகர அமைப்புக்களும் ஆலய அமைப்புக்களும் எழுதப்புகின் பெரிய தனித்தனி நூல்களாகவே எழுதவேண்டியதாகும். கருணையே உருவான ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் கயிலைக்குருமணி அவர்கள் திருநோக்கு எனக்குக் கிடைக்கவும் நான் ஆகம கோசங்களைக் கடைந்து என்னறிவுக்குக் கிடைத்தமட்டும் விரிவஞ்சி ஆங்காங்கு மேற்கோள்களுடன் இக்கட்டுரையை எழுதி ஓரிரு படங்களும் சேர்த்து ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் திருவடிகளில் சமர்ப்பிக்கவும் கூடிய சிறந்த பேறு எனக்கும் கிட்டியமையை எண்ணி இறும்பூ தெய்துகின்றேன். வாழ்க கயிலைக்குருமணி. வளர்க அவர்களின் பணிகள்.

உ
சிவமயம்

# மறை மதித்த மருத்துவன்

- பிரம்ம ஸ்ரீ K. இராஜகோபால சாஸ்திரி

(ஒளி வடிவான இறைவன் அருள் விரிக்கும் தெய்வத் திருத்தலங்கள் ஜோதிர்லிங்கத் தலங்கள்; அவற்றுள் தென்னகத்து வைத்யநாதம் எனத் திகழ்கிறது புள்ளிருக்குவேளூர். மறைகளின் நெறியில் இதனை விளக்கிச் சான்றுகளோடு நிறுவுகிறார் ஆசிரியர்.)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. ஆரோக்யம் என்பது ரோகமில்லாமலே இருப்பதும் அல்லது வந்த ரோகம் நீங்கினமையும் ஆகும். பூவுலகில் பிறந்த யாவரும் நோய் உடையவரே. வேறு ஒரு வியாதியும் இல்லாவிட்டாலும் பிறவி என்ற நோய் நிச்சயம் இருக்கின்றதன்றோ ? ஆதலின் உடலைப்பற்றிய நோய்கள் பல. அவை வியாதி எனப்படும். உள்ளத்தைப்பற்றிய நோய்கள் ஆதி எனப்படும். ஆண்களுக்கு மட்டும் வரும் நோய்கள், பெண்களுக்கு மட்டும் வரும் நோய்கள், குழந்தைகளுக்கு வரும் நோய்கள் எனப்பல வகையாவுள்ள வியாதிகளையும் ஆதிகளையும் பிறவிப் பிணியையும் போக்க சிறந்த ஒரு வைத்திய குடும்பமே புள்ளிருக்கு வேளூரில் குடிகொண்டு எழுந்தருளியுள்ளது. உலகத்திலுள்ள மக்கள் யாவருக்கும் ரோககாரர்கள் என்று கூறப்படும் அங்காரகனுக்கே இங்குள்ள வைத்தியரால் ரோகம் தீர்ந்தது. செவ்வாய் இந்த வைத்தியரைப் பூசித்துக் கொண்டு இருக்கிறார். இதுவும் இவ்வைத்தியரின் பெருமையை உணர்த்தும். விருத்த வைத்யமு பால ஜோதிடமும் சிறப்புடையன. ஆதலின் மிகவும் பழமையான தோன்றிய காலம் தெரியாத ஒரு வைத்தியர் வேளூரில் உள்ளார் என்பது அபௌருஷேயமான பேதங்கள் அவர் துதிக்கப்படுவதாலேயே நன்கு உணரப்படும்.

ஜோதிர்லிங்கன்கள் பன்னிரண்டு என்றும் அவற்றைத் தினந்தோறும் காலையும் மாலையும் நினைப்பவர் ஏழு பிறவிகளில் செய்த பாவங்களினின்றும் விடுபடுவர் என்றும் புராணங்களில் கூறப்படுகின்றது. அப்பன்னிரண்டு ஜோதிடர் லிங்கங்களில் வைத்தியநாதம் என்பதும் ஒன்று. அந்த வைத்தியநாதம் பாரததேசத்தில் எங்கு உள்ளது என்பது பற்றிப் பல அபிப்பிராயங்கள் உள்ளன.

சிவபுராணத்தில் வடநாட்டுப் பாடத்தில் "வைத்யநாதம் சிதா பூமௌ" என்று உள்ளது. ஆதலின் சிதா பூமியில் உள்ளது ஜேதிர்லிங்கம் என்பர் பலர். அங்குத் தென்னாட்டில் புள்ளிருக்கு வேளூரில் நடைபெறுவது போலவே குழந்தைகளுக்கு முடியிறக்கல் மாவிளக்குப்போடுதல் முதலிய பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன.

தென்னாட்டில் "பரல்யாம் வைத்தியநாதம்" என்று புராணபாடம் காணப்படுகிறது. ஹைதராபாத் மாநிலத்தில் உள்ள இந்தப் பரலி வைத்தியநாதம் ஜோதிர்லிங்க க்ஷேத்ரம் என்பர் சிலர்.

தும்கா ஜில்லாவில் வைத்யநாத் தாம் என்ற பிரசித்தி பெற்ற தீர்த்தம் உள்ளது. இத்தீர்த்தக் கரையில் உள்ளதே ஜோதிர் லிங்கம் என்பர் சிலர்.

அல்மோடாவிலிருந்து வடக்கே சிறிது தூரத்தில் ஒரு வைத்தியநாதம் கூறப்படுகிறது. இங்கு லிங்கம் சுயவம்புவாக இல்லாமையால் பெரும் பாலோர் இதை ஜோதிர்லிங்கமாக ஏற்கவில்லை. ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களில் பெரும்பாலும் இலிங்கத் திருமேனி சுயம்புவாகவே இருப்பதாலும், உருவில் சிறியதாகவே காணப்படுவதாலும் புள்ளிருக்கு வேளூரிலும் அவ்விதமே காணப்படுவதாலும் இதையே ஜோதிர்லிங்கம் எனலாம். சிதாபூமி என்பதற்கு ஞானபூமி என்றும் சிதையடுக்கிய இடம் (பிணங்களைக் கொளுத்த அடுக்கிய விறகுமேடை – சிதை) என்றும் பொருள் கூறுலாம். இராமாயணத்தில் கூறப்படும் சடாயு தகனம் இவ்வூரில் என்று வேளூர்த் தலபுராணம் கூறும். ஆகவே ராமன் சடாயுவைத் தகனம் செய்ய சிதையை இங்கு உண்டு பண்ணினமையால் இதைச் சிதாபூமி எனலாம். சித்ஞானம். மெய்யீற்றுப் பெண்பால் சொற்களை ஆகாரவீற்றுச் சொற்களாகக் கூறலாம் என்று பதஞ்சலி பாஷ்யத்தில் கூறுகிறார்.

"आपं चैव हलन्तानां यथा वाचा निशा दिशा"

திக்–திசா என்றும், வாக்–வாசா என்றும், நிட்–நிசா என்றும் கூறப்படுவனபோல சித்–சிதா எனப்படும். அறுபத்தொரு சர்க்கங்களைக் கொண்ட புள்ளிருக்கு வேளூர்ப் புராணத்தைப் படிப்பவர், இங்குப் பலர் ஞானம்பெற்று பரகதியடைந்தனர் என்பதையறிவர். ஆதலின் இதைச் சிதாபூமி எனக் கொண்டு இந்த வைத்தியநாதனை ஜோதிர்லிங்கத் திருமேனி யுடையவர் என்று நினைப்பதும் தவறாகாது. சிவராத்திரி நாளில் லிங்கோத்பவ வேலையில் சிறப்பாக வழிபடுதல் ஜோதிலிங்கத் தலங்களில் உண்டு. தென்னாட்டில் அடிக்கொரு சிவாலயம் இருப்பதால் இவ்வூரில் சிவராத்திரியில் சிறப்பான வழிபாடு நமக்குப் புலப்படவில்லை. மக்களின் கூட்டம் பல இடங்களில் இருப்பதால் வடநாட்டைப் போல் கூட்டம் தெரிவதில்லை.

முற்கூறிய எல்லா வைத்தியநாத க்ஷேத்திரங்களிலும் சுவாமிக்கு வைத்தியநாதன் என்று பெயர் இடுகுறியாகத்தான் காணப்படுகிறது. புள்ளிருக்கு வேளூரிலோ அது காரண இடுகுறியாக விளங்குகிறது என்பதை, இங்குக் கிருத்திகையில் சந்தனக் குழம்பையும் திருச்சாந்துருண்டையும் நேத்திரப் பிடியையும் உபயோகித்து கண்கூடாகப் பலனை அனுபவித்தவர் அறிவர்.

மேலும், மருத்துவத்துறையில் தந்வந்திரி மகரிஷிக்குத் தனியாக ஒரு சிறப்பிடம் உண்டு என்பதை யாவரும் அறிவர். அந்த தந்வந்திரி மகரிஷி சித்தியான இடத்திலேதான் செல்வ முத்துகுமாரசுவாமி இருப்பதாகவும், அந்த தந்வந்திரி முனிவரின் மருத்துகள் எல்லாம் சித்தாமிர்த தீர்த்தத்தில் போடப்பட்டதாகவும், அதன் காரணமாகவே சகல நோய்களையும் போக்கும் வல்லமை சித்தாமிர்த தீர்த்தத்திற்கு உண்டாயிற்று என்றும் கர்ணபரம்பரையான செய்தி வழங்கி வருகிறது.

மேலும் மருந்துகள் சில உட்கொள்ளப்பட்டு வியாதிகளை நீக்கும். சில பூசப்பட்டும், சில நுகரப்பட்டும், வேறுவகையாக உபயோகிக்கப்பட்டும் வியாதியை நீக்கும். மருந்துகள் வியாதியை நீக்குமேயன்றி ஆதியை நீக்கா. எங்கும் மருத்துவன் மருந்தாகான். மருத்துவன் வேறு மருந்து வேறு. இங்குப் புள்ளிருக்கு வேளூர் வைத்தியநாதனைத் "தீவினைக்கோர் மருந்தாவான்" என்று திருஞானசம்பந்த சுவாமிகளும் "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளவல்லான் தன்னை" என்று திரு நாவுக்கரசு சுவாமிகளும் தமிழ் மறையாம் தேவாரங்களில் மருந்தாகவே கூறுகின்றனர். குமரகுருபர சுவாமிகளும் "அருமருந்தாகி நின்ற ஆதிப்பிரான்" என்று கூறுகிறார். இந்த வைத்தியநாதனாகிய மருத்துவன் நினைத்தமாத்திரத்தில் வியாதி, ஆதி, பிறவிப் பிணிகளைப் போக்கும் மருந்தாம் மருத்துவனை வேதம் எவ்வாறு போற்றுகின்றது என்பதைக் காண்போம்.

வேதம் ரிக், யசுர், ஸாமம், அதர்வ என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நான்கு வேதங்களிலும் இந்தப் பெரிய வைத்தியர் புகழப்படுகிறார். வேதோப பிர்மஹணமான புராண இதிஹாஸங்களிலும் துதிக்கப்படுகிறார். ரிக்வேதம் இரண்டாம் மண்டலம் முப்பத்திமூன்றாவது சூக்தம் பதினைந்து ரிக்குகள் கொண்டது. இந்தப் பதினைந்து ரிக்குகளுமே பரமேச்வரனைச் சிறந்த ஒரு வைத்தியனாகக் கூறுகிறது.

उन्नो वीरामर्पय भेषजेभिर्भिषक्तमं त्वा भिषजां शृणोमि
(2-33-4)

எங்கள் புதல்வர்களை உம்முடைய ஔஷதங்களினால் பலப்படுத்தும். ஏனென்றால் வைத்யர்களுள் உம்மை நான் தலைசிறந்த வைத்யனாகக் கேள்விப்படுகிறேன். ( भिषक्तमं என்ற இடத்திலுள்ள तम என்ற விகுதி *Superlative degree* யைக் காட்டுகிறது).

क्व स्य ते रुद्र मृळयाकुर्हस्तो यो अस्ति भेषजो जलाषः
(2-33-7)

அவர் தம்முடைய குளிர்ந்த கையால் தொட்டாலே நோய்கள் எல்லாம் தீர்ந்து விடும்.

त्वा दत्तेभी रुद्र शंतमेभिः शतं हिमा अशीय भेषजेभिः
व्यस्मद् द्वेषो वितरं व्यंहो व्यमी वाश्चातय स्वा विषूचीः
(2-33-2)

அவர் கொடுக்கும் மருந்தால் நூறு ஆண்டுகள் சுகமாக வாழலாம். நன்மக்களைப் பெறலாம். சுரத்தையும் கிருமிகளால் உண்டாக்கும் நோய்களையும் பாவங்களையும் சத்துருக்களையும் போக்க ஆற்றலுண்டாம்.

மேலும் ஒருவனுக்கு வந்த வியாதியையும் பாவத்தையும் நீக்குவதைக்காட்டிலும் அவை வராமல் சத்துக்களையும் போக்க ஆற்றலுண்டாம்.

पर्षि णः पारमंहसः स्वस्ति विश्वा अभीती रपसो युयोधि

என்ற வாக்கியம் கூறும். (2-33-3)

शं न: शमसद् द्विपदे चतुष्पदे विश्वं पुष्टं ग्रामे
अस्मिन्ननातुरम् ( 1-141-1 )

எம்முடைய குடும்பத்தார்களும், எம்முடைய ஆடு, மாடு முதலியனவும், இக்கிராமத்திலுள்ள எல்லா உயிர்களும், நோய் வறுமை முதலிய துன்பப்பட்டு உழலாமல் இருப்பதன் பொருட்டுப் பரமசிவனைப் பூசிப்போம். (இந்த வாக்கியம் யசுர் வேதத்திலும் உள்ளது) கிருஷ்ண யசுர்வேதம் நான்காம் காண்டம் ஐந்தாம் பிரபாடகம் பதினொரு அனுவாகமுடையது. ஆயிரத்து இருநூற்றுமுப்பத்து நான்கு பதங்களை உடையது. ஸ்ரீருத்ரம் எனப்படும்.

किं जप्येनामृतत्वं ब्रूहीति स होवाच
याज्ञवल्क्य: शतरुद्रीयेण

(கைவல்யோபநிடதம்) எதை ஜபித்தால் முக்தியாம் ? யாக்ஞ்யவல்கியர் கூறினார் சத ருத்யத்தால் முக்தியாம் என்றும்,

य: शतरुद्रीयमधीते सोऽग्निपूतो भवति

சத ருத்ரீயத்தை ஓதுகிறவன் அக்னியால் புனிதனாகிறான் என்றும்,

यद्यदिच्छन् जपेत्तत्तदाप्नोति हि न संशय:

ஓதுகின்றவன் விரும்பும் பயன் யாவற்றையும் அளிக்கும் என்றும் रुद्रानावृत्य धर्मवित् ருத்திரத்தை ஓதி சகல தர்மமறிந்தவனாவன். சகல பிராயச்சித்தமும் அதுவே ஆகும் என்று அத்திரிரிஷி கூறுவதும்,

श्रीरुद्र रुद्र रुद्रेति यस्तं ब्रूयाद्विचक्षण: ।
कीर्तनात् सर्वदेवस्य सर्वपापै: प्रमुच्यते ॥

ருத்ர, ருத்ர என்று சொல்லுகிறவன் சர்வ பாவங்களினின்றும் விடுபடுகிறான் என்று உருத்திர இருதய உபநிடதத்தாலும் பலவகையாகப் புகழ்ந்து கூறப்படும் ஸ்ரீ ருத்ர பரமேச்சவரனுடைய பெருமையைக் கூறுவதுடன் அவனைப் பெரிய வைத்யனாகவும் கூறுகிறது.

अध्यवोचदधिवक्ता प्रथमो दैव्यो भिषक् ।
अहींश्च सर्वान् जम्भयन् सर्वाश्च यातुधान्य: ॥

எமக்கு இடையூறு விளைவிக்கின்ற பாம்பு புலி முதலிய பிராணிகளையும் அசுரர்களையும் கொன்று எங்கும் எம்மைச் சிறப்பித்துக்கூறி யாவருள்ளும் எம்மைச் சிறந்தவனாகச் செய்தருள்வானாக என்று கூறுவதுடன் தேவனாகிய முதல் வைத்யன் என்றும் கூறுகிறது.

சாமவேதத்தில். आग्नेयो राजा, तद्बो वर्ग. आज्य दोहानि, देवव्रतानि. चैषा रौद्री संहितैतां प्रयुञ्जन् रुद्रं प्रीणाति

இவை ரௌத்திர ஸம்ஹிதை என்றும், இவற்றை ஜபிப்பவன் பரமேச்வரனைத் திருப்தி செய்விக்கிறான் என்றும் கூறுகிறது.

यज्ञानां जपयज्ञोऽस्मि என்று கீதையில் கூறுவதால் ஜபம் செய்வதே பெரிய வேள்வியாகும். சாமவேதத்தில் ஸ்ரீ ருத்ரத்தில்,

नम: तरन्तेभ्यश्च स्तारिभ्यश्च

பவக்கடலைத் தாண்டுகிறவர்களுக்கும் மக்களைப் பவக்கடலின்றும் கரையேற்றுகின்றவர்களுக்கும் நமஸ்காரம் என்று கூறுமுகத்தால் பவக்கடலைத் தாண்டுவிக்கும் பெரிய வைத்யர் என்பது புலப்படும். அதர்வ வேதம் பதினொராம் காண்டம் இரண்டாவது சூக்தத்தில் முப்பத்தொரு ரிக்குகள் உள்ளன. அவையாவும் பரமேச்வரனைப் பெரிய வைத்யனாகக் கூறுகின்றன. மேலும்,

गुरवे सर्वलोकानां भिषजे भवरोगिणाम् ।
निधये सर्वविद्यानां दक्षिणामूर्तये नम: ॥

என்ற சுலோகம் பிறவிப்பணிக்குப் பெரும் வைத்யர் என்று கூறும். பரமேச்வரனுக்குரிய நாமங்களைக் கூறும் வாயு புராணம்,

शिवो महेश्वरश्चैव रुद्रो विष्णु: पितामह: ।
संसारवैद्य: सर्वज्ञ: परमात्मेति मुख्यत: ॥
नामाष्टकमिदं नित्यं शिवस्य प्रतिपादकम् । ( 28-22 )

ஸம்ஸார வைத்யன் என்ற பெயர் சிவனுக்கே உரியதாகக் கூறும். இவ் வைத்தியனைப் புகழும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபிப்பதே அந்தணரின் அறமான ஓதலாகும் என்று,

प्रणव: शतरुद्रीयं तथाथर्वशिर: शिखा ।
एतेषां तु जप: पुत्र स्वाध्याय इति कीर्तित:

என்ற வாக்கியம் கூறும். பால வைத்தியனாகிய செல்வமுத்துக்குமாரனை ரிக்வேதம் (அஷ்டகம் 2. அத்தியாயம் 7. வர்க்கம் 18) (அஷ்டகம் 3. அத்தியாயம்

5. வர்க்கம் 16.) அஷ்டகம் 3. அத்தியாயம் 8. வர்க்கம் 14. ஆகிய இம் மூன்று இடங்களிலுமுள்ள மந்திரங்களால் புகழ்ந்து கூறுவதும் காணத்தக்கது.

मा नो महान्त मुत मा नो अर्भकं मान उक्षन्तमुत मा न उक्षितम् । मा नो वधीः पितरं मोत मातरं प्रिया मा न स्तनुवो रुद्र रीरिषः ॥

ஏ பரமேச்வரா ! எம்முடைய பாட்டன், குழந்தை, கர்ப்பத்திலுள்ள சிசு, வாலிப பருவமுள்ளவர், தந்தை, தாய், மனைவி மக்கள் முதலிய யாவரையும் உடலையும் பிணி முதலியன பீடிக்காதவாறு அருள்வாயாக.

मानस्तोके तनये मान आयुषि मा नो गोषु मा नो
अश्वेषु रीरिषः ।
वीरान्मा नो रुद्र भामितो वधीर्हविष्मन्तो
नमसा विधेम ते ॥

ஏ பரமேச்வரா! எம்முடைய குழந்தை, பிள்ளை, உயிர், பசு, குதிரை ஏவலாளர் யாவரிடத்தும் துன்பம் செய்யாதே. நாங்கள் அவிசைக்கொண்டு உம்மை நமஸ்கரித்து வழிபடுகின்றோம்.

ஸ்ரீ ருத்ரத்திலுள்ள இம்மாதிரியான சில ரிக்குகளைக் கூறி பரமேச்வரனைப் பிரார்த்தித்து இஷ்ட சித்திகளைப் பொறுவோமாக !

வேதங்கள் நித்தியமாயுள்ளவையென்பர். அழியா உண்மையைக் கூறுவத பற்றியே அங்ஙனம் கூறப்படுகிறது, "மாறா மறை நான்காய்" என்று கூறுவதன் கருத்த இதுவேயாகும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி



உ
சிவமயம்

# நித்ய பூஜா கிரியா விளக்கம்

## இலங்கை இந்துமத குரு பீடாதிபதி
## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

நித்திய பூஜை, நித்தியம் என்றும், ஆகந்துக நித்தியம் என்றும் இருவகைப்படும்.

தினம் தினம் செய்யும் பூஜை. நித்யம் மாதந் தோறும் செய்யப்படும் விசேஷ பூஜையும், அட்டமி விஷு சங்கராந்தி, பிரதோஷம் அமாபூரணைகளில் செய்யும் பூஜைகளும் ஆகந்துக நித்தியம் என்ப.

இறைவனை மத்தியானத்தில் பஞ்சாஷர மந்திரத்தாலும், பிரதோஷ காலத்தில் வ்யோமவ்யாபி மந்திரத்தாலும், அர்த்த சாமத்தில் ஷடங்க மந்திரங்களாலும் மற்றைய காலங்களில் பஞ்சப்பிரம்ம மந்திரங்களாலும் பூஜிக்க வேண்டும், என்று காரணாகமம் கூறுகிறது.

அன்புடன் தனக்கு எதிர் முகமாக இருக்கச் செய்தல், ஆவாஹனம், பக்தியினால் குறிப்பிட்ட விடத்தில் நிலை நிறுத்துதல் ஸ்தாபனம் பிரபுவே. நான் தங்களுடைய உடையவன் என்று தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு காண்பிக்கும் முத்திரை சந்நிதானம். நான் செய்யும் கிரியை முடிவு பெறும் வரை வியாபகராக இருக்கச் செய்தல் சன்னிரோதனம் என்பனவாம் என்று சோமசம்புவில் கூறப்படுகிறது.

முத்திரையின் பிரயோஜனம் என்ன. இதை காரணாகமம்.

தேவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதாலும் அசுரர்களை விரட்டுவதாலும் முத்திரை எனப் பெயர் பெற்றது. அஷ்டத்திரிம்சத் கலாநியாசங்களால் நியசிக்கப்பட்டவுடன் நிஷ்கள மூர்த்தி சகள மூர்த்தியாக மாறி சர்வஜன அனுக்கிரராகின்றார்.

எவ்வாறு கட்டையிலுள்ள அக்கினி கடைந்ததும் வெளிப்படுகிறதோ அதுபோல் மந்திரப் பிரயோகத்தினால் பரமேச்வரன் சாந்நித்தியம் அடைகின்றார். ஆன்மாக்கள் எவ்வாறு சரீரத்தின் வழியாக போக்கு வரவை உடையரோ, அவ்வாறு சிவன் மந்திர சரீரத்தின் வழியாக போக்குவரவை உடையவர்.

இறைவனுக்கு பாத்தியம் – கால்களிலும், ஆசமனீயம் – முகத்திலும், அர்க்யம் – சிரசிலும் கொடுக்க வேண்டும் என்று அறிக.

ஸ்நாநாரம்பம் அதன் முடிவு – நைவேத்தியம் அதன் முடிவு. தூய தீப காலம். இந்த ஐந்து வேளைகளிலும் பாத்யம் ஆசமனீயம் கொடுக்க வேண்டும். பூசையின் ஆரம்பம் அபிஷேகத்தின் முடிவு. பூஜையின் முடிவு இக்காலங்களிலும் அர்க்கியமும் கொடுக்க வேண்டும் என்று சூக்ஷ்மாகம் கூறும்.

அஷ்டபுஷ்பம் சாத்துங்காலம் பற்றி கூறுமாறு காண்க. ஆவாஹனம், அர்க்கியம், ஸ்நானம், தூபம் சந்தனம் பூசுங்காலம் நைவேத்தியம் விசர் ஜனம் இக்காலங்களில் அஷ்டபுஷ்பம் சாத்த என்று சுப்பிரபேதம் கூறும்.

மணி நாத கிரமம். 1 அடி மோக்ஷத்தின் பொருட்டும் 2. அடி போகத்தின் பொருட்டும், 3. அடி சகல சித்தியின் பொருட்டும் தொனி எழுப்ப வேண்டும். புண்யாஹம் – தூபம் – நைவேத்தியம் பலி இவைகளில் இரண்டு நாதமும் தீபம் செய்யும் போது 1 நாதமும் – மற்றைத் தேவர்களுக்கு 3 நாதமும் ஒலிக்க வேண்டும்.

## தீபாராதனை செய்யும் முறை

தீபத்தின் மேல் புஷ்பத்தை வைத்து நிரீக்ஷணம் புரோக்ஷணம் செய்த பஞ்சப்பிரும்ஹத்தை நியசித்த திக்பந்தனம் அவ குண்டனம் செய்த திரிசூல முத்திரை காட்டி, மந்திரோச்சாரண பூர்வமாகத் தீபத்தை எடுத்து நேத்திரதோஷ நிவர்த்தியின் பொருட்டு நேத்திரத்தின் நேரில் தீபத்தையும் நாசிக்கு நேரில் தூபத்தைக் காண்பிக்க வேண்டும். தீபத்தின் சுவாலை அளவு வருமாறு காண்க. நான்கு அங்குல சுவாலை அதமம். தீபாராதனை செய்யவேண்டிய ஸ்தானமோவெனில், முகம் – கண் – நாசாக்ரம் கண்டம், மார்பு, கால்கள் இவ்விடங்களில் தனித்தனி பிரணவாகரமாய் இடது காலைச் சமமாகவும், வலதுகாலைக் கொஞ்சம் தூக்கியும் வைத்துக் கொண்டு மூன்று தடவைகள் பிணவாகிருதியாக சுற்ற வேண்டும். மூன்றும் முறையே பூமி, ஆகாயம், சுவர்க்கம் இவைகளைக் காக்கும்.

பூஜா ஹீனத்தினால் உண்டாகும். தோஷங்கள் பூஜை இல்லாவிடில் ரோகமும், புஷ்பமில்லாவிடின் குல நாசமும், சந்தணமில்லாவிடின் குஷ்டரோகமும், ஜலமில்லாவிடின் துக்கமும் தூபமில்லாவிடின் சுகத்தின் நாசமும், தீபமில்லாவிடில் பொருள் நட்டமும் நைவேத்தியமில்லாவிடில் துர்பிஷமும், மந்திரமில்லாவிடில் தரித்திரமும் உண்டாகும்.

லிங்கத்தின் சிரசில் ஒருபோதும் புஷ்பமில்லாமல் இருக்கக் கூடாது. || வில்வபத்திரத்தின் மூன்று தாளங்களும், சத்வ–ரஜஸ்–தமஸ் என்ற முக்குணம் மூன்று கண்மும் மூர்த்தி. ஆகவே வில்வத்தால் அர்ப்பணம் செய்தால் மூன்று ஜன்மத்தின் பாபத்தைப் போக்கும். || தூபதீப பலனை காரணாகம் தரும் விளக்கம் தூபம் பாபத்தைப் போக்கும். தீபம் அபமிருத்யுவை நாசம் செய்யும் கட தீபம் சாந்தியளிக்கும். நீராஜனம் மேன்மையான பலனளிக்கும். விபூதி மூவுலகிற்கும் ரக்ஷை, கண்ணாடி லோக விருத்தி. குடை ஆயுளைக் கொடுக்கும். சாமரை பாக்கியமளிக்கும். கொடி, விசிறி மங்களத்தைக் கொடுக்கும் என்று அறிக.

## பூஜையில் வாத்தியங்களுடைய பலன்

மத்தளம் சுகத்தைக் கொடுக்கும், தாளம் துக்கத்தைப் போக்கும், படஹம் பாபத்தை அகற்றும். பேரிவாத்யம் – புஷ்டியைக் கொடுக்கும். டக்கா வத்யம் – சந்தோஷமளிக்கும். காஹளீ வாத்யம் – சௌக்யம் தரும். சல்லரீ வாத்யம் இஷ்ட சித்தி தரும். கும்ப வாத்யம் – மோஷமளிக்கும். நாடீ சந்தாந(பிடில்) வாத்யம் கோடியாக பலன் – குழல் – புத்திர பௌத்திரர்களைத் தரும் வாய்கெத்து வாத்தியம், ஜயத்தைத் தரும். சங்க வாத்யம் – சத்ருக்களை நாசம் செய்யும். நர்த்தன வாத்யம் ஆயுளைக் கொடுக்கும். நர்த்தனம் தான்ய விருத்தியை உண்டுபண்ணும் என்று கூறும் || பூஜையின் பஞ்ச கிருத்தியங்கள். அபிஷேகம், சிருஷ்டி, கிருத்தியம், நைவேத்தியம் – ஸ்திதி கிருத்தியம், பலிபோடுதல் – சம்ஹார கிருத்தியம், தீபாராதனை திரோபவ கிருத்தியம், ஹோமம், அனுக்கிரக கிருத்தியம் ||

பூஜைக்கு முக்கியம், குருபாதம் மந்திரத்திற்கு முக்கியம் குருவார்த்தை, தியானத்திற்கு முக்கியம் குரு வடிவம், மோஷத்திற்கு முக்கியம் குருதயை.

இலங்கை இந்தமத குருபீடாதிபதி

*அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்.*



கலைஞர் பித்துக்குளி முருகதாஸ் அவர்களை வரவேற்பதற்காக கட்டுநாயக்கா விமானநிலையத்தில்



திரு. A.K.C. நடராஜன் அவர்களுடன்



சண்டிஹோமத்தில் இசை கலைஞர்கள் நாதஸ்வரம் வாசிக்கிறார்கள்.



ஆடிவேல் விழாவுக்காக இலங்கை வந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த நாதஸ்வர ரத்தினம் பத்தமடை ராஜா அவர்கள்



N.K. பத்மநாதன் நாதஸ்வரவித்துவான். 1970 ஆண்டு கலைநிகழ்ச்சி!





முன்னாள் அமைச்சர் குமாரசூரியர் அவர்களுடன்

சேதுராமன் பொன்னுசாமி அவர்களுடன் நாச்சிமார் கோவிலடி கணேசபிள்ளை அவர்களுடனும்

# மதுரை சங்கீத சூடாமணி T.N. சேஷ கோபாலனின் இசைக்கு இசைவாய் நிற்கும் இசைக்குழுவினர்.







வயலின் வித்துவான்
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

மிருதங்க வித்துவான்
நெய்வேலி திரு. நாராயணன் அவர்கள்.

சங்கீத வித்துவான்
கலைமாமணி T.N. சேஷ கோபாலன் அவர்கள்.



கௌரவ அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அவர்களுடன்



முன்னாள் இராணுவ அதிகாரி திரு. வனசிங்க அவர்களின் பூஜை



திரு காமினி திசநாயக்கா அவர்களுடன்



50 ஆண்டுகள் ஒரே ஆலயத்தில் பணிபுரிந்தார். இந்து கலாசார அமைச்சு பாராட்டு விழா.



அலோசியஸ் பவுண்டேசனால் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பாடசாலையைத் திறந்து வைப்பதற்காக மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள்வருகை தந்தபோது



மறைந்த ஜனாதிபதி திரு. பிரேமதாசா அவர்கள் கோயில் வழிபாடு செய்தபோது



பாடசாலைக்கான கட்டிடத்தின் அடிக்கல்லை திரு. பீற்றர் கெனமன் அவர்களிடம் எடுத்துக் கொடுத்தல் 17/2/1976

## கலை



பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் ஆசிரியர் குழுவுடன் 1981.




ராமகான சபாவில் மாருதம் என்னும் சஞ்சிகை வெளியீட்டு விழாவில்.



மாலைநேர வகுப்பு ஆரம்ப விழாவில் கலாநிதி பொன். விக்கினராசா அவர்களுடன்



அஸ்வமேத யாகத்தில் குதிரைக்கு பூசை



ஆதம நண்பரும் இளைப்பாறிய உயர்தர நிருவாக அதிகாரியுமான திரு. கணேசராஜா அவர்களுடன்



1974 ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தில்



திருமண வைபவத்தில் உயர் திரு. A.V.M. மெய்யப்ப செட்டியார் அவர்களுடன்



ஆலயத்தில் வைத்து ஐ. கைலாசநாத குருக்கள் அவர்களுக்கு பிரதிஷ்டா பூஷணம் பட்டமளித்தபோது. பிரதிஷ்டா பூஷணம் நயினை கைலாசநாதக் குருக்களுடனும், திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களுடனும்



ராமகான சபையில் ஆண்டு விழாவில் கலந்து உரையாடல்



பிரத்தியங்கரா ஹோமம் 1992ம் ஆண்டு நடைபெற்றது.



சிவபால யோகி அவர்கள் நடத்திய யாகத்தில் பங்குபற்றியது.



சண்முகர் திருக்கல்யாணத்தில் நயினை கைலாசநாதக் குருக்களுடன்



கைலாசநாத குருக்கள் கும்பாபிஷேக கிரியை ஆரம்ப பூசை



பிரத்தியங்கரா ஹோமத்தில் குருக்கள் பூசை செய்யும் காட்சி




அன்பளிப்பு

**மலாயன் டிரேடிங் கம்பனி**

14; குவாரி வீதி,

கொழும்பு - 12.

தொலைபேசி - 434213

மும்மையா முலகந்தந்த முதல்வந்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையா லுயிர்தந்தாய்க்குச் செயலென்னா லெளிய துண்டோ
அம்மையாய் அத்தனாய் அப்பனே அருளின் வாழ்வே
இம்மையே மறுமைதானு நல்கினை யிசையோடென்றாள்

- சுந்தரகாண்டம்.ள




# CEY. CAN TRAVALS SERVICES LTD.

**2nd Floor 113, Chatham Street,**

**Colombo - 1,**

பரமன் புகழ்பாடி புண்ணியம் சேர் பூசனை செய்
அந்தணன் தாள் பணிந்தேத்தும் ஐயாவை
கந்தமலர் தூவி காணிக்கை செலுத்தியாம்
கரம் கூப்பி வணங்கி கருத்தில் வைத்தோம்.

*"பேண நோற்றது மனைப்பிறவி பெண்மைபோல்*
*நாண நோற்றுயர்ந்த துநங்கை தோன்றலால்*
*மாண நோற்றீண்டிவளிருந்த வாறெலாம்*
*காண நோற்றில னவன் கமலக் கண்களால்"*

– சுந்தரகாண்டம்.




**Vasantha Jewellery (Pvt) Ltd.**

**For all your requirements of 22 Ct. Gold Jewellery.**

11/20, Gold Plaza, Sea Street, Colombo 11.

T'Phone: 430624

Fax: 449319



*அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார் கல்லால்*
*பிற ஆழி நீந்தல் அரிது.*

*அந்தணச் செம்மல் ஸ்ரீ சண்முகரத்தின சர்மாவின்*
*சதாபிஷேகம் சிறக்க வாழ்த்துகிறோம்.*

* * * * * * * * * * * * *

"அரக்கனேயாக வேறொரு ரமரனேயாக அன்றிக்
குரக்கினத் தலைவனே தானாகுக கொடுமையாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரானாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தானுயிரிதி னுதவியுண்டோ"

– சுந்தரகாண்டம்.


**World Link Communications.**

**Fax, Telex, I.DD/ Local Calls, Photo Copying, Copy Typing.**
**Open 24 Hours.**

**298, Galle Road, Wellawatte Colombo - 6.**
**Tel : 503576, 584939**
**Fax: 94-1-503575**
**Telex: 23456. GAYA CE.**

அலங்கலில்த் தோன்றும் பொய்ம்மையரவெனப் பூதமைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டாலவ ரென்பர் கைவிலேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவரர்.

– (சுந்தர காண்டம்)

# PREMIER ELECTRICALS

Electrical Contractors' Engineers & Dealers

No. 69/ 3,
Galle Road.
Dehiwala Tele : 724310

Res. Tele : 693922,
Pager Centre : 686686
Pager : 56968,

Undertakes Wiring of Houses and Factories, Rewinding of all Types of Electrical Appliances,Installation of all Types of Illuminating Devices and Insullation.

**வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ. சண்முகரத்தின ஐயா**
**அவர்களின் "சதாபிஷேக வைபவம்"**
**இனிது நிறைவேற எமது காணிக்கையை**
**செலுத்துகின்றோம்.**

"அரிய மஞ்சினோ டஞ்சன முதலியவை யதிகம்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலினொரு வரோடொருவரை யுலகில்
பிரிவெனுந் துயருருவு கொண்டாலன பிணியாள்"

*- சுந்தரகாண்டம்.*



# A.N. DHARMALINGAM

| | |
|---|---|
| **Mercantile Hardware Stores** | Proprietor |
| **Mercantile Engn - Tools (Pvt) Ltd.** | Managing Director |
| **Mercantile Export (Pvt) Ltd.** | Managing Director |
| **Mercantile Marketing (Pvt) Ltd.** | Managing Director |

"அரிது போகவோ விதிவலி கடத்த லென்றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும் வருமென்பதோர் துணிவால்
கருதி மாதிரமனைத்தையு மளக்கின்ற கண்ணாள்"

- சுந்தரகாண்டம்.




# KAMALSONS (PVT) LTD.

**(Importers, Distributors & Suppliers of Electrical, Electronic Goods & components)**

**Office & Showroom :**
No : 332 & 332/1, Galle Road
Colombo 3.
Sri Lanka.

Tel : 576873,
576874
Fax : 575641

ஆரம்தாழ் திரு மார்பற்கு அமைந்த தோர்
தாரம் தான் அலன் ஏனும் தயாவெனும்
ஈரந்தான் அகத்து இல்லை யென்றாலும் தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்

- சுந்தரகாண்டம்

# MARGO METALS

20-B Central Road,
Colombo - 12.
Sri Lanka.

Tel: 325088, 438447
331215
Fax: 94-1-435920

வாங்கினன் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண் மிசை யொத்தின தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போடு
தடங்கினள் உயிர்த்தனள் இதின்ன தெனலாமே !

- சுந்தரகாண்டம்.




# CROSS TRAVELS & TOURS (PVT) LIMITED

**2nd Floor 65-67, Hospital Street, Colombo - 1, Shri Lanka.**
**Tel: 435766/ 446846/ 432490**
**Fax: 432491 Telex: 23158 AIRCTS CABLE: "CROSS AIR"**
**380/57, Bullers Lane, Colombo - 7**
**Tel : 694816 / 697770**

"சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதையாண்டு
இருக்கின்றாள் தொழுதாள் என்னும் இன்னசொல்
அறத்தின் நாயகன் ஆர்அருள் இன்மையால்
மறக்குமாயினும் நீ மறவேல் ஐயா !"

— சுந்தரகாண்டம்



# UNITED GENERAL MOTORS
# AUTO EQUIPMENT CO.,

Importers & dealers in used & new commercial vehicles,
diesel engines & spares

*Office:*
251/16A, Sri Sangaraja Mawatha,
Colombo - 10,
Sri Lanka.

Phone: 440359-432082-20448
Res: 432084 Car: 444602
Fax: (941) 545648

"ஆவியந் துகில் புனைவ தொன்றன்றி வேறறியாள்
தாவியன்ன மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவுதெண் கடலமிழ்து கொண்டநங்க வேள் செய்த
ஓவியம் புகையுண்டதே யொக்கின்ற வுருவாள்"

- சுந்தரகாண்டம்.

# MODERN HARDWARE CENTRE

## General Hardware Merchants

43, Abdul Jabbar Mawatha Colombo 12.
Phone : 435468, 436537, 328614
Fax : 00941 431890.

"இத்துணைச் சிறியதோர் எண்ணில் யாக்கையை
தத்தினைக் கடல் அது தவத்தின் ஆயதோ
சித்தியின் இயன்றதோ செப்புவாய் என்றாள்
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினாள்"

\- சுந்தரகாண்டம்

# KALKI TRADE CENTRE

85, Old Moor Street,
Colombo - 12.

Phone: 438159, 342976

" காயத்தாற் பெரியர் வீரங்கணக்கில ருலகங்கல்லும்
ஆயத்தார் வரத்தின் றன்மை யளவற்ற ரறிதறேற்றாம்
மாயத்தார் நகர்க்கெங்கேனும் வரம்பு முண்டாமே மற்றோர்
தேயத்தார் தேயஞ்சேற றெருவிலோர் தெருவின் சேறல்"

(சுந்தரகாண்டம்)



# S. SOCKALINGAM

**PROPRIETOR**

**JANASRI**
**108, Third Cross Street,**
**Colombo 11.**
**Tel : 449838**

**ROYAL**
**95, Third Cross Street,**
**Colombo 11.**
**Tel : 24482**

சுருங்கிடை உன்ஒரு துணைவன் தூயதாள்
ஒருங்குடை உணர்வினோர் ஓய்வில் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனென் காலினால் என்றான்.

– சுந்தரகாண்டம்

# UNI-WALKERS LTD.

**Sole Agents for National/Panasonics**

*No. 73, W.A.D. Ramanayake Mawatha,*
*Colombo 2.*
*Tel: 422071 Fax: 440905*

மந்திரமும் தந்திரமும் மானானை மந்திரத்தால்
அர்ச்சிக்கும் அந்தணன் சண்முகரத்தின குருக்கள்
அடிபணிந்தோம்
தங்கள் சதாபிஷேகம் நமக்கெல்லாம்
வரப் பிரசாதமாக அமையட்டும்.

"விரிமழை குலங்கிழித் தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனள்
உருகிறத் தொருதனிக் கொண்டலூழியான்
இருநிறத் துற்றவெற் கியைந்து காந்தத்தை"

– சுந்தரகாண்டம்.

# DESIGN TEXTILE CENTRE

153, KEYZER STREET, COLOMBO - 11. SRI LANKA.

TEL: 323621, 325738.
FAX: 430604
TLX: 22904 DEETEX CE
CABLE: DESIGN TEX

“மேருவை நிறுத்தி வெளி செய்தது கொல் விண்ணோர்
ஊர்புகவமைத்த படிகால் கொலுலகேழும்
சோர்வில நிலைக்க நடுவிட்ட தொரு தூணோ
நீர்புகு கடற்கு வழியோவென நினைத்தான்”

(சுந்தரகாண்டம்)



Sivasri B. Shunmugaratna Sarma Guru
On His "Sathasbisheka" Ceremony
may god bless us to have
kurukkal Iya in our mist for years to come.

Well Wisher

ஆயிரம் பிறைகண்ட அந்தணச் செம்மல்
சண்முகரத்தின சர்மா ஐயாவை
தாள்பணிந்து மலர் தூவி காணிக்கை செலுத்தியாம்
கரம் கூப்பி வணங்கி இதயத்தில் வைத்தோம்.

*"மெய்த் திருப்பதமே வென்ற போதினும்*
*இத்திருத் துறந்தே கென்ற போதினும்*
*சித்திரத்தி னலர்ந்த செந்தாமரை*
*ஒத்திருந்த முகத்தினை யுன்னுவாள்"*

*- சுந்தரகாண்டம்.*




# Lanka Polythene Industry (Pvt) Ltd.

**Manufacturers of LDPE-HDPE - PP Films-Plain & Printed Bags**

**32-A, K. CYRIL C. PERERA MAWATHA, COLOMBO 13, SRI LANKA.**
**TELEX : 22078 MAWELICE**
**☎ 440326 - 440328 FAX : 440325**

"வீடினதன் றறன் யானும் வீகலேன்
தேடினன் கண்டனென் றேவீயேயெனா
ஆடினன் பாடினனாண்டு மீண்டும் பாய்ந்
தோடினனுலாவின னுவகைத் தேனுண்டான்"

– சுந்தரகாண்டம்.



# Leela Press (Pvt) Ltd.

182, Messenger Street, Colombo 12
Telephone: 325930, 334332

# Leela Hardware (Pvt) Ltd.

387, Old Moor Street, Colombo 12.
Telephone: 431753

# Leela Exports & Imports

**Manufacturers Exporters & Importers**
42, Bandaranayake Mawatha, Colombo - 12
Sri Lanka.

Telephone: 423399
440128

Fax: 94-1-423414 or 94-1-440950
Telex: 21583 Teleco CE

அருந்தும் மெல்லட காரிட அருந்து மென்றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான் கொண்ட நோய்க் கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்திடவு மாண்டெழாதாள்

- சுந்தரகாண்டம்.



# *Pyramid Air Services Ltd.*

**Consistory Building,**
**96 -1/4 Front Street,**
**Colombo - 11. Sri Lanka.**
**Tel : 449806 - 449154, 448719, 448104.**
**Fax : 448104**
**Cable : Airpyramid**

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

**செந்தண்மையுடைய சர்மா ஐயா அவர்களின் சதாபிஷேகம் காண வாரீர்.**

"மாசுண்ட மணியனாள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களுமென்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையா லறத்துக்கீ றுண்டோ"

– சுந்தரகாண்டம்



# OVERSEAS AUTOMOTIVE PVT. LTD.

No. 354, Sri Sangaraja Mawatha, Colombo - 10.
Phone: 422606, 431182, 335012. Direct : 338492
Fax: 438722, Cable: Motor Parts.

"பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே யான்மறுவிலா மனத்தே னென்னின்
ஊழி யோர் பகலா யோதும் யாண்டெலா முலக மேழும்
ஏழும் வீவுற்ற ஞான்று மின்றென யிருத்தி யென்றாள்

- சுந்தரகாண்டம்.

# S.S. MULTI MARKETING SERVICES

**53/ A, Waidya Road,**
**Dehiwala.**

வந்தெனைக் கரம்பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கு இருமாதரை
சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்

- சுந்தரகாண்டம்




உதயம்ஸ் උදයම්ස්

# Udayams

Whole Sale & Retail Dealers in Textiles
188, Main Street,
Colombo 11.
Tele: 325288.

ஆயிரம் பிறை கண்ட ஐயா அவர்கள்
இன்னும் பல்லாண்டு வாழ்ந்து
நமக்கு நல்வழி காட்ட வேண்டுமென்று
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**"சித்திரப் பத்தியிற் றேவர் சென்றனர்
இத்துணை தாழ்ந்தன முனியுமென்று தம்
முத்தினாரங்களு முடியின் மாலையும்
உத்தரீயங்களு மிரிய வோடுவார்"**

**(சுந்தரகாண்டம்)**

*Vahini Jewellery*

*For Genuine 22 Kt. Gold Jewellery of*
*Excellent Craftsmanship*

47, 1/3, 1ST, FLOOR, SEA STREET, COLOMBO - 11. PHONE 438019.

"ஆழநீர்க் கங்கையம்பி கடாவிய
ஏழை வேடனுக்கெம்பி நின்றம்பி நீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச் சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்"

– சுந்தரகாண்டம்

## துர்கா ஓயில் ஸ்டோர்ஸ்

225, சென்டரல் ரோட்
கொழும்பு – 12.

தொலைபேசி : 327301 , 341896.

---



*"பரித்த செல்வ மொழியப் படருநாள்
அருத்தி வேதியருக் கான்குல மீந்தவர்
கருத்தினாசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந் தழுஞ் செய்கையாள்"*

– சுந்தரகாண்டம்

## SRI DEVI CHEMICALS

WHOLESALE AND RETAIL DEALERS IN
CHEMICALS, BATIK DYES, VAT DYES & ACIDS ETC.

125, Bankshall Street,
Colombo - 11.
Sri Lanka.

Telex: 22463
A/B DEVIN CE
Fax: 432444

''பொன் கொண்டிழைத்து மணியைக்கொடு பொதிந்த
மின்கொண்டமைத்த வெயிலைக்கொடு சமைத்த
என் கொண்டியற்றிய வெனத் தெரிகிலாத
வன் கொண்டல் விட்டு மதிமுட்டுவன மாடம்

(சுந்தர காண்டம்)

# SATHA VIDEO

**PHOTO & VIDEOGRAPHERS**

# MURUGA TRADES

**IMPORTERS & EXPORTERS**

ORCHARD BUILDING, 7/6A, GALLE ROAD,
COLOMBO - 6. SRI LANKA.
TEL : 584191, 591812 FAX : 94-1-591812

'' பளிக்கு மாளிகைத் தலந்தொறு மிடந்தொறும் பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைகடோறும்
அளிக்குந் தேறலுண் டாடுநர் பாடுநராகிக்
களிக்கின் றாரலாற் கவல்கின்றா ரொருவரைக் காணேன்''

(சுந்தர காண்டம்)

**N. சாந்தி குமார்**

**56, MAYURA PLACE
COLOMBO 6.**

*எண்ணென்ப ஏனையெழுத்தென்ப*
*இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழு முயிர்க்கு*

*- குறளமுதம்*




## புத்தக வெளியீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்கள் அச்சுத் தேவைகளை நவீனஅதிகூடிய எழுத்து
உருவமைப்புக்களைக் கொண்ட கணனி முறையில் மும்மொழிகளிலும்
குறைந்த செலவில், விரைவான, நம்பிக்கையான
"ஓப்செற்" **(Off-set)** முறையில் செய்து பெற்றுக்கொள்ள

## வரையறுக்கப்பட்ட யுனி ஆட்ஸ் (தனியார்) நிறுவனம்

48 B , புளூமெண்டால் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி - 330195

# நன்றியுரை

*நித்யம் லோகா சமஸ்தா சுகினோ பவந்து*

என்மேல் பேரன்பு கொண்டு விநாயகப் பெருமானின் கிருபாகடாட்சத்தை முன்வைத்து இந்த சதாபிஷேகத்தை ஒழுங்கு செய்த பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தமிழ்நாடு முதலிய தேசங்களில் இருந்து இங்கு வந்து கலந்து கொண்ட ஆச்சாரியர்களுக்கும், பிரமுகர்களுக்கும் ஸ்ரீ செல்வவிநாயகர் அடியவர்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆசிகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*ஈசன் ஈசன் என்றென்னும் அரற்றுவன்*
*ஈசன் தான் என் மனதிற் பிரிவிலன்*
*ஈசன் தன்னையும் என்மனத்துட் கொண்டு*
*ஈசன் தன்னையும் யான் மறக்கிற்பனே*

என்பதே எனது சுபாவமாகவும் இலக்காகவும் இருந்து வந்துள்ளது. இறைத்தொண்டு புரிவதையே குறிக்கோளாகக் கொண்டவர்களுக்கு இத்தகைய விழாக்கள் அவசியமற்றவை என நான் கருதினாலும், விழாவை நடத்தி – தாங்களும் மகிழ்ந்து மற்றையோரையும் மகிழ வைக்கும் பேரன்பு மிக்கவர்களின் பண்பையும் ஆற்றலையும் விடா முயற்சியையும் நான் பெரிதும் மதிக்கின்றேன்.

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லியவண்ணம் செயல்*

என்பது திருக்குறள், ஒரு விடயத்தைச் செய்வோம் என்று தீர்மானிப்பது இலகுவான விடயம். ஆனால், அதனை நடத்தி வெற்றி காண்பது கஷ்டமானதாகும்.

* இந்த நிகழ்ச்சியிலே சமூகமளித்து என்பால் தாங்கள் கொண்ட அன்பையும் நட்புரிமையையும் தெரிவித்துக் கொண்ட உங்கள் அனைவருக்கும்

* பொருட்செலவையும் இங்கு தங்கும் காலத்தையும் பொருட்படுத்தாது விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு சிவாச்சாரியர்களுக்கும் ஏனைய பிரமுகர்களுக்கும்

* விழாவை மங்கலமாக்கி மங்கல வாத்திய நிகழ்ச்சியை வழங்கிய நாதஸ்வர & தவில் கலைஞர்களுக்கும்

* தமிழ் நாட்டில் எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கிடையிலும் இலங்கை வந்து, இந்த சதாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இசைக்கலைஞர் மதுரை சேஷகோபாலன் அவர்களுக்கும் அவரது குழுவினர்க்கும்

* விசேட மலரை கண்கவர் முறையில் தயாரித்து வழங்கிய திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களுக்கும்

* நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட்ட யூனி ஆர்ட்ஸ் அச்சகத்தாருக்கும்

* மலருக்கு விளம்பரங்களை வழங்கிய அன்பர்களுக்கும்

* விநாயகப் பெருமான் திருவருளாள் இந்த சதாபிஷேக விழா இனிது நிறைவேற பல்வேறு வழிகளில் இடைவிடாது பெருமுயற்சி செய்த அனைவருக்கும்,

*எனது மனப்பூர்வமான ஆசிகளையும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

இவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் திருவருள் பாலிப்பாராக.

*வாழ்க அந்தணர் வானவரானினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமும் துயர் தீர்கவே*

**நன்றி**

*" எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது*
*வேறொன்றறியேன் பராபரமே"*

**இங்ஙனம்**
**பா. சண்முகரத்தின சர்மா**
**ச.இராஜலக்ஷ்மி.**

"நையுறு சிந்தையன் நயன வாரியள்
தொய்யல்வெஞ் சுழியிடைச் சுழிக்கும் நெஞ்சினள்
ஐய நீ அளப்பரும் அளக்கர் நீந்தினை
எய்தியது எப்பரிசு இயம்புவாய் என்றாள்"

– சுந்தரகாண்டம்



# S.P.S. & COMPANY

Importers & Distributors of Motor Spares & Reconditioned
Diesel Engines for all Type of Motor Vehicles.

*Office:*
No. 271, Sri Sangaraja Mawatha
Colombo 10, Sri Lanka.
Telephone: 432231, 432517 (Direct)
Fax: 438761

*Sales Yard:*
No. 251/20,
Sri Sangaraja Mawatha,
Colombo 10,
Sri Lanka.

வாழி சானகி வாழியிராகவன்
வாழி நான்மறை வாழியந்தணர்
வாழி நல்லறமென்று
வாழ்த்தினான் ஊழி தோறும்
புதிதுறுங் கீர்த்தியான்

சுந்தரகாண்டம்.




HATTON NATIONAL BANK LTD.

Tele Phone : 695813


PRINTED BY: UNIE ARTS (PVT) LTD. 48 B, BLOEMENDHAL ROAD, COLOMBO - 13. TEL:330195